
# வளை ஓசை

## நாதம் -09

## 2019



பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளை ஓசை

நாதம் - 09

# 2019

வெளியீடு:
**பிரதேச கலாசாரப் பேரவை,**
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்:

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "வளைஓசை" (நாதம் 09) |
| நூல்வகை | : | ஆண்டிதழ் |
| முதற்பதிப்பு | : | கார்த்திகை ,2019. |
| தொகுப்பு | : | மலர்க்குழு,<br>பிரதேச கலாசாரப்பேரவை,<br>பிரதேசசெயலகம்,<br>கண்டாவளை. |
| பதிப்புரிமை | : | பிரதேச கலாசாரப்பேரவை,<br>பிரதேசசெயலகம்,<br>கண்டாவளை. |
| வெளியீட்டெண் | : | 13 |
| தாள்வகை | : | 70gs |
| பிரதிகள் | : | 150 |
| அட்டை வடிவமைப்பு | : | த.கிருஷ்ணகுமார் |
| அச்சுப்பதிப்பு | : | நிசாஆட்ஸ்,<br>புன்னைநீராவி.(விசுவமடு.) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-1989-

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவை

பண்பாடு வளம்பெற கரம் இணைப்போம்

பிரதேச செயலகம் கண்டாவளை.

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே.......


- தமிழ்த் தாய் வாழ்த்து ........ ix
- கலாசார பேரவைக் கீதம் ........ x
- மலர்க்குழு விபரம் ........ xi
- **ஆசிச் செய்திகள்:**

i. புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி. ... xiii
ii. தருமபுரம் புனித சவேரியார் ஆலய பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி. ........ xiv
iii. **வாழ்த்துச் செய்திகள்:**
i. அரசாங்க அதிபர் ........ xv
ii. செயலாளர் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம் ........ xvi
iii. மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி ........ xvii
iv. மேலதிக அரசாங்க அதிபரின் (காணி) வாழ்த்துச்செய்தி........ xviii
v. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி ........ xix
vi. நவநாத வளையோசை ........ xx
vii. வெளியீட்டுரை ........ xxi
viii. **ஆக்கங்கள்;**
9. கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் திருக்கோயில் வரலாறு ........ 01
10. நேரமுகாமைத்துவமும் வினைத்திறன் மிக்க அரச சேவையும்........ 06
11. வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆனையிறவு ........ 12
12. மனித நடவடிக்கையும் சுற்றுப்புறச் சூழலும் ........ 15
13. பத்து ரூபாவின் புலம்பல்........ 17
14. அச்சுறுத்தும் ஒலிகள் - பாதிப்பும் பாதுகாப்பும் அறிமுகக் குறிப்பு........ 18
15. கண்டாவளையின் இடப்பெயர் ஆய்வு........ 24
16. சிங்கி பிங்கியின் விளையாட்டு........ 30




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. இலங்கையின் வரவு செலவுத்திட்ட மறுபரிசீலனை ..... 32
18. கலைகள் ..... 36
19. புளியம் பொக்கணை ஒரு பழமை ..... 38
20. உயிர்களின் அன்பு ..... 43
21. தட்டுவன் கொட்டிக் கிராமம் ..... 45
22. வாழ்க்கை ..... 50
23. தன் கையே தனக்கு உதவி ..... 53
24. சைவத்தின் மகிமை ..... 58
25. இரணைமடு யாழ்ப்பாண குடிநீர் வினையோகத்திட்டமும் கேள்விக்குறியாகும் யாழ்ப்பாண,கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரம் ..... 62
26. நவநாதக் கவியோசை ..... 68
27. எந்தனதுள்ளம் ..... 69
28. தொல்லை பேசி ..... 70
29. பூமித்தாய் ..... 71
30. தெருவோர பிச்சைக்காரி ..... 73
31. தூது சொல் வெண்முகிலே ..... 74
32. மீண்டும் இரத்தம் ..... 75
33. ஆணவக் கேடு ..... 76
34. ஆறாத வடுக்கள் ..... 77
35. தாயே நீ வாழ்க ..... 78
36. ஒருமண்டை மொட்டையானது ..... 79
37. பட்டமரம் தளைக்குமா ..... 82
38. சுமைதாங்கிய பார்வதி ..... 85
39. முதுமையும் ஔடதமும் ஒரு கண்ணோட்டம் ..... 87
40. மூலிகையின் ராணியான துளசிச் செடியின் மகத்துவம் ..... 90
41. சித்தர்களும் அவ்வழி மருத்துவமும் ..... 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தை கெழிலொழுகும்
சீராரும் வதனமென திகழ் பரதக் கண்டமிதில்
தெற்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!

மீனாட்சி சுந்தரனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலாசார பேரவைக் கீதம்

**பல்லவி**

வளம் கொழிக்கும் கண்டா வளை வாழ்கவே - எம்
வாழ்வினில் வற்றாத ஊற்றாகவே - என்றும்

(வளம்)

**அனுபல்லவி**

உளம் களிக்கும் கூத்துக்கலை செழிக்கும் - எம்மை
உயர்த்தும் ஆலயந்தொறும் பொங்கலும் பூசையுமாய்

(வளம்)

**சரணங்கள்**

நெல் வயற் பசுமை நம் கண்களை நிறைக்கும்!
நெய்தலின் மீன்வளம் செல்வங்கள் கொழிக்கும்!
கல்வியை வளர்க்கின்ற கூடங்கள் எங்கும்!
கைத்தொழில் ஓங்கிடும் அற்புதம் எங்கும்!

(வளம்)

எளிமையும் நேர்மையும் அணியெனப் பூண்பார்
இறையடி தொழுவதில் பேரின்பம் காண்பார்!
உழுதுண்ணும் வாழ்க்கையின் மகத்துவம் உணர்வார்
ஓய்வறியார் எங்கள் உயிர்களில் வாழ்வார்!

(வளம்)

**"சோ.ப."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

**திரு.த.பிருந்தாகரன்,**
கலாசாரப்பேரவையின் தலைவரும்,
பிரதேசசெயலாளரும்,
கண்டாவளை.

**திரு.ம.பிரதீப்,**
உதவி பிரதேசசெயலாளர்,
கண்டாவளை.

**திரு.சி.குகதாசன்,**
கணக்காளர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

**திரு.பூ.ராஜ்வினோத்,**
உதவி திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

**திருமதி.து.தனுஷா**
கலாசாரபேரவையின் செயலாளரும்,
கலாசார உத்தியோகத்தரும்,
கண்டாவளை.

**திரு.இ.யசோதரன்,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசமானது பச்சைப்பசேலென்று இருக்கும் பசுமை நிறைந்த நெல்வயல்களாலும் பயன்தரும் மரங்களாலும் சூழப்பெற்ற நன்னீர்வளம் நிறைந்த எழில் மிகு பிரதேசமாகவும் கலைகலாசார பண்பாடுகளை தன்னகத்தே கொண்டு சிறப்பாக விளங்கும் பிரதேசமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்திலே மிகவும் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் பிரதேச செயலகமானது தமது சிறப்பான சேவையினை வழங்குவதோடு மட்டுமல்லாது எம் பண்பாட்டு விழுமியங்கள் சீரழியாது கலை கலாசார பண்பாடுகள் கலையாதிருக்க காலத்தின் தேவையறிந்து படைப்பாளிகளின் கலைப்படைப்புக்களுக்கு சிறந்ததொரு களம் அமைத்துக்கொடுத்து வருகின்றது. அச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக வளையோசை எனும் மலர் கலைச்சிறப்பம்சங்களை தாங்கி வருடா வருடம் வெளிவருகின்றது. இவ்வருடம் வளையோசை நாதம் 9 ஆக வெளிவரும் மலருக்கு ஆசி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

இவ்வருடம் மலர இருக்கும் வளையோசை மலரானது சிறப்பாக அமையவும் மலரினை வருடா வருடம் தொடர்செயற்பாடாக முன்னெடுத்துவரும் பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் சிறப்பான ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகளுக்கும் இவ்வாண்டு மலர்வெளியீடானது சிறப்பாக நடைபெறவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருளோடு கூடிய எனது நல்லாசிகளையும் நிறைவாக வழங்கி மகிழ்வடைகின்றேன்.

**"சாமஸ்ரீ தேசமானிய"**
**நாகநாத சிவ கலாநிதி**
**சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ் கந்தராஜக் குருக்கள்,**
**புளியம்பொக்கணை சந்தி**
**பெரியகுளம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கண்டாவளை பிரதேச செயலக கலாசார பேரவையால் வருடா வருடம் வெளியிடப்படும் "வளை ஓசை" இதழிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். எமது பிரதேசங்களில் உள்ள எத்தனையோ பல படைப்பியல்வாதிகளும், அவர்களின் படைப்புக்களும் உலகினரால் கண்டு கொள்ள முடியாத நிலையில், எம்மிடம் உள்ள வரையறுக்கப்பட்ட வளங்களை உச்சமாக பயன்படுத்தி அவற்றை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டிய தார்மீக கடமை எமக்கு உண்டு. ஏனெனில் இன்றைய நமது நிலை இதுதான்.

மாறிவரும் உலகில் ஆளுக்கொரு வேசம் போடுகிறான் மனிதன். நேரத்திற்கு ஒரு பேச்சுப் பேசி நிம்மதியாய் வாழலாம் என நினைத்து விடுகிறான். இப்படி நினைத்து நினைத்துதன்னையே தான் ஏமாற்றி அழிவின் பாதையில் போகிறான். என்பதை மறுத்துவிடுகிறான். பெற்றோர் வைத்த பெயர் கூட பிணம் என்று மாறிப் போகின்றது. விரும்பி அணிகின்ற துணியும் கூட கந்தலாக மாறிப்போகின்றது. பாடுபட்டு சேர்க்கின்ற சொத்துக்கள் கூட வாரிசு இடம் மாறிப் போகின்றது. ஓடி ஆடி உழைக்கின்ற உடம்புகூட உயிரில்லாமல் ஒரு நாள் கிடக்கும்.

இவ்வாறாக எல்லாமே மாறிப்போகின்றன. இந்த உலகில் எங்களிடம் இருப்பவற்றை அடுத்த தலைமுறையினருக்கு அறிய வைப்பதில் மிகப் பெரிய ஆற்றல் எழுத்துக்களுக்கு உண்டு. இப்பணியை சிறப்புறச் செய்யும் கலாசார பேரவையினருக்கு நன்றி கூறிக்கொண்டு "வளை ஓசை நாதம் 9" அனைவரினதும் உள்ளங்களையும் ஊடறுத்து அறியாமை போக்கி எவ்வேளையிலும் பிறருக்கு பயனளிக்கும் அறிவுப்பெட்டகமாக திகழ வாழ்த்தி ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் ஆசிக்கின்றேன்.

பங்குத்தந்தை
அருட்திரு அன்ரனி வின்சன் சில்வெஸ்ரர் தாஸ்
புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்,
தருமபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து வருடந்தோறும் வெளியீடு செய்து வரும் வளையோசை நாதம் 9 இதழுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேசமானது எழில் மிகு பிரதேசம் என்பதுடன் விவசாய நடவடிக்கைகளையும் தமது பிரதான ஜீவனோபாயமாகக்கொண்டு விளங்கும் உழைப்பால் உயர்ந்த மக்களையும் கொண்ட வளம் நிறைந்த பிரதேசமாகும். தமக்கே உரித்துடைய கலை கலாசார பாரம்பரியங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் பாதுகாத்தல் மற்றும் அவற்றினை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச்செல்லல் என்ற உயரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு களமாகவே வளையோசை நாதம் 9 எனும் ஆவண சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டு வருகின்றமை போற்றுதற்குரிய விடயமாகும்.

அந்த வகையில் தமது பிரதேசத்தில் வாழும் கலைஞர்களையும் படைப்பாளிகளையும் பண்பாட்டியலாளர்களையும் கௌரவித்து அவர்களுடைய ஆக்கங்களை ஆவணமாக பதிவிடும் முயற்சியை மேற்கொண்டுவரும் கண்டாவளை பிரதேச செயலர் மற்றும் கலாசாரப்பேரவையினரை பாராட்டு கூறுவதுடன் இம் மலர் சிறப்பாக வெளிவர வேண்டியும் பிரார்த்தித்து மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**மாவட்டசெயலாளர் / அரசாங்க அதிபர்.**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கண்டாவளை பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் பிரதேச மலரான "வளை ஓசை நாதம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலரானது கண்டாவளை பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகளைத் தாங்கி வெளிவருவதுடன் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

மக்களின் வாழ்வியல் அம்சங்கள் அவரவர்களின் பாரம்பரியங்களை தழுவியவை. புதிய தலைமுறையினருக்கு இவற்றை அறியவைப்பதுடன் அவற்றின் சிறப்புக்களையும் மகத்துவங்களையும் எடுத்துக் காட்டவேண்டிய சமூகப் பொறுப்பு இவ் சந்ததியினருடையது. எனவே ஒரு சமூகத்தின் நிலைப்பானது அதன் வாழ்க்கை முறைகளை அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதில் நிலைகொண்டுள்ளது. சிறந்த மனித பண்புடைய மனிதர்களை உருவாக்க வேண்டிய நிலைப்பாட்டை இன்றைய சமூக மாற்றங்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. வாசிப்பும் கலையார்வமும் மனிதர்களை மனித நேயப்பண்புடனும் பகுத்தறிவுடனும் செயற்பட உறுதுணையாய் அமையும். அந்தவகையில் ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் வரலாறு போன்றன காத்திரமானவை. பிரதேசத்திற்கான சிறப்புக்களும் அதன் விசேட அம்சங்களும் மறைந்திருக்கக்கூடும். அவற்றை வெளிப்படுத்தி அதனை பலரும் அறியச்செய்யும் முயற்சியாக இந்நூல்கள் அமையும் என நம்புகின்றேன்.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம் முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் என்பது பேருண்மையாகும். இம் மலரானது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச் செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இ.இளங்கோவன்**
**செயலாளர்,**
**கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.**
**வடமாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பண்டைத் தமிழர்களின் வாழ்வில் கலைகள் தொழிலை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அந்தவகையில் கடற்றொழில் மற்றும் கால்நடை விவசாயம் என்பவற்றில் ஈடுபட்டு வந்த மக்கள் தமது ஓய்வு நேரங்களிலும் தொழிலில் ஈடுபடுகின்றபோது ஆடிப்பாடி கூடிக்குலாவி ஒற்றுமையாக மகிழ்ச்சியாக வாழ்வதற்காக கிராமியக் கலைகளை பயன்படுத்தி வந்தனர். அத்துடன் நாடகங்கள், பொம்மலாட்டம், குறவன் குறத்தி நடனம்,கரகாட்டம் போன்ற கலைகள் ஊடாக நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்க வழக்கங்கள் போன்ற கருத்துக்களை மக்களுக்கு பரப்புவதற்குரிய ஊடகமாகவும் பயன்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறு பரப்பப்பட்டு வந்த பாரம்பரிய கலைகளையும் கலைப்படைப்புக்களையும் அழியவிடாது பாதுகாப்பதோடு அவற்றினை எதிர்கால சந்ததியினருக்கு மரபு புரளாது கையளிக்கின்ற வகையிலும் இலைமறை காயாக இருக்கின்ற கலைப்படைப்பாளிகளின் திறன்களை வெளிக் கொணரும் நோக்கிலும் பிரதேசசெயலகங்கள் தோறும் ஒவ்வொரு ஆண்டும் பண்பாட்டு விழாக்கள் நடாத்தப்படுவதுடன் அதனோடு இணைந்த வகையில் பண்பாட்டு மலர்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பிரதேசத்துக்கே உரித்தான பாரம்பரிய கலைகளையும் கலைநுட்பங்களையும் ஆவணப்படுத்தும் நோக்கிலும் எழுத்தாளர்களது சிந்தனைகளை பதிவு செய்கின்ற வகையிலும் பல்துறை ஆக்கங்களுடன் வெளிவருகின்ற வளைஓசை நாதம் 9 நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மலருக்கு இலக்கியப் படைப்புக்களை வழங்கியவர்களுக்கும் மலர்முழுமைபெற சேவையாற்றிய பிரதேச செயலர், மலர்க்குழுவினர் மற்றும் கலாசாரப் பேரவையினர் ஆகியோரது அற்பணிப்பான சேவைகளை பாராட்டி வாழ்த்துவதுடன் ஆண்டுதோறும் கலைப்பயணம் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

ஒரு இனத்தின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் இலக்கியங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. இனத்தின் மொழி, வரலாறு, பண்பாடு, கலாசாரம், பழக்கவழக்கங்களையும் அவற்றின் பெருமைகளையும், சிறப்புகளையும் எடுத்துக்காட்டுகின்றன. காலத்தின் கண்ணாடியாக விளங்குகின்ற இலக்கியங்களில் இடம்பெறுகின்ற கட்டுரைகள், கவிதைகள்,நாடகங்கள், கதைகள், ஓவியங்கள் போன்றவற்றின் ஊடாக வாழ்வியல் கூறுகளை படைப்பாளிகள் தமது அறிவுத்திறன்களாலும் கற்பனை நயத்தினாலும் எடுத்துக்கூறுவதன் மூலம் மக்கள் மனங்களில் சிந்தனைகளை விதைப்பதற்கும் அவற்றினை கட்டியெழுப்புவதற்கும் முக்கியமான ஊடகமாக இலக்கியங்கள் விளங்குகின்றன.

அந்த வகையில் கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து இலக்கிய படைப்பு பணியாக வருடந்தோறும் வளை ஓசை எனும் நூலினை வெளியிட்டு வருகின்றன. இவ் வருடம் பிரதேசத்தில் வாழ்கின்ற முதுபெரும் கலைஞர்களது கலைப்படைப்புக்களையும் தொடர்ந்து வளர்ந்து வருகின்ற இளம் எழுத்தாளர்களின் எழுத்தாற்றல் திறமைகளையும் பதிவு செய்யும் நோக்கில் நூலினை வெளியிடுகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

அப்பிரதேசத்தின் படைப்பிலக்கியவாதிகளின் பல்துறை ஆக்கங்களுடன் வெளிவருகின்ற "வளை ஓசை நாதம் 09" நூலுக்கு ஆக்கங்களை வழங்கியவர்களுக்கு, மலர் முழுமை பெற உழைத்த பிரதேச செயலர், மலர்க் குழுவினர் மற்றும் கலாசார பேரவையினர் ஆகியோரினது அர்ப்பணிப்பான சேவையினை பாராட்டி வாழ்த்துவதுடன் நாதம் ஆண்டு தோறும் ஒலிக்க, எல்லாம் வல்ல ஆண்டவனது அருள் ஆசி கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ந.திருலிங்கநாதன்**
**மேலதிக அரசாங்க அதிபர் (காணி)**
**மாவட்ட செயலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கண்டாவளைப்பிரதேசம் வயலும் வயல் சார்ந்த மருதநில பிரதேசமாகும். இப் பிரதேச கலாசாரப்பேரவையால் வருடம்தோறும் வெளியிடப்படும் வளையோசை நாதம் 9 இதழுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இப்பிரதேசத்தில் உள்ள கலையார்வலர்கள் மற்றும் கலைச்செயற்பாட்டாளர்களது அற்பணிப்பு மிகுந்த உழைப்பின் வெளிப்பாடாக அமைந்து நிற்பது வளைஓசையாகும். ஒவ்வொரு பிரதேச மலரும் புதிய புதிய இலக்கிய அறுவடைகளை ஏற்படுத்தி நிற்பதுமட்டுமல்ல புதிய படைப்பாளிகளையும் இனங்கண்டு கலையுலகிற்கு அறிமுகம் செய்கின்ற பாரியதொரு பணியினை நிறைவேற்றி நிற்கின்றது. கலை, இலக்கியம், பண்பாடு தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை ஆவணப்படுத்தி வருகின்ற செயற்பாடு போற்றுதற்குரியது. இச் செயற்பாடுகளுக்கு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது அனுசரணை வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

பல்வேறு விடயங்களை தாங்கி ஆவணங்களாக வெளிவருவது பாராட்டுக்குரியது. இம்மலரை வெளியிட உழைத்த பிரதேச செயலாளர், ஆய்வாளர்கள் மற்றும் கலாசாரப்பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி சுஜீவா சிவதாஸ்
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவநாத வளை ஓசை

கண்டாவளை பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வருடந்தோறும் வெளியிடும் வளை ஓசை நாதம் 09 எனும் நூல் இவ்வருடமும் ஒலிக்கும் இக்கணம் என் உள்ளம் ஆனந்தம் அடைகின்றது.

பண்டைய காலங்களில் கலை கலாசாரம் என்பது மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்து காணப்பட்டது. அக்கால வேலைக்களைப்பை போக்கவும், இன்ப துன்ப நிகழ்வை கழிக்கவும் மருத்துவ செயற்பாடுகளுக்காகவும், தொழில் விருத்தி செய்யவும் கலையை ஒரு உந்து சக்தியாகவும், வழக்கமாகவும் வைத்திருந்தனர். இதனை புராண, இதிகாச, வரலாற்று கதை அம்சங்களின் சான்றுகளைக் கொண்டு அறியலாம்.

சிறந்த கட்டுக்கோப்பான முன்மாதிரியான சமுதாயத்தை உருவாக்குவதற்கு கலாசாரம் இன்றியமையாதது. அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கலாசாரத்தின் பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தும் பல்வேறு ஆக்கங்களை தாங்கி இக் கலாசார விழா மலர் வெளிவருவது பாராட்டக்கூடிய விடயம். தம்மிடம் உள்ள திறமைகளை இலை மறை காய் போல வைத்திருக்காது வெளி உலகிற்கு வெளிப்படுத்தி பிறருக்கும் அதன் நன்மைகளை கிடைக்கக்கூடிய வகையில் சிறப்பான ஆக்கங்களை இம்மலருக்கு வழங்கியவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

நவ நாதமாக வெளிவரும் இந்நூல் தொடர்ந்து பல பரிமாணங்களில் ஒலிக்க வேண்டும் எனவும் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் எனவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

த.பிருந்தாகரன்
பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டு உரை

வடக்கு மாகாணத்தில் பெருத்த விவசாய பூமியாக விளங்குவது கிளிநொச்சி மாவட்டமாகும். கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசம் பரந்த வயல் வெளிகளையும் கடல் வளத்தையும் நன்னீர் வளத்தையும் அதனோடு நிறைந்த வன வளத்தையும் கொண்ட கலைகள் ஓங்கி விளங்கும் பூமியாகும். இவ்வாறன சிறப்புக்களைக் கொண்ட எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள் கலைஇலக்கிய ஆர்வலர்களினை மேம்படுத்தும் நோக்கோடு 2011 ஆண்டு முதல் எமது கலாசாரப் பேரவை வினைத்திறனுடன் செயற்படுகின்றது. கடந்த கால வெளியீடுகளின் தொடர்ச்சியாக வளையோசை நாதம் 9 ஓங்கி ஒலிக்கின்ற இவ் இனிய தருணம் மகிழ்வுக்குரியது.

பேரவையின் ஆரம்ப செயற்குழுவின் முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம் சார் வெளியீடு எனும் செயற்பாடு தற்போதும் தொடர்கின்றது. முறையே வளையோசை நாதம் 1,2,3,4,5,6,7,8, ஆகியவற்றை வருடம் தோறும் ஓங்கி ஒலிக்க செய்த கலாசாரப் பேரவை 2011 ஆம் ஆண்டில் கலை ஒளி விருது பெறும் "கலைஞர் விபரத்திரட்டு" என்ற நுலையும் 2014 ம் ஆண்டில் மண்வாசனை என்னும் சிறுகதைத் தொகுப்பை யும் 2015 ல் நினைவுகளின் நினைவோடு எனும் கவிதைத் தொகுப்பையும் 2017 ம் ஆண்டு மலர்ந்த சிந்தனை என்னும் இணைந்த சிந்தனைத்துளியினையும் கவினுறு கண்டாவளை எனும் ஆவணப்படத்தையும் பிரசவித்த இன்று 13வது வெளியீடாக வளையோசை நாதம் 9 இனை வெளியிடுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பேரவையின் வெளியீடுகள் இம்மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலைஞர்களினதும் இப்பிரதேசத்தில் சேவையாற்றி வருபவர்களினதும் படைப்புக்களாகவே அமைய வேண்டும் எனும் திண்ணிய எண்ணம் எமக்கு உண்டு. அவ்வெண்ணம் இந்நூலிலும் நிதர்சனமாகின்றது. இந் நூல் பிரதேசம் சார் கலை இலக்கியம், ஆன்மிகம், மரபுரிமைகள், பண்பாட்டு வாழ்வியல் அம்சங்கள் மற்றும் வரலாறு சார்ந்த விடயங்கள் உள்ளடங்கி உள்ளது. அவ்வகையில் எமது பிரதேசத்தின் படைப்பாளிகளுக்கு நல்ல களமாக வளையோசை திகழ்கின்றது என்பது எமது எண்ணம்.

கலாசார விழா மற்றும் வளையோசை இதழ் வெளியீட்டுக்கு வட மாகாணபண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் இவ்வாண்டும் குறிப்பிட்ட நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளது. மேலும் எமது கலைவளர்ச்சிக்கு என்றென்றும் ஒத்துழைப்பினை வழங்கி வருகின்ற எமது பிரதேசம் சார் பொது மக்களினதும் கலைஆர்வலர்களினதும் வர்த்தகரினதும் பொது அமைப்புக்களினதும் பங்களிப்புக்கள் என்றும் நெஞ்சில் நிறைந்திருக்கும். அம்மலர் வெளியீட்டுக்காக ஆசிச் செய்தி மற்றும் வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெரியோர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் நூலினை அழகுற அச்சிட்டு தந்த நிசா ஆட்ஸ் தனியார் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி புளியம்பொக்கணை
# நாகதம்பிரான் திருக்கோயில் வரலாறு

திரு. ம.வேலாயுதபிள்ளை
புளியம்பொக்கணை, கண்டாவளை.

இலங்கையிலுள்ள ஒவ்வொரு சைவ திருக்கோயில்களுக்கும் தனித்தனி வரலாறு உண்டு. இந்த வகையில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கும் ஒரு வரலாறு உள்ளது. இவ் வரலாறு தனித்துவமானதும் பாரம்பரியம் கொண்டதும் புதுமை நிறைந்ததுமாகும். வட இலங்கையில் வளம் மிக்க பிரதேசங்களில் கரைச்சிப்பிரதேசமும் ஒன்றாகும். இது கிளிநொச்சி மாவட்டத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தக் கரைச்சிப்பிரதேசத்தில்தான் புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல், கண்டாவளை, புதிய வட்டக்கச்சி, ஊரியான், பன்றிமோட்டை, புலிங்கதேவன் முறிப்பு, முரசுமோட்டை, தட்டுவன்கொட்டி, ஆனையிறவு, குஞ்சுப்பரந்தன் போன்ற தோம்பு உறுதிகளைக் கொண்ட பழமை மிகுந்த கிராமங்கள் உள்ளன.

இத்தனை கிராமங்களிலும் முதன்மை பெற்றது புளியம்பொக்கணையாகும். கரைச்சி பிரதேசத்தின் அடி நாதமும் இதுவேதான் இங்குதான் வரலாற்றுச் சிறப்புமிக்க நாகதம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் புளியம்பொக்கணையில் எவ்வாறு தோற்றம் பெற்றது என்று பார்ப்போம். நாகதம்பிரான் மான்மியம் புளியம்பொக்கணை தல புராணம் போன்ற நூல்களின் படி சுமார் 400, 450 ஆண்டுகள் பழமை கொண்டது இக் கோவில். இக் காலப்பகுதியில் புளியம்பொக்கணை கிராமத்தின் கிழக்குத்திசையிலுள்ள கொழுந்துப்புலவு என்ற சிற்றூரில் உடையவேள், சைவவேள், வனியவேள் என மூன்று பிரிவினர் வாழ்ந்து வந்தனர் என்றும் இவர்கள் முறையே கண்ணகை அம்மனையும், பிள்ளையாரையும், சிவனையும் வழிபட்டனர் என்றும் அறியப்படுகின்றது. இந்த மூன்று பிரிவினருக்கும் கலவெட்டித்திடல் புளியம்பொக்கணை கிராமத்திற்கும் இடையில் தோம்புவழி உரிமை இருந்தது என்றும் இதனால் கொழுந்துப்புலவில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தை தொடர்ந்து தாங்கள் வழிபட்டு வந்த தெய்வங்களுடன் வெளியேறி இங்குவந்து குடியேறியதாகவும் அறியமுடிகின்றது.

இதன்படி சிவனை வழங்கிய வனிய வேல் பகுதியினரின் வழித்தோன்றலான நீதி நாயகமுதலியார் கமலம் என்ற நங்கையைத் திருமணம் செய்து வாழ்ந்திடும் போதில் குழந்தைப்பாக்கியம் இல்லாமல் பெரும் துயர் கொண்டு சிவன் பார்வதியை வழிபட்டு பல தர்மகாரியங்கள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தின் பயனாக கமலம் அம்மையார் கர்ப்பமுற்று ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு ஆண் குழுந்தைகளைப் பெற்று மகிழ்ந்தனர். மூத்தவனுக்கு மாப்பாணமுதலி என்றும் மற்றவனுக்கு வனிய முதலி என்றும் தங்கள் மரபுவழி பெயர்களை வைத்து வளர்த்தனர். பின்பும் பெண் மகவு வேண்டி விரதம் இருந்தனர். இவ்வேளை கமலம் அம்மை பங்குனி மாதம் பௌர்ணமி கூடிய உத்தர நட்சத்திரத்தில் ஒரு பாம்புக் குழுந்தையையும் கூடவே பெண் குழுந்தையும் பெற்றெடுத்தார். ஆரம்பத்தில் பாம்பை பார்த்து அச்சம் கொண்டாலும் அதனுடைய செயல்களைச் கண்டு சந்தோஷமாக சேர்த்து பிள்ளையாகவே வளர்த்து வந்தனர். பாம்புக்குழந்தைக்கு தம்பிரான் என்றும் பெண்குழந்தைக்கு வள்ளி நாச்சி என்றும் பெயர் சூட்டி வளர்த்தனர். பிள்ளைகள் வளர்ந்திட கூடவே பாம்பும் வளர்ந்தது. பிள்ளைகள் திருமண வயதை எட்டிட அவர்கட்கு மணம் முடித்து வைத்து நீதி நாயகமுதலியார் தனது முதுமையைக் கருத்தில் கொண்டு நிலம் மற்றும் சொத்துக்களையும் மூன்று பிள்ளைகளுக்கும் பகிர்ந்து பத்திரம் எழுதினார்.

அச்சமையம் அங்கு வந்த சர்ப்பக்குழந்தையாகிய தம்பிரான் கோபம் கொண்டு படம் விரித்து ஆடி எழுத்தாணி ஏடு என்பவற்றை பல்லால் கடித்து துண்டாடி கோபத்தைக்காட்டியது. இதன் போது பெற்றோர் சர்ப்பக்குழந்தை தனக்கும் பங்கு கேட்பதை உணர்ந்து மீண்டும் சொத்துக்களை நான்காக பகிர்ந்து பத்திரம் எழுதி வைத்தனர். பாம்பு மகிழ்வாக தன் பங்கை தன் தங்கையின் பங்கோடு சேர்த்து விட்டது. நாட்கள் செல்ல பாம்புடன் அயலில் உள்ள பாம்புகளும் சேர்ந்து வந்து அங்கையே தங்கிவிட்டன. தம்பிரான் பாம்புபோல் அவையும் எதுவித தீங்குகளும் செய்யாமல் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் காலை வேளை வழமைபோல் கமலம் அம்மையார் முற்றம் கூட்டி குப்பைகளை குவித்துக்கொண்டிருந்த போது மற்றைய பாம்புகளுடன் கூடி குப்பைகளை உழக்கி தாயாரின் காலையும் வாயினால் சுற்றி தொந்தரவு செய்தது தம்பிரான். கமலம் அம்மையார் கோவித்து தொலைந்துபோ என்று விளக்குமாற்றினால் தட்ட கோவித்துக்கொண்டு தம்பிரான் பாம்புடன் எல்லாப் பாம்புகளும் வெளியேறி விட்டன.

காலை விழித்துக்கொண்ட நீதி நாயகமுதலியார் சர்ப்பங்களைக் காணாது மனைவியிடம் வினாவினார். அப்போது நடந்தவற்றைக்கூறிய மனைவியும் சேர்ந்து தேடி காணாமல் மூத்தவர்கள் மகள் உற்றார் உறவினர்களும் சேர்ந்து தேடியும் காணாமல் தந்தையார் கவலையுடன் சோர்ந்து அயர்ந்தார். அப்போது கனவில் தோன்றிய சிவபெருமான் புதூர் என்ற இடத்தில் பாம்புகள் இருப்பதையும் அங்கு உரியமுறைப்படி சென்று அழைத்து வந்து குறித்த அரச மரத்தடியில் வைத்து வழிபடும்படியும் சொல்லி மறைந்தார். அதன்படி அங்கு சென்று அழைத்துவந்து பால், பழம் வைத்து வழிபாடு ஆற்றி வந்தார்கள். சர்ப்பக்குழந்தையான தம்பிரான் கோவித்துக்கொண்டு சென்று மார்கழி மாதம் இறுதி நாள் தொடக்கம் திரும்பி வந்து தை மாதம் முதல் நாள் தைப்பொங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும் நாகதம்பிரான் கோயில் கதவு அடைக்கப்பட்டிருக்கும். அந்நாட்கள் ஒரு மாதமும் பூசை நடைபெறுவதில்லை. இதன் ஆரம்ப நாளை கதவடைப்பு என்று கூறுவர். அவரை தொடர்ந்து வழித்தோன்றல்கள் தொடர்ச்சியாக வழிபட்டுவருகின்றனர். இவ்வாறு வருடந்தோறும் பங்குனி மாதத்தில் கூடுகின்ற பௌர்ணமி உத்தர நட்சத்திரத்திற்கு எட்டு நாட்களிற்கு முன்னதாக ஆலயமும் ஆலயச்சூழலும் புனிதப்படுத்தப்பட்டு விளக்கு வைப்பு வைபவம் நடைபெறும். பூசைகள் நடந்து பக்தியோடு பூசகர் ஒருவர் ஓலையால் இளைக்கப்பட்ட பொட்டி ஒன்றினுள் உலோகத்தினால் ஆனா பாம்புப்படமும் வெள்ளி கட்டப்பட்ட பிரம்பு, விபூதி, சந்தணம் , வேளை நூல்கள் அவற்றுடன் வெளிப்பட்டு பிரம்பு கொண்டு போதல் என்ற முறையின்படி அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் பிரம்பு வண்டில் என்று சொல்லப்படும் வண்டிலில் அமர்ந்து புறப்படுவார். தொடர்ந்து மற்றைய வண்டில்களும் தொண்டர்களும் பறைமுளக்கமிட ஊர்கள் தோறும் அடியார்கள் கொடுக்கின்ற நேர்த்திப் பொருட்களையும் கையேற்றுச் செல்வார்கள். இவ்வாறு செல்கின்ற பூசகரும் மற்றையோரும் தங்கி நிற்பதற்கு ஒரு புனிதமான இடத்தை சென்றடைவார். அது மரபு வழியான இடமாக இருக்கும். அங்கே தங்கி கொண்டு சென்ற திருவுருவத்தை வைத்து பூசை செய்து அடியவர்கள் கொடுக்கின்ற நேர்த்திப்பொருட்களை பெற்றுக்கொள்வர். இவ்விடத்தை பண்டமரவடி என்று சொல்வர். இவ்வாறு தங்கி நின்று பொங்கல் தினத்திற்கு முன்பாக புறப்பட்டு கோயிலுக்கு வருவார்கள். வருகின்ற போது ஒரு முறை இலங்கையை ஒல்லாந்த தேசத்தவர் ஆண்டிருந்த வேளை அதிகாரி குதிரையிலே நாட்டை சுற்றிவந்து கொண்டிருந்தபோது இவர்களைக் கண்டுவிட்டனர். உடனே குதிரையில் இருந்து இறங்கிய அந்த அதிகாரி கோபம் கொண்டு பூசகரை அச்சுறுத்தினார்.

பூசகர் பயந்து எங்கள் குலதெய்வத்திற்கு பூசைசெய்ய எடுத்துச் செல்கின்றோம் இவற்றை என்றார். உங்கள் குலதெய்வம் யாது? இப்பவே காட்ட வேண்டும் என்று மிரட்டினார். அச்சம் கொண்ட பூசகர் பாம்புதான் எங்கள் குலதெய்வம் என்று கூறி தோய்ந்து பக்தியோடு அனுட்டானம் பண்ணி வழந்துபானை ஒன்றை எடுத்துக்கழுவி அதனை வெள்ளைத்துணி ஒன்றை முறுக்கி வைத்து தோத்திரங்கள் பாடி வேண்டிய போது ஐந்து தலை நாகம் வளந்தினுள் இருந்து வெளிப்பட்டு படம் விரித்து ஆடியது. உடனே அந்த ஒல்லாந்த அதிகாரி திடுக்குற்று கை கூப்பி வணங்கி நின்றான். பின்பு எந்த இடையூறும் இன்றி பூசகரையும் தொண்டர்களையும் அனுமதித்து சென்றார். இந்த இடமே மடுக்கரை என்று சொல்லப்படுகின்றது. இதன் பின்பு பொங்கல் அன்று அங்கு வந்த ஒல்லாந்த அதிகாரி பூசகரை அழைத்து ஒரு தொகை நிதியும் வெள்ளியிலாண பாம்புப் படமும் கொடுத்துச்சென்றான் என்பது வரலாறு. இந்த வரலாற்றின்படிஇன்று வரை பூசகரால் பக்குவமான முறையில் சேர்க்கப்பட்ட பால்பழம் தற்போது பெருவிருட்சமாக வளந்து நிற்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த அரச மரப்பொந்தில் பக்தியோடு நிவேதனமாக வைக்கப்படுவதையும் பங்குனி உத்தரப்பொங்கலுக்கு எட்டு நாள் முந்தி விளக்கு வைப்பதும் பிரம்பு கொடுப்பதும் நடைபெற்று கூடாரம் கட்டி அலங்காரத்தோடு மாட்டுகூண்டில் சகிதம் மீசாலை புத்தூர்சந்தி பொங்கலுக்கு மரவடி சென்று பூசை செய்து திரும்புவதும் பண்டைச்சாமன்கள் கொண்டுவருவதும் தவறாது நடைபெற்று வருகின்றது.

வரும் வழிகளில் எல்லாம் அடியவர்களின் நேர்த்திப்பொருட்களை அளிப்பதும் அவர்களுக்கு வேளை விபூதி வழங்குவதும் பக்திபூர்வமான நடைமுறையாகும். பொங்கல் அன்று வந்து சேருகின்ற பூசகர், தொண்டர்கள், பண்டவண்டில்கள் வண்டில்களில் வருகின்ற பூசைக்குரிய பண்டச்சாமன்கள் எல்லாவற்றையும் பாரம்பரிய முறைப்படி மேலாம்பூ என்கின்ற வெள்ளை பிடித்து பறை முழக்கத்துடன் சங்கு சல்லாரி சேமக்கலம் போன்ற வாத்தியங்கள் சகிதம் பிரதம பூசகர் மற்றும் தொண்டர்களுடன் சென்று எதிர்கொண்டு வரவேற்பர். இதை பண்டம் எதிர்கொள்ளுதல் என்பர். இந்த நாளில் பல்லாயிரம் அடியவர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்து தம்பிரானை தரிசித்து நேர்த்திகளை நிறைவு செய்து செல்வர். நேர்த்திப் பொருட்களில் அதிகளவானது கோழிகளே ஆகும். பின்னாளில் பரிபாலன சபையினர் நல்லமுறையில் ஏற்பாடு செய்து அரச அதிகாரிகளின் உதவியுடன் அடியவர்களின் சிரமத்தை போக்கி உதவுவர். தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை எட்டாம்மடை என்கின்ற வைரவர் மடை நடைபெறும். இந்த தம்பிரான் திருக்கோயில் மெல்ல வளர்ச்சிகண்டு புனருத்தான பேதைகள் கட்டுமானங்கள் நடைபெறும் போது தம்பிரானுக்கு மட்டும் மூலஸ்தானம் என்ற வாதப்பிரதி வாதங்கள் நடைபெற்றது. அப்போது அமரத்துவமடைந்த பரம்பரை பூசகர் நாகமுத்து வீரகத்தியப்பிள்ளை அவர்களின் விருப்பம் போல் நாகதம்பிரானுக்கும் சிவனுக்கும் தனித்தனி மூலாயம் வேண்டும் என்றபடி அமைந்துள்ளது. அத்துடன் தற்போது இரண்டு மூலாலயங்களுக்கு இராஜகோபுரம் அமைக்கப்பட்டு குட முழுக்கு விழாவை எதிர்நோக்கி வளர்ந்து நிற்கின்றது. மூன்று காலப்பூசைகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இன்னும் தம்பிரான் இந்து இளைஞர் மன்றம் வல்லிநாச்சன் அன்னதான சபை என இரண்டு நிர்வாக கட்டமைப்புக்களும் தர்மகர்த்தாவினர் உள்ளிட்ட பரிபாலன சபைக்கு கைகொடுத்து செயலாற்றி வருகின்றமை ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

திருகோயில் இல்லாத திருவி லூறும்
திரு பெண்ணி றணியாத திருவி லூரும்
பருக் கோடிப் பத்திமையாய் பாடா வூரும்
பாங்கி னொடு பலதனிகள் வில்லா வூரும்
விருப் போடு வெண்சங்கு மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அரும்போடு மலர்பறித்திட்டுண்ணார் வூரும்
அவையெலா முரல்ல அடவி காடே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரமுகாமைத்துவமும், வினைத்திறன் மிக்க அரச சேவையும்

கு. சிவலிங்கம்
நிர்வாக உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கண்டாவளை.

"நேரம்" என்பது ஒரு வரையறுக்கப்பட்ட பெறுமதியுடைய வளம் ஆதலால் அலுவலகத்தில் பணிபுரியும் ஒவ்வொருவரும், ஒவ்வொரு கிளைகளும் தமது கடமைகளை ஒழுங்காக மேற்கொள்வதற்கும் இறுதியாக நிறுவனம் தனது நோக்கத்தை அடைவதற்கும் நேரம் சரியாக முகாமை செய்யப்படுதல் அவசியமாகின்றது.

**ஒவ்வொருவரும் தமது நோக்கத்தை சிறப்பாக முகாமை செய்ய வேண்டுமெனில்**

- அதிகாலை 4.30 மணியளவில் நாளாந்த வாழ்க்கையை ஆரம்பித்தல்
- தினமும் அலுவலக நேரத்திற்கு முன்பு அலுவலகம் செல்லுதல்
- முதலில் கடினமான அவசரமான வேலைகளை மேற்கொண்ட பின்னர் இலகுவான வேலைகளை மேற்கொள்ளல்
- நாட்குறிப்பினை பயன்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் வேலைகளை திட்டமிட்டு அதன் படி கருமங்களை நிறைவேற்றுதல்.
- அலுவலகத்தில் தேவையற்ற உரையாடல்களை தவிர்த்தல்.
- அலுவலர்களை சந்திக்க வருபவர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி ஏற்படாதவாறு அவருடன் சம்மந்தப்பட்ட விடயங்களை மட்டும் கலந்துரையாடி நேரத்தை சிக்கனப்படுத்துதல்
- ஊழியர்கள் பொதுமக்கள் மற்றும் ஏனையவர்கள் உத்தியோக ரீதியாக சந்திப்பதற்கான நேரங்களை ஒதுக்கிக்கொள்வதன் மூலம் அலுவலக ஊழியர்களை தம் கடமைகளை சரிவர நிறைவேற்ற தடை இன்றி செயற்பட வைத்தல்.
- பலருடன் தொடர்புடைய வேலைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.
- உணவு அருந்துதல் உறக்கத்திற்கு செல்லுதல் போன்ற கடமைகளை தினமும் குறித்த நேரத்தில் மேற்கொள்ளல்.
- முக்கியமான கடினமான எந்தவொரு வேலையையும் பிற்போடுவதனை தவிர்த்துக்கொள்ளுதல்.
- தினமும் நித்திரைக்கு செல்ல முன் அன்றைய கடமைகளைப் பற்றி சிந்தித்து நேரம் விரயமாக்கப்பட்டிருப்பின் அதுபற்றி சிந்தித்து நிவர்த்தி செய்து கொள்ளுதல்.
- தமது கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் துறைசார்ந்த அறிவியல் நூல்களை வாசித்து தமது சுய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியை வளர்த்துக்கொள்ளுதல்.

போன்ற விடயங்களை வழக்கப்படுத்தி கொள்ளுதல் வேண்டும்.

வினைத்திறன் மிக்க அரச சேவை பற்றி ஒரு கணம் சிந்திப்போமாயின் மக்கள் வரிப்பணம் மூலம் திரட்டுகின்ற திரட்டு நிதியில் இருந்து சம்பளத்தைப் பெற்று மக்களுக்கு சேவையாற்றும் அரச சேவையாளராக நாங்கள் **மக்களின் வரிப் பணத்திலிருந்து,**

- பிறப்பில் இருந்து சுகாதார சேவையை பெற்றுக் கொண்டிருக்கின்றோம்.
- இலவசபாடநூல், சீருடை, மதிய உணவு உட்பட்ட இலவச கல்வியைப் பெற்று உயர்கல்விக்கு வந்துள்ளோம்.
- சேவைக்கான ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கின்றோம்.
- ஓய்வுபெற்ற பின்னும் நாமும் எம்மில் தங்கியிருப்போரும் ஓய்வூதியத்தையும் பெறுபவர்களாக இருப்போம்.

எனவே நம் வாழ்க்கையில் உயர்ந்த பட்சம் மக்களின் பணத்தை பயன்படுத்தும் நாம் அந்த மக்களுக்கு வினைத்திறன் மிக்க அரச சேவையை வழங்கவேண்டிய கடமைப்பாட்டிற்கு உட்பட்டவர்களாவோம். **வினைத்திறன் மிக்க அரச சேவை** என்பது வழங்களை சரிவரப்பயன்படுத்தி தனித்தும் ஒருமித்தும் செயற்பட்டு பாரபட்சமற்ற ஊழலற்ற நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து பொது மக்களுடன் நல்லுறவைப் பேணி மக்களின் தேவைகளை நியமங்களுக்கு அமைவாக சரியாகவும், துரிதமாகவும் நிறைவேற்றிக்கொடுத்தல் ஆகும்.

**இந்த வினைத்திறன் மிக்க அரச சேவையானது,**

- மக்களிடம் அலுவலர்கள் பற்றியும், அலுவலகம் பற்றியும் நல்ல மதிப்பீட்டை பெற்றுக்கொள்ள வைக்கும்.
- சமூகத்தின் பங்களிப்புடன் முன்னெடுக்க வேண்டிய பணிகளை இலகுவாக முன்னெடுக்க முடியும்.
- மன நிம்மதி நிறைந்த மகிழ்ச்சியான வாழ்வை நமக்கு பெற்றுத் தரும்.

இவற்றின் மூலம் இயல்பாகவே நாட்டில் நல்லாட்சியை நடைமுறைப்படுத்த வழிகாட்டும்.

சிறந்த பௌதீக சூழல் சிறந்த அலுவலக முகாமைத்துவம் சிறந்த அலுவலக முகாமைகள் அலுவலர்களுக்கு தேவையான பயிற்சியை வழங்குதல் என்பன வினைத்திறன் மிக்க அரச சேவைக்கு பங்களிப்பு செய்கின்ற முக்கிய விடயங்களாகும்.

சிறந்த பௌதீகச் சுற்றாடல் ஒன்றை உருவாக்குவதில் அலுவலகத்தின் அமைவிடம் அலுவலக வாளாகத்தின் வெளிப்புற சூழல் அலுவலக கட்டடத்தின் உள்ளக சூழல் ஆகிய காரணிகள் முக்கிய பங்களிப்பை செலுத்துகின்றன. பொருத்தமான இடத்தில் அமைக்கப்பட்ட அலுவலகத்தினைக் கொண்ட நிறுவனமே தமது பணியாளர்களது முழுத்திறனையும் பயன்படுத்தி வெற்றியடைவதோடு மக்களின் நல்ல அபிப்பிராயத்தையும் பெற்றுக்கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு அலுவலகத்தின் அமைவிடம் தொடர்பில் கவனம் செலுத்தும் போது** தேவையான சேவைகளையும் பௌதீக வழங்களையும் இலகுவாக கொண்டுவரக்கூடிய வகையிலும் பணியாளர்களும் பயனாளிகளும் மற்றும் அலுவலகத்துடன் தொடர்புபட்ட சகலரும் இலகுவாக அணுகக்கூடிய வகையில் தேவையான போக்குவரத்து வசதிகளும் ஆரோக்கியமான குடிநீர் வசதியும் அலுவலக உபகரண பயன்பாட்டிற்கு உகந்த வலுவுடைய மின்சார வசதியும் அலுவலகத்தின் சேவையை இலகுவாக நிறைவேற்றக்கூடிய தேவையுடன் தொடர்புடைய தபாலகம் வங்கி போன்ற நிறுவனங்களுக்கு அண்மையிலும் அமைவதோடு வேறு தூர இடங்களில் இருந்து வந்து தங்கிநின்று பணிபுரிபவர்கள் விடயத்தில் பிராந்திய வசதிகளான தங்குமிடம் பாடசாலை உணவகம் பிள்ளைகள் பராமரிப்பு பொழுதுபோக்கு அங்காடி வசதிகளும் சன நெருக்கடியற்ற தொழிற்சாலைகள் பட்டறைகள் அண்மையில் காணப்பாடாத சுகாதார ரீதியான பிரச்சனைகள் அமைதியான தூய்மையான சூழல் உள்ள இடமாக தெரிவு செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு அலுவலக கட்டடத்திற்கு வெளியே அலுவலக வளாகம் (அலுவலக வளவு) ஆனது பணியாளர் பயனாளிகளுக்கான தேவையான அளவு வாகனத்தரிப்பிடம் மலசல வசதிகளுடன் அலுவலக முற்றம் பசுமையான தாவரங்கள் பூமரங்களை நட்டு இயற்கை அழகு பேணக்கூடியதாகவும் பணியாளர் பயனாளிகளுக்குத் தேவையான குடிநீர் வசதிகளும் கொண்டதாக அமைய வேண்டும்.

ஒரு அலுவலக கட்டடத்தின் அமைப்பை தீர்மானிக்கும் போது அலுவலகத்தின் செயற்பாட்டிற்கு தளக்கோல அமைவும் அலுவலக உபகரணங்கள் தேவைக்கேற்றவாறு இடையூறு இன்றி பயன்படுத்தவும். அலுவலர்கள் பயனாளிகள் வசதியாக இருந்து சேவைகள் இடம்பெற ஏற்றவாறும் போதிய காற்றோட்டம் வெளிச்ச வசதிகளுடன் கட்டடமானது பொருத்தமான வர்ணப்பூச்சும் கொண்டதாக அலுவலக உள்ளகச்சூழலும் அமைய வேண்டும்.

அலுவலகத்திற்கு வரும் பயனாளிகள் தமது தேவைகளை நிறைவேற்றிச் செல்லவேண்டிய இடம், சந்திக்க வேண்டிய அலுவலர், சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள், சேவையை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய கால அட்டவணை பற்றி தெளிவாக அறிந்து கொள்ள பின்வருவன காட்சிப்படுத்தல் வேண்டும்.

- அலுவலக தளக்கோல வரைபடம்
- அலுவலக ஒழுங்கமைப்பு அட்டவணை
- சேவைபெறுநர் பட்டையம்
- குறிகாட்டி

இதில் **சேவைபெறுநர் பட்டையம்** பற்றி சிந்திக்கும் போது ஒரு நிறுவனத்தின் ஒவ்வொரு கிளையிலும் ஆற்றப்படும் கடமைகள் அவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் கடமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றிக்கொள்ள எடுக்கும் காலம் கடமைகளுக்கு பொறுப்பான அலுவலர்கள் பற்றிய விபரங்களை பயனாளிகள் இலகுவாக வாசித்துக்கொள்ளக்கூடிய வகையில் மொழிநடை பிரயோகத்துடன் வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படும். இந்த ஆவணத்தின் மூலம் மக்கள் தம் கருமங்களை நிறைவேற்றிக்கொள்வதில் தம்மால் பங்களிப்பு செலுத்த வேண்டிய விடயங்களையும் தமக்கு எவ்வாறான காலத்திற்குள் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என்ற விபரணத்தையும் அறிந்துகொள்ள வழிகாட்டுகின்றது.

ஒரு அலுவலகம் வினைத்திறன் மிக்க அரச சேவையை ஆற்ற தம்வசம் பின்வரும் ஆவணங்களை வைத்திருக்க வேண்டும்.

- கடமைப்பட்டியல்
- கோவைப்பதிவேடு
- உள்வரும் கடிதங்களின் பதிவேடு
- வெளிச்செல்லும் கடிதங்களின் பதிவேடு
- நடவடிக்கை எடுக்க வேண்டிய கடிதங்களோடு கோவை நினைவூட்டல் தினப்பதிவேடு
- வேலைப்படிமுறை
- உசாத்துணைக்கோவைகள்
- மாதாந்த அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பான கால அட்டவணை
- நாளாந்த வேலைப்பதிவேடு
- அலுவக ஒழுங்கமைத்தல் வரைபடம் (அட்டவணை)

ஒரு அலுவலர் தம்மை வினைத்திறன் மிக்க அரச சேவையாளராக மாற்றிக்கொள்ள,

- அலுவலகத்தின் நோக்கம் செயற்பாடுகள் கிளை ரீதியாக மேற்கொள்ளப்படும் கடமைகள் பற்றிய பூரண அறிவை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- அலுவலகத்தில் தனது நிலை தனது மேலதிகாரிகள் யார், கீழமைந்த உத்தியோகத்தர் யார், தமது கடமை தொடர்பில் யாருக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற தெளிவான விளக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- அலுவலக நடைமுறைகளை சரிவர பின்பற்றி கடமைகளை மேற்கொள்ளுதல்
- நேரமுகாமைத்துவத்தை கடைபிடிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.
- தமது கடமைக்குரிய சகல அடிப்படை ஆவணங்களை சரிவரப்பெற்று கடமையாற்றுதல் வேண்டும்.
- அலுவலகத்தில் "கூட்டிணைப்பு" பொறிமுறையை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்

ஒரு அலுவலரை வினைத்திறன் மிக்க அரச சேவையாளராக்குவதில் நிறுவனமானது

- ஒவ்வொரு அலுவலரும் தமது கடமையுடன் தொடர்புடையதான பூரண அறிவைப்பெற்றுக்கொள்வதற்கான தேவையான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.
- அலுவலரின் கடமைகளை நிறைவேற்ற தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணங்கள் காகிதாதிகள் உபகரணங்களை சரிவர வழங்குதல் வேண்டும்.

- அலுவலக நடைமுறைகளை சரிவர பின்பற்ற செய்தல் வேண்டும்.
- சேவை மனப்பான்மையற்றவராக இருந்தால் கண்டிப்பானதும் சரியானதுமான வழிகாட்டுதலை வழங்குதல் வேண்டும்.
- சேவை மனப்பான்மை உடையவராக இருந்தால் அவரது நல்ல செயற்பாடுகளை பாராட்டி ஊக்குவித்து மேலும் சிறப்பாக வழிகாட்ட செயற்பட வேண்டும்.

**ஒரு அலுவலகம் வினைத்திறன் மிக்க அலுவலகமாக செயற்படுகிறது என்ற மனப்பாங்கு பொது மக்களிடத்தில் உருவாக வேண்டுமெனில்,**

- பொதுமக்களை இன்முகம் கூறி வரவேற்றல்.
- அலுவலக வரவேற்பு கரும பீடத்தில் சிறந்த மொழித்தேர்ச்சி, தொடர்பாடல் திறன், அலுவலக வேலைகளில் முழுமையான அறிவும் கொண்ட பொதுசன தொடர்பு அலுவலரை நியமித்தல்.
- மக்களுக்கான சேவைகளை தாமதமின்றி வழங்குதல்.
- மக்களின் தேவைகள் நிறைவேற்ற முடியாதவிடத்து காரணங்களை தெளிவாக எடுத்துக் கூறுவதுடன் வேறு அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பின் அவற்றின் விபரங்களையும் தெளிவாக எடுத்துக்கூறுதல்.
- மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் வரை தரித்திருக்க தேவையான இருக்கை வசதிகள், தொலைக்காட்சி பார்க்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- பக்கச்சார்பின்றிய வெளிப்படைத் தன்மையான சேவை வழங்களை மேற்கொள்ளல்.
- சேவை பெறுநர் பட்டயத்தை காட்சிப்படுத்தி அதற்கு அமைவாக சேவை வழங்கப்படுவதனை மேற்கொள்ளுதல்.
- பொது மக்களுக்கான குடிநீர், மலசலகூடம் விசேட தேவைக்குட்பட்டோருக்கான பிரவேச வசதிகள் ஏற்பாடு செய்திருத்தல்.
- சேவைகள் தொடர்பான வேலைப்படிமுறைகள் பற்றிய விபரங்களை காட்சிப்படுத்தி தொங்கவிடுதல்.
- முறைப்பாட்டு பெட்டியொன்றினை வைத்து பொதுமக்களினால் முன்வைக்கப்படும் குறைபாடுகள், அலுவலக சேவை தொடர்பான ஆலோசனைகளையும் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- பொது மக்களின் நன்மதிப்பிற்குரியவாறு அலுவலகத்தையும், அலுவலக சூழலையும் சுத்தமாகவும், அழகாகவும் பேணி வருதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொது மக்களிடமிருந்து கடிதங்களுக்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல், உடனடி நடவடிக்கை எடுக்க முடியாதவற்றிற்கு கடிதம் கிடைத்தமை, நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற தற்காலிக பதிலை அனுப்புதல்.
- பொது மக்களிடமிருந்து அன்பளிப்புக்கள், கையூட்டுக்கள் பெறும் அலுவலர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**வினைத்திறன் மிக்க அரச சேவையை மக்களிற்கு வழங்குவதன் பொருட்டு நிறுவனத்தின் தலைவரானவர்,**

- அலுவலக முறைமை பற்றிப் பயிற்சியளித்தல்.
- அலுவலக முறைமைகளை நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்
- சேவை பெறுநர் பதிவேடு ஒன்றினைப் பேணி அதிலுள்ள விடயங்களைப் பரிசீலித்து அறிந்து கொள்ளர்
- அலுவலர்களின் ஆவணங்களை திடீரென பரிசீலித்து நிலைமைகளை கண்டறிதல்.
- அலுவலக நடைமுறைகள் வேலைகள் பற்றிய பணியாளர்களுடன் அடிக்கடி கலந்துரையாடி விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- பணியாளர்களை ஊக்குவித்தல்.

போன்ற விடயங்களில் தம் கவனத்தை செலுத்துதல் சிறப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று சிறப்புமிக்க ஆனையிறவு

ச.சந்திரன்
நிர்வாக கிராம அலுவலர்.

இலங்கையின் வட பகுதியில் முக்கியமாக விளங்குவதும், யாழ்ப்பாண குடாநாட்டையும், வன்னி பெரு நிலபரப்பையும், பூகோள ரீதியாக பிரிக்கும் நுழைவாயிலாகவும், அழகிய இயற்கை கடல் நீர் ஏரியையும் பரந்த வயல் வெளியையும், கடல்நீர் ஏரிக் ஊடாக யாழ் குடாநாட்டை ஊடறுத்து செல்லும் புகையிரத வழித்தடமும் உப்பு வயல்களும் நிறைந்த அழகிய வரலாற்றுதொன்மைவாய்ந்த ஒரு பிரதேசமே ''ஆனையிறவு''.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 'ஏ9' பெருந்தெருவின் கண்டி-யாழ்ப்பாணம் எனும் மா நகரங்களுக்கு செல்லும் வீதியின் 264கிலோ மீற்றர் எனும் மைய இடத்தில் அமைவு பெற்றுள்ளது ஆனையிறவு. இக்கிராமத்தின் எல்லைகளாக வடக்கில் கடல்நீரேரியும், கிழக்கில் பண்டைய வரலாற்று புகழ்மிக்க தட்டுவன்கொட்டி கிராமத்தையும், மேற்காக கமரிக்குடாவையும், தெற்காக உமையாள்புரம் கிராமத்தையும் கொண்டுள்ளது. இக்கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் 46வது கிராம அலுவலர் பிரிவாகவும், இதனுள் நாவற் கொட்டியான், உப்பளம், குறிஞ்சாத்தீவு, பெரியதீவு ஆகிய சிறிய கிராமங்களையும் கொண்டுள்ளது.

பண்டைய காலத்தில் வன்னியரசர்கள் யானைகளை ஐரோப்பியருடனான வணிகத்திற்காக யாழ்ப்பாணத்தின் ஆனைக்கோட்டைக்கு கொண்டு செல்லும் பிரதான கடவையாக இந்த இடம் திகழ்ந்தமையால் ஆனை+இறவு (யானை+கடவு) 'ஆனையிறவு' என வழங்கலாயிற்று, ஆங்கிலேயரால் இவ்விடம் "Elephant pass" என்றே வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 1850ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயர் 'பழைய கண்டி வீதி' ஊடாக செல்லும் போது தாம் தங்கி ஒய்வு எடுத்துச் செல்லும் இடமாக ஆனையிறவு வாடியடி விளங்கியது. இப்பகுதியை பண்டைய காலத்தில் காக்கையன் எனும் வன்னிச்சிற்றரசன் ஆண்டதாக வரலாறுகள் கூறுகின்றன என சிலர் குறிப்பிடுகின்றனர். அத்துடன் இக்கடல் நீரேரியை மையமாக கொண்டே சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயமும் அமைந்துள்ளது.

இலங்கைக்கு வருமானத்தைபெற்றுக் கொடுக்கும் இரண்டு வரலாற்று தொழிற்சாலைகள் இப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்றமை எமக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். ஆனையிறவு கடல்நீரேரியிலிருந்து கடல் நீரை பெற்று குளோரினையும், ஏனைய வேதியல் பொருட்களையும், பிரித்தெடுக்கும் பரந்தன் இரசாயன தொழிற்சாலையும், ஆனையிறவு உப்பளமுமே அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும்.

ஆனையிறவு உப்பளமானது ஆங்கிலேயரால் 1932ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் உப்பள வேலைகளுக்கு இங்கு வாழ்ந்த மக்கள் மட்டுமின்றி இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தொழிலாளர்களை வரவழைத்து வேலைகள் செய்தனர். 1970ம் ஆண்டு தொழிலாளர்கள் தங்கி வேலை செய்வதற்கு 'பெரிய தீவில்' தங்குமிடங்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் குடும்பமாக இவ் விடுதிகளில் வசித்தனர். அத்தோடு புத்தளம், உடப்புப் பகுதிகளிலிருந்து வந்த தொழிலாளர்களுக்கு என '100தங்கு வாடிகள்' தனியாக இருந்தன. ஆரம்பத்தில் ''உப்பு பகுதி'' என அரச துறையினராலும், பின் 1977இல் உப்புக் கூட்டுத்தாபனமாகவும், பின் 'வரையறுக்கப்பட்ட சோல்ட்லிமிடேட்'' ஆகவும் விளங்கியது. தற்போது மீளவும் உப்பள வயல்கள் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இங்கு வாழ்ந்த மக்களுக்கென பாடசாலை, புகையிரத நிலையம், தபாற்கந்தோர், பொருட்களை பண்டமாற்றம் செய்யும் பிரதான சந்தை, மற்றும் வாடி வீடு என்பனவும் முன்பு இருந்தன. இங்கு இருந்த பழைய தபாற்கந்தோரானது கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்கது என்பர்.

இக் கிராமத்தில் வாழ்ந்த மக்களின் சமூக பொருளாதார கலாசார விழுமியங்களை எடுத்து நோக்குவோமாயின் ஆரம்பத்தில் வன்னி அரசர்களின் கீழ் ஆட்சிக்குட்பட்ட இப்பகுதியில் தமிழர்கள் பூர்வீக குடிகளாக வாழ்ந்து இவர்கள் இந்து சமயத்தையும், அதனோடு இணைந்த கலை கலாசார சம்பிரதாயங்களையும் பின்பற்றி கண்ணகை தெய்வ வழிப்பாட்டையும் மேற்கொண்டதுடன் ஆனையிறவு 'பெரிய தீவு' பகுதியில் கண்ணகைக்கு கோயில் அமைத்து வழிபட்டதாகவும் கடல்நீர் ஏரி பெருக்கு காரணமாக இவ் கண்ணகை அம்மனை உமையாள்புரம் பகுதிக்கு கொண்டு சென்று கோயில் அமைத்து வழிப்பட்டதாகவும் முதியவர்களின் வரலாறுகள் கூறக்கிடைக்கின்றன. அதன் பின் அந்நியர் ஆக்கிரமிப்பை தொடர்ந்து சமய வழிபாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட கிறிஸ்தவ ஆலயமொன்று இன்று புனரமைப்பு பெற்று காணப்படுகின்றது.

வன்னி பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை பண்டமாற்று செய்யும் கேந்திர நிலையமாகவும், ஆனையிறவு விளங்குகின்றது. இங்கு வாழ்ந்த மக்களின் பெரும்பாலானோர் வியாபாரத்தையும், விவசாயத்தையும் மீன்பிடியையும் தொழிலாக கொண்டு இருந்தனர். அத்தோடு உப்பளத்தில் தொழில் வாய்ப்பையும் பெற்றிருந்தனர்.

பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் 1990ஆம் ஆண்டு ஆடி மாதம் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதுடன் தொழில்களும் கைவிடப்பட்டன. பின்2010ஆம்ஆண்டில் மீளவும் கிராமத்தை புனரமைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடன் முதற்கட்டமாக உப்பளம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு இன்று புகையிரத நிலையமும் புனரமைக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களின் நிதி பங்களிப்புடன் சுற்றுலாவரும் மாணவர்களுக்கென 'நட்புறவு சுற்றுலா விடுதியும்' அமைக்கப்பட்டு வருகின்றது. மக்கள் ஆர்வத்துடன் மீளவும் குடியேறி வருகின்றனர். இவர்களுக்குரிய அடிப்படைவசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருவதுடன் இவர்கள் விவசாயம் மீன்பிடி, வியாபாரம் போன்ற தொழில்களையும் செய்து வருகின்றனர்.

இன்று ஆனையிறவு இலங்கையின் பிரதானமான சுற்றுலா மையமாக விளங்குவதுடன் இங்கு இயற்கை கடல் நீரேரியையும், சுற்றுலா துறையினரால் பிரகடனப்படுத்தப்பட்டவாடி வீடு,உப்பு உற்பத்தி வயல்கள், இயற்கை காட்சிகள் நிறைந்த பிரதேசமாகவும், போர் நினைவு சின்னங்கள் அடங்கிய இடமாகவும், சுண்டிக்குள சரணாலய பறவைகளாக்க வரும் இடமாகவும், அனைவராலும் கவரப்படும் இடமாகவும் திகழ்வதால் எமது பிரதேசத்திற்கு பெரும் பெருமையாக உள்ளது.

என்றாலும் இப் பகுதியில் இயற்கையான கடல் நீர் கிராமத்திற்குள் ஊடறுத்து வருவதால் விவசாய நிலங்கள் உவராகும் ஏது நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு இயற்கை வளமான மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதால் இயற்கையின் புறச்சூழல் பாதிப்புறுகின்றது. இதனை தடுப்பதற்கும் கடல் நீர் உட்புகாதவாறு கடல் நீர் அணை அமைப்பதன் மூலமும் எதிர்காலத்தில் எமது பிரதேசத்தில் வளம் செழிக்கும் இடமாக ஆனையிறவும் திகழும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நடவடிக்கையும் சுற்றுப்புறச்சூழலும்

றோ.றோகான்
கலைஒளிர் கலா மன்றம் கட்டைக்காடு

"காலம் கரைபுரண்டு போட்டுது" அண்டைக்கு பேசிக்கொண்ட பேரம்பலத்தின் கதைக்கு அர்த்தம் புரியாது திகைத்ததுண்டு. ஆம் இன்று காலம் மாறித்தான் போயிட்டு பருவமழையில்லை வெயில் கொழுத்து கொழுத்து என்று கொழுத்துது மழை பெய்யவெண்டிய காலத்தில் வெயிலும் வெயில் காத்து அடிக்க வேண்டிய காலத்தில் மழையும் மாறி மாறி நடக்குது.

மாரிகாலம், கோடைகாலம், பனிக்காலம் என்று படித்துள்ளோம் அவை நிகழும் கால ஒழுங்குகளும் நன்கு தெரியும் பயிர் விதைக்கும் போகங்கள் பற்றியும் கற்றுத் தெரிந்துள்ளோம். ஆனால் இன்று நடப்பது என்ன--? எல்லாமே தலைகீழாக மாறி விட்டது. இதன் காரணம் யாது? மனித செயற்பாடுகள் ..... தங்கு தடையின்றி வரம்பு மீறி எல்லைகள் தாண்டி அதிகார வர்க்கம் தொட்டு எழுந்து நிற்கின்றது. இயற்கைச் சூழலை மிஞ்சி செயற்கைச் சூழல் தலைவிரித்து தாண்டவம் ஆடுகிறது. இயற்கையை புரட்டிப்போடுகிறது. மனித அடாவடியான நடவடிக்கைகள் இதன் விளைவே இன்று நடக்கின்ற இயற்கை அனர்த்த விளைவுகள்

மாலைதீவில் இரண்டாயிம் தீவுகள் உள்ளன அதனை லட்சத்தீவுகள் என்றும் அழைப்பதுண்டு வெப்ப தட்ப விளைவால் கடல் நீர்மட்டம் உயர்ந்து இன்று 200 தீவுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. அதிகரித்த வெப்பம் காரணமாக அந்தாட்டிக்காக்கண்டம் உருகுநிலையை அடைந்து பனிப்பாறைகள் சிதைந்து கடல் நீர் உயர்ந்து பல தீவுகள் நீரில் மூழ்கும் நிலைக்கு உள்ளாக்கியுள்ளன. இலங்கையின் வடக்கேயுள்ள பல தீவுகள் இன்று காணாமல் போகும் அபாய நிலையை எட்டியுள்ளன.

அபரிமிதமான இரசாயன பயன்பாடு, மிதமிஞ்சிய எரிபொருள் பாவனை, பொலித்தீன் செயற்பாடுகள், குளிரூட்டிகள், திட்டமிடப்படாத நகராக்கம், வகைதொகையின்றிய காடழிப்பு கட்டுக்கடங்காத காட்டுத்தீ, எண்ணற்ற கைத்தொழிற்சாலைகள் இவைகளின் அசுர வேக தாக்குதல் காரணமாக பூமியின் சமநிலை கோலமாற்றங்கள் உண்டாகி மழையும் வெப்பமும் மாறி மாறி மனிதனை வாட்டி வதைக்கின்றது. உணவின்மை நோய் பிணி வறுமை கலாசார பிறழ்வுகள் ஒட்டுமொத்த மனித குலத்தையும் அழிவின் விழிம்பிற்கு எடுத்துச் செல்கிறது. புதிய பிரச்சனைகளாக குப்பை மேடு சரிவு, கழிவுகள் தேக்கம் இலத்திரணியல் கழிவுகள், மனிதக்கழிவுகள், என்றெல்லாம் புதிய புதிய பிரச்சனைகள் தோன்றுகின்றன.

புளியடி, பாலையடி, பனையடி, ஆலடி, அரசடி, என்று அழைக்கப்பட்ட இடங்கள் மட்டுமே மிஞ்சியுள்ளது. ஆனால் பெயரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் மரங்களை காணோம் மின்சார இணைப்பு, வீட்டுத்திட்டம், வீதி அபிவிருத்தி, என்றெல்லாம் எம் பயன்தரு பூமித்தாயின் போர்வையான அரும் பெரும் மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு கட்டாந் தரைகளாய் எம் பிரதேசம் மாற்றப்பட்டுள்ளது. இதற்காக அபிவிருத்திக்கு தடையாய் இருப்பதில்லை பேண் தகு அபிவிருத்தியை பேணுவதே சிறப்பானதாகும்.

ஓ! எனதருமை உறவுகளே எம் தீ எரிந்து நிலத்திலே பல நெருப்பாறுகளை நீந்திக் கடந்தவர்கள் நாம் யாரோ அனுபவிக்க யாரோ சாகும் நிலைதான் உலகில் உருவாகியுள்ளது. ஓர் மரம் நடுவோம் எமக்கு எதிர்கால சந்ததிக்கும் அவை உரமாக அமையும். இனிவரும் காலங்களில் மிகவும் அபாயகரமானவையாக இருக்கப் போகின்றன. காசுக்குத் தண்ணி காற்றும் விலைக்கு விற்கப்படும் நாட்கள் விரல் விட்டு எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே மனிதா மனுக்குலம் மீட்சிபெற மனித நடவடிக்கையை குறையடா "இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்" இது சுனாமி மூலம் நீ கற்றுக் கொண்ட பாடமாய் அமையட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து ரூபாயின் புலம்பல்

பா.கேசவன்
கண்டாவளை மகா வித்தியாலயம்.

மாடி வீட்டுக் கோடியில் குப்பைக்குள் கிடந்த 10 ரூபாயின் சோகக்கதையைச் சொன்னது இப்படி. நீங்களும் ஒரு முறை கேட்டுப்பாருங்களேன்.

செல்வச்சீமான்களின் செல்லப் பிள்ளையாய் பணப்பெட்டியில் படுத்து உறங்கியவன் நான் வட்டிக்குச் சென்று வாரி உழைத்தவன் நான். ஏழைகளின் கைகளில் ஒரு காலத்தில் எட்டாக்கனி நான். இப்போது பிச்சைக்காரனின் கைகளில் போகக்கூட பெறுமதியற்றவனாக ஆகி விட்டேன். அத்தை மகளுக்கு ஆசையுடன் ஒரு பவுண் வாங்க பத்து ரூபா என்னைக் கொடுத்தால் போதும். இதனால் எனக்கு பவுண் என்றும் பெயருண்டு என் உறவுகளில் எனக்கு மட்டும்தான் இந்த மதிப்பான பெயருண்டு. பெத்தாச்சியின் செத்தவீட்டுச் செலவில் பாதிச் செலவை என்னால் பார்க்க முடிந்தது ஒரு காலத்தில் ஒரு சிலரது கையில் கிடைத்துவிட்டால் இந்த வானில் பறந்து மகிழ்ந்த காலம் ஒன்று இருந்தது. ஏர் பிடித்து உழுத வயல்கள் எல்லாம் இயந்திரங்கள் உழுதபோது ஒரு கலன் டீசல் விலை பத்து ரூபாய்தான். நாகரிகம் விரும்பும் நங்கையரும் ஆடவரும் காலுக்கு பாட்டாவின் உத்தரவாத விலையின் சொந்தக்காரன் நான். நங்கையர் மேனியை நளினமாய் தழுவும் நைற் அன் டே, றெக்சோனா, லக்ஸ் சவர்க்காரமும் ஒரு காலத்தில் 10 ரூபாய் வித்ததுண்டு. கல்லோயா சாரயமும் பத்து ரூபாய் கொடுத்து போத்தில் ஒன்று வாங்கி பருகி மகிழ்ந்தவர்கள் பாரினிலே பலருண்டு. கல்யாணச் சந்தையிலே மாப்பிளைக்கு மல்லு வேட்டிச் சால்வையும் மணிப்புரிக் கூறையும் பத்து ரூபாய் கொடுத்து வாங்கி பல கல்யாணங்கள் நடந்தேறிய காலமொன்று உண்டு. எனக்கென்ன கவலை? இப்போது என்ன கவலை என்றால் பண வீக்கம் போற போக்கை பார்க்கையிலே அண்ணன் ஆயிரம் ரூபாய்க்கும் இந்த நிலை வருவதற்கு அதிக காலம் செல்லாது. அதனால்தான் சொல்கின்றேன் டொலரின் பெறுமதியை குறைக்க எல்லோரும் முயலுங்கள் ஏற்ற வழி ஒன்று காணுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தும் ஒலிகள் பாதிப்பும் பாதுகாப்பும் அறிமுகக் குறிப்புக்கள்

திரு.சே.ஆறுமுகம் கல்விமாணி

இன்று சூழல் மாசடைதல், அதன் பாதிப்புக்கள், அதனைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக அதிகம் பேசப்படுகின்றன. உலகின் கவனம் குவியும் பேச்சு பொருட்களில் ஒன்றாகவும் இது மாறியுள்ளது. எனினும் அதிக ஒலிகள், இரைச்சலால் சூழல் எவ்வாறு பாதிப்படைகிறது? அது மனிதனில் எவ்வாறான பாதகமான விளைவுகளை ஏற்படுத்த வல்லது என்பது பற்றிய அறிவு எம்மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகின்றது என்று கூற முடியாது. இலங்கை அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற வகையில் அதிக ஒலிகளினால் ஏற்படப்போகும் தீயவிளைவுகளை கட்டுப்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல் எதிர்கால சந்ததியினரை அதன் பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்க துணைபுரியும்.

சூழலை மாசுபடுத்தும் அதிக ஒலிகள் இயற்கையாகவும் செயற்கையாகவும் வெளிவிடப்படுகின்றன. இடியோடு கூடிய புயல் காற்று, சூறாவளி, நிலநடுக்கம், எரிமலை இரைச்சல், பனிப்புல் இரைச்சல் என்பன அதிக ஒலிகளை வெளியிட்டு சூழலை மாசடையச் செய்யும் செயற்கை காரணிகளாகும். மனிதனால் இயற்கையை கட்டுப்படுத்த முடியாவிட்டாலும் செயற்கையை மனிதனால் கட்டுப்படுத்த முடியும். கட்டுப்படுத்தியே ஆக வேண்டும்.

மனிதனின் காது, மூளை என்பவற்றை பாதிக்கும் ஒலிகளை அதிக ஒலிகள் என கருதப்படுகின்றன. மனிதனின் செவியானது அதிகபட்ச 120 டெசிபல் அளவிற்குட்பட்டதையே தாங்கவல்லது. அதற்கு மேற்பட்ட ஒலிகள் மனிதனுக்கு ஊறு விளைவிப்பனவாகும். சாதாரணமாக 10 தொடக்கம் 15 டெசிபல்தான் நாம் அருகில் இருக்கும் போது பேசிக்கொள்ளும் ஒலி அளவு தனியறையில் பேசிக்கொள்ளும் போது 20 டெசிபல் ஆகவும் சிலர் பேசிக்கொள்ளும் அறையில் 40 டெசிபல் ஆகவும் அலுவலக சத்தத்தின் ஊடே 60 டெசிபல் ஒலி அளவாகவும் காணப்படுகின்றது. இதனை நாம் வழக்கத்திலேற்றுக் கொள்ளமுடியும் இதனைக் கருத்தில் கொண்டே பிரிட்டனில் தொழிற்சாலையின் ஒலி அளவு 90டெசிபல் என வரையறுக்கப்பட்டுள்ளன. ஏனைய கைத்தொழில் வள நாடுகளில் 85 டெசிபல் ஆகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ன. அதனை 70 டெசிபலாக குறைத்து விட இந்நாடுகள் முனைப்பு காட்டி வருவதையும் கவனிக்க வேண்டும். இப்போது ஒலி பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர்கள் 90 டெசிபலுக்கு மேலான எந்த ஒலியும் மனிதனை பாதிக்கிறது என்கின்றனர். பாண்ட் வாத்தியக் கருவிகளில் ஒன்றான Base Dram ஒலிக்கும் ஒலி அளவு 90 டெசிபல் ஆகும். எனவே பேஸ்ட் டிரம்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலியை விட அதிகமான ஒலி மனிதனை பாதிக்கும் என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

அதிகமான ஒலிகள் மனிதனின் உடல் உள ஆரோக்கியத்தை எவ்விதம் பாதிக்கின்றன என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

அதிகமான ஒலிகள் மனிதனின் உடல் உள ஆரோக்கியத்தை எவ்விதம் பாதிக்கின்றன. என்பது பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகளை வெளியிட்டனர். விமான நிலையங்களுக்கு அருகில் வாழ்பவர்கள் விமானங்களின் அதிக ஒலிகளின் தாக்கத்தால் மன நோயாளியாக பலர் மாறியுள்ளனர் என்றும் "ராக்" இசை அடிமைகளுக்கு காது கேளா நிலை ஏற்படுகின்றது என்றும் இரைச்சல் மிகுந்த இயந்திரங்களின் இடையே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு செவிடாகும் நிலையும் மன நோயும் ஏற்படுவதாக படிப்புக்கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. அதிக ஒலிகள் இருவகையான தொல்லைகளைத் தருகின்றன. அதிக இரைச்சலால் திடீரென செவிடாதலும் ஒன்றாகும். குறைவான ஒலியை உடைய ஆனால் தொடர்ந்து செயற்படும் இரச்சலால் சிறிது சிறிதாக செவிடாதல் மற்றையதாகும். பெரும் வெடியோசை முதல்வகை கோட்டினை விளைவிக்கின்றது. குளிர் சாதனப் பெட்டியிலிருந்தும், நீராவி இயந்திரத்திலிருந்தும், இசைக்கருவிகளிலிருந்தும் வெளிவரும் தொடர் இரைச்சல் நாளடைவில் செவிடாக்கும் தன்மையைக் கொண்டதாக விளங்குகின்றது.

கற்றல் கற்பித்தல் செய்முறை நிகழும் போது ஒலி கவனக்கலைப்பானாக தொழிற்படுவதனால் கற்றல் கற்பித்தல் செயன்முறை இடர்பாட்டை எதிர்கொள்ள நேரிடுகின்றது. கற்றல் கற்பித்தல் நிகழும் போது அதன் அருகே ஒலிக்க விடப்படுகின்ற பாடல், வாகன இரைச்சல், வாகன கோண் ஒலிகளால் கவனம் திசை திருப்பப்பட்டு விடுகின்றது. கற்றலுக்கு கவனம் மிக முக்கியமானது. கவனமின்றேல் கற்றல் இல்லை கற்றலின் போது குறுக்கிடும் மேற்படி ஒலிகளால் கற்றலுக்கும் பாடல்முதலிய ஒலிகளுக்குமிடையே கவனம் ஊசலாடும். பாடலை கேட்டுக்கொண்டே படிக்கின்றோம் என சிலர் கூறுவதை கேட்டிருக்கின்றோம். இது சாத்தியமில்லை ஒரே நேரத்தில் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த முடியாது. பாடலில் கவனம் செலுத்தும் போது கற்றல் நிகழாது. கற்றலில் கவனம் இருக்கம் போது பாடலில் கவனம் இருக்காது. அப்படியானால் பாடலை கேட்டுக்கொண்டே படிக்கின்றோம். என்பவர்களின் கவனம் கணத்திற்கு கணம் பாடலிற்கும் கற்றலுக்கும் இடையே இடமாறிக்கொண்டே இருக்கிறது என்பதே உண்மை. உளவியல் அறிஞர்களுக்கு பாடலை புறம் தள்ளிவிட்டு ஒருவன் கற்றலில் கவனம் செலுத்துவதன் மூலம் கற்றல் வெற்றிகரமாக நிகழுமல்லவா? என நீங்கள் நினைக்கக்கூடும். குறுக்கிடும் அதிக ஒலி கவனத்தை கற்றலின் பால் மட்டும் நிலைத்திருக்கவிடாது. கற்பவரின் கவனத்தை இவ் ஒலி சிதைத்தபடியே இருக்கும். இதனால் கற்றல் குழப்பத்திற்குள்ளாகும். ஒரு மனிதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நேரத்திற்கு ஒரு விடயத்தின் பால் கவனத்தை குவித்து வைத்திருக்க முடியாது. அதாவது இருபது நிமிடங்களுக்கு மேல் கவனத்தை குவித்து வைத்திருக்க இயலாது என்றும் அந் நேரத்திற்குள்ளும் குறித்த விடயத்தின் பகுதிகளுக்கிடையே கவனம் இடம்மாறிக் கொண்டிருக்கும். என்கின்ற உளவியலாளர்களின் கருத்தினையும் நினைவில் கொள்ள வேண்டும். நாடகத்தை பார்ப்பதிலுள்ள கவனம் அன் நாடகத்தின் பாத்திரத் தோற்றம், இசை , அரங்கு, அவை என இடம் மாறிக்கொண்டே இருக்கும். இவ்வாறு ஊசலாடும் கவனத்தை கற்றலின்பால் செலுத்திக் கற்கும் போது கவனக்கலைப்பான்களை அனுமதிக்க முடியாது.

கற்றலின் போது குறிப்பிடும் ஒலிகள் பாடசாலைச் சூழலிலும் வீட்டுச்சூழலிலும் உள்ளன. பாடசாலையில் மாணவர்களின் இரைச்சல், ஒலிபெருக்கி , வாத்தியக்கருவிகள் , வாகன இரைச்சல்கள் என பல்வேறு ஒலிகள் மாணவர்களின் கவனத்தை சிதைத்து கற்றலில் இருந்து அவர்களை திசை திருப்பி விடுகின்றன. இன்று எமது பிரதேசத்தில் வீட்டுச் சூழலிலும் மாணவர்களின் கற்றலுக்கு பொருத்தமானதாக பல மாணவர்களுக்கும் அமையவில்லை கற்றலுக்கான சூழலை வழங்குகின்றோம். என ஒரு தனியறை தளபாடம், வெளிச்சம், துணை நூல்கள் என்பவற்றை வழங்கினால் சரியென சில பெற்றோர்கள் எண்ணுகின்றனர். இது போதாது இத்தகைய வசதிகள் , ஏற்பாடுகளைக் கூட செய்துதராத பெற்றோர்களும் உள்ளனர் என்பதும் உண்மையே. கற்றலை மேற்கொள்ளும் போது கவனத்தை பாடத்தில் குவிந்திருக்க அக்கவனத்தை திசைதிருப்பும் கவனக்கலைப்பான்களை நீக்கிவிடுதல் முக்கியமானது. வீட்டுச்சூழலில் கவனத்தை குலைத்துவிடும் முக்கிய காரணியாக இருப்பது ஒலியாகும். வீட்டிலும் கோயிலும் மற்றும் விழாக்களிலும் ஒலிபெருக்கி ஒலிக்கவிடப்படுகின்ற இசைப்பாடல்கள், தொலைக்காட்சி, வானொலி முதலியவற்றின் அதிக ஒலிகள் மாணவர்களின் கவனத்தை கற்றலில் இருந்து திசை திருப்பிவிடுகின்றனர். வன்னியில் மீள் குடியேற்றத்தின் பின் மூலை முடுக்கெல்லாம் பல்கிப்பெருகியுள்ள தொலைக்காட்சி , வானொலி இசைப்பாடல் சாதனங்களில் இருந்து எழும் அதிக ஒலிகள் மாணவர்களின் கற்றல் மீதான கவனத்தை சிதைத்து வருகின்றன. தங்கள் வீட்டிலிருந்தும் அயல் வீட்டிலிருந்தும். எழும் இவ் ஒலிகளால் பெரும் இடர்படுகின்றனர். பொதுப்பரீட்சைக்காக படிக்கின்ற சில மாணவர்கள் பக்கத்து வீட்டில் இரவு பகலாக பாடல் ஒலிப்பதால் படிக்க முடியவில்லை என நொந்து கொள்கின்றனர். சொன்னாலும் கேட்க மாட்டார்கள். சொன்னால் வீண் பிரச்சனைவருமென பெற்றோர்களும் பயந்து விடுகின்ற நிலமைகளுமுண்டு. இலங்கையில் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமையவும் அதிக ஒலிகளை ஒலிக்க விடுவோர் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

இவ்வாறான அதிக ஒலிகள் மாணவர்களின் கவனத்தை சிதைப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலிலும் மூளையில் இருப்பதனாலும் தோல்வி காண்கின்றன. இதனால் பரீட்சையின் போது மூளையிலிருந்து கற்றலை மீள வருவித்தல் நிகழாது போக மாணவர்கள் பரீட்சையில் பின்னடைவை சந்திக்கின்றனர். அத்துடன் மாணவர்களுக்கிடையே மனவெழுச்சிக் குழப்பங்களையும் அதிக ஒலிகள் , இரைச்சல்கள் ஏற்படுத்த வல்லன. தேவையற்ற கோபம், வெறுப்பு, எடுத்ததற்கெல்லாம் எரிச்சல் படுதல் காரணமில்லாத பயம் போன்ற மனவெழுச்சிக்குழப்பங்களை ஏற்படுத்துதல் மாணவர்களின் உள நலம் பாதிப்படைகின்றது என்ற கருத்தினையும் புறம் தள்ள முடியாது. எனவே ஒலிகளை வெளியிடும் சாதனங்களை பயன்படுத்துவோர் அதன் ஒலிகளை குறைத்தல் அவசியமற்ற போது நிறுத்திக் கொள்ள வேண்டும். சமூக நல நோக்கோடு ஒலி பெருக்கி , பாடல் ஒலிபரப்பும் சாதனங்கள் முதலியவற்றை அதிக ஒலியில் ஒலிக்க விடாது பயன்படுத்தல் அவசியமற்ற போது நிறுத்தல் மாணவர்களின் கற்றல்களுக்கு துணை செய்வதாகும்.

பேருந்துகளில் பயணிக்கும் போது வாகன இரைச்சல் , பயணிகள் உரையாடல் இன்று நாகரிகமாகபோயுள்ளன. இசைப்பாளர்களை தொடர்ச்சியாக கேட்க நேரிடுகின்றது. நீண்ட தூரம் பயணம் செய்வோர் இத் தொல்லையை நீண்ட நேரம் அனுபவித்தால் பாதிப்பிற்குள்ளாகின்றனர். அதிக ஒலிகளும் குறைந்த ஆனால் தொடர்ச்சியாக கேட்க நேரிடும் ஒலிகளும் மனிதனுக்கு தீங்கு தருவன. ஒலிகள் குறுங்காலத்தில் தொல்லை தருவதாக இருப்பதுமட்டுமன்றி நீண்டகாலத்திற்கு நிலையான பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவனவாகவும் உள்ளன. இதனால் மூளை, செவி என்பன நிலையான பாதிப்பை அடைய வாய்ப்புகளுண்டு.

மனிதனை பாதிக்கும் அதிக ஒலிகளால் மூளை தருக்கணிக்கச் செய்யப்படுகின்றன. மழைக் காலத்தில் ஊற்று பிடித்த நிலத்தில் பிடுங்கப்படும் மரவள்ளிக்கிழங்கு சில வகை கீரைகள் என்பன முழுமையாக அவியாமல் "நறுக்... நறுக்..." என கடிபடும். இதனையே தருக்கணித்தல் என்பர். மரவள்ளிக்கிழங்கு தருக்கணிச்சிட்டுது என்றும் கீரை தருக்கணிச்சிட்டுது என்றும் கிராமங்களில் மக்கள் பேசிக் கொள்வதை இங்கு நினைவு படுத்திக் கொள்ளல் பொருத்தம். பிறந்தது முதல் மூன்று வயது வரை மூளை அதீத வளர்ச்சி பெறுகிறது. அதன் தொழிற்பாடு விரிவடைகிறது. இவ்வயதெல்லையை உடைய குழந்தையை அதிக ஒலிகள் பெரிதும் பாதிக்கின்றன அதிகமான இரைச்சல் ஒலியானது குழந்தையின் செவிப்பறையை பாதிப்பதோடு மூளையின் வடஅரைப்பகுதியிலுள்ள கேட்டல், ஞாபகம் ஆகிய பகுதிகளை பாதிக்கின்றன.இதனால் குழந்தையினது மூளையின் இயல்பான வளர்ச்சியும் தொழிற்பாடுகளும் பாதிப்பிற்குள்ளாவதால் விவேகம் குறைந்த கற்றலில் ஈடுபடும் குழந்தையாக பிற்காலத்தில் வளர்வதாக அமெரிக்காவில் இது தொடர்பாக ஆய்வு செய்த நிறுவனம் ஒன்று தெரிவிக்கின்றது. பெருமூளையின் உயர்நிலை உளச் செயற்பாடுகளான சிந்தித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்தல், பிரச்சனைகளுக்கான தீர்வு காணல் நினைவாற்றல் என்பன அதிக ஒலிகளால் தாக்கத்திற்குள்ளாகின்றன. செவிகளை தாக்கும் ஒலிகளின் பொருளை உணரும் பொருட்டு பிரிவு (Tepporal-lobe) தாக்கத்திற்குள்ளாவதால் அப்பிரிவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பழைய அனுபவங்களையும் நினைவுச்சுவடுகளின் நெருக்கத்திற்குள்ளாகின்றன. இச் செயற்பாடுகளால் குழந்தை மந்த நிலையை (மூளை) அடைகின்றது. எவ்வாறு அதிக நீர் ஊற்றால் பாதிப்புற்ற மரவள்ளிக்கிழங்கு, கீரை என்பன முழுமையாக அறியாமல் தறுக்கணிக்கின்றது. அதனை போல் அதிக ஒலிகளால் பாதிப்புற்றும் மூளை வளர்ச்சியிலும் தொழிற்பாட்டிலும் முழுமை பெறாமல் தறுக்கணிக்கின்றன. இன்று இளம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் காதிலே செவிப்பானை செருகி பாடலை அதிக சத்தத்துடன் ஒலிக்க விடுகின்றனர். குழுந்தையின் துலங்கலை கண்டு பெருமை பட்டுக் கொள்கின்றனர். இது தவறானது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக குழந்தை அதிக ஒலிகளால் பாதிப்படையாத வகையில் ஒலிகளை குறைத்து உபயோகித்து அவர்களை பாதுகாப்பது மிக அவசியம்.

செவியின் உரோம செல்களும் அதன் உறைகளும் ஒலியை ஏற்று அதைக் குறைத்தும் பெருக்கியும் மூளைக்கு அனுப்பும் திறன் படைத்தது. ஆனால் அதிக இரைச்சலால் விரைவில் அது கெட்டுவிடும் என்று பேராசிரியர் ஸென்னர் குறிப்பிடுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அத்துடன் இந்தியா தமிழ் நாட்டின் செவியுணர்வு செயல் (Accoustic Association) சங்கத் தலைவரும் அத்துறையின் நிபுணருமான டொக்டர் காமகேசுவரன் "இரைச்சல் தொல்லையை கட்டுப்படுத்தாமல் இருப்போமானால் தற்போது சிறுவனாக இருக்கும் ஒருவன் இன்னும் இருபது ஆண்டுகளில் ஏதாவது ஒருவகை காது கேளாத வியாதிக்கு ஆளாக நேரிடும்" என எச்சரிக்கின்றார். இதனை விட ஹொாங் ஹொாங்கில் "இரைச்சல் தொல்லையும் அதன் அணுகு முறையும்" என்று உயிரின சமூக அளவில் ஒரு ஆய்வை செய்தனர். இவ்வாறாயின் முடிவில் அதிக இரைச்சல் மனிதனை உடல், உள ரீதியாக பாதிக்கின்றது என்ற உண்மையை கண்டறிந்தனர்.

அதிக ஒலிகளினால் மனிதனுக்கு ஏற்பட்டு வரும் தீங்குகளை உணர்ந்து உலக நாடுகள் அதனைக் கட்டுப்படுத்துவதில் முனைப்புக்காட்டத் தொடங்கியுள்ளன. இந்தியாவின் தமிழ் நாட்டில் கூம்பு வடிவ ஒலிபெருக்கி பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதிக ஒலியை வெளியிடும் சில வகை ஹொான்களும் தடை செய்யப்பட்டுள்ளன. அத்துடன் மிகையான ஒலியை வெளியிடும்விமானங்களின் இயந்திரங்களைசத்தம் குறைவாக இருக்குமாறு அமைக்கப்படுகின்றன. இரவு நேரங்களில் விமானப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்படுகின்றது. தரைப்போக்குவரத்துச் சாதனங்களிலும் குறைந்த ஒலியுடன் (மனிதனுக்கு பாதிப்பு ஏற்படாத ஒலி அளவுடன்) செயற்படுமாறு இயந்திரங்கள் வடிமைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக ஒலியின் தீங்கினை உணர்ந்த ஜப்பானியர்கள் தமது நாட்டின் மிட்சுமிசி கனரகத் தொழிற்சாலையில் மிகக்குறைவான ஒலியை வெளியிடும் வாகனங்களை உற்பத்தி செய்து புழக்கத்திற்குவிட்டுள்ளன. இவ்வாறு தொழிற்சாலை இயந்திரங்களும் மிகக்குறைவான ஒலியில் இயங்கத்தக்கதாக வடிவமைக்கின்றனர். ஜேர்மனியில் போக்குவரத்துத்துறையின் கொள்கைக்கமைய கண்ணாடி ஒலித்தடையை ஒரு நிறுவனம் கண்டுபிடித்து பயன்பாட்டுக்கு விட்டுள்ளது. நகர்புறத்தின் மக்கள் வாழும் பகுதிகளில் ஒலித்தடை கண்ணாடியை பதித்து ஒலித்தொல்லை இலிருந்து மக்களை பாதுகாக்கின்றனர். இவ்வொலித்தடை கண்ணாடியானது சாதாரண கண்ணாடியை விட பல மடங்கு தடிப்பானது. வெளிச்சம் தடைப்படாதவாறும் உடையாதவாறும் எக்காலத்திலும் தன்மை கெட்டுப் போகாதவாறும் இலகுவாக சுத்தம் செய்யக் கூடியவாறும் மோல்ட் செய்யப்பட்ட அக்ரைல் கண்ணாடியை ஒலித்தடையாக இந்நாட்டில் பயன்படுத்துவதிலிருந்து ஒலி பாதிப்பை அந்நாட்டவரும் உணர்ந்துள்ளனர் என்பது வெளிப்படுகிறது.

இலங்கை கைத்தொழில்துறை வளர்ச்சி பெற்று வரும் சூழலில் தொழிற்சாலைகள் பல்கிப் பெருகும் போது ஒலியின் பாதிப்பு அதிகமாகும். இன்று தொழிற்சாலைகள் குறைவாக இருப்பதால் அதன் பாதிப்பு உணரப்படாமல் உள்ளது. ஆனாலும் தரைப்போக்குவரத்து வாகனங்கள் கணிசமாக அதிகரித்து வருவதை மோட்டார் வாகனத்துறையின் அண்மைய பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதனால் வாகனங்களில் இருந்து வெளிவரும் ஒலி பாதிப்பை ஏற்படுத்தவல்லது. என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். வாகனங்களின் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகரிக்கும் போது ஒலித்தொல்லை அதிகரிக்கும். நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களின் மூலை முடுக்கெல்லாம் பயன்படுத்தப்படும் ஒலி பெருக்கியின் ஒலி சூழலை மாசுபடுத்துகிறது. அத்துடன் இசைப்பாடல்களை ஒலிக்கவிடும் பல்வேறு சாதனங்களும் அதிக ஒலியை வெளிப்படுத்தி மனித குலத்திற்கு தீங்கு செய்கின்றன. ஒலிபெருக்கி, பாடல் ஒலிபரப்புச் சாதனங்களை பயன்படுத்தக்கூடாது என்பது இதன் பொருளாக மாறாக, அதனை குறைந்த ஒலியில் பயன்படுத்த வேண்டும். தேவையற்ற போது அதனை நிறுத்திவிடலாம். இதனால் அதிக ஒலியின் பாதிப்புக்களிலிருந்து மனிதனின் உடல், உள ஆரோக்கியத்தை பேணிப்பாதுகாப்பதுடன் அவனது கற்றல் நடவடிக்கைகளுக்கு இடையூறும், பாதிப்பும் இன்றி, பன்முக ஆளுமைமிக்க எதிர்கால சந்ததி உருவாக துணைபுரிவோம். அதிக ஒலி எழுப்புவோர் மீது குற்றவியல் கோவை 98 பிரிவின் கீழ நடவடிக்கை எடுக்க முடியும்.

ஒலியால் சூழல் மாசடைதல் தொடர்பாக அதிக ஒலி எழுப்புவோர் மீது குற்றவியல் கோவை 98 பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளையின் இடப்பெயர் ஆய்வு

திருமதி நிலாயினி சசிதரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், கண்டாவளை.

ஒரு நாட்டினுடைய பண்டைக்கால வரலாறு அதன் பண்பாடு போன்றவற்றை அறிய உதவும் வரலாற்று மூலாதாரங்களுள் இடப்பெயர்களும் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவத்தை பெற்றுவருகின்றது. இலங்கையின் இந்த இடப்பெயர்களின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்வதற்கு முன்னர் பொதுவாக எப்போது எவ்வாறு தோற்றம் பெற்றது என்பது பற்றியும் அவை தோற்றம் பெற்ற பின்னணி பற்றியும் அறிந்து கொள்வது அவசியமானது. அந்த வகையில் நோக்கும் போது நாகரீக வளர்ச்சியும் தேவைகளும் ஒழுங்குகளும் ஏற்பட்ட தன்மையானது ஆதிகாலத்திலே நிலையான குடியிருப்பின்றி மனிதன் நாடோடி வாழ்வை வாழ்ந்ததன் காரணத்தினால் நிலையான இருப்பிட வசதிகளை அமைக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படவில்லை. காலம் செல்லச் செல்ல பண்பாட்டு வளர்ச்சியும் சமூக பொருண்மியத் தேவைகளும் சமூக ஒழுங்குகளும் ஏற்பட்ட நிலையில் நிலையாக ஓரிடத்தில் தொழிற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட காலத்திலே இடப்பெயர்களின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழரது பண்பாட்டைப் புலப்படுத்துவனவாக அவர் தம் இடப்பெயர்கள் அமைந்துள்ளமை தெளிவாகின்றது. பண்டைய மக்கள் தாம் வாழும் இடங்களை மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டவும் ஏனைய இடங்களிலிருந்து இன்னோரிடத்தை வேறுபடுத்திக்காட்டவும் இடப்பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். உதாரணமாக மரப்பெயர்கள், ஆற்றுப்பெயர்கள், நிலவியல்புப்பெயர்கள், பறவைகளின் பெயர்கள்.

காலப்போக்கில் அவ்வழக்கில் புதிய மரபுகளும் இணைவதாயின. மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு அமைய அரசர், தலைவர், சான்றோர்கள், ஆட்சியாளர்கள் அடிப்படையிலான புதுப்பெயர்களும், புராண இதிகாச இலக்கியப் பெயர்களும் இடப்பெயர் ஆக்கத்தில் இடம்பெறலாயின.

ஆயினும் ஆண்டாண்டு காலமாக வாய்மொழி மரபில் வழங்கி வந்த இடப்பெயர்களை புதுப்பெயர்கள் எளிதில் மாற்றிவிட முடியாது என்ற உண்மையின் அடிப்படையில் புதிய இடப்பெயர்கள் வழக்கொழிந்தும் சில அரிதாகவும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சமூகப் பெரியார்கள் சாதி அமைப்புக்கள், தொழில் முறைகள் முதலியவற்றின் அடிப்படையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்கள் தோற்றம் பெற்றுள்ளன.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் புலப்பெயர்ந்தும் வாழ்பவர்கள் அந்நாட்டிற்கு சென்று தாம் புதிதாகக் குடியேறிய இடங்களுக்கு தம் இடங்களின் பெயர்களை அவ்விடயங்களுக்கு பெயர் சூட்டியிருக்கிறார்கள். உதாரணமாக தென்னிந்திய ஊர்ப்பெயர்கள் ஈழத்து ஊர்ப்பெயர்களாகக் காணப்படுகிறது.

குறிப்பிட்ட ஓரிடம் ஒரு மன்னனின் ஆட்சிக்குக் கீழ் புதிதாகக் கொண்டுவரப்படும் போது அவ்விடம் மன்னனின் பெயரைப் பெறுதல் வரலாற்று நிகழ்வாகக் காணப்படுகின்றது.

உதாரணமாக 1ம் இராசேந்திரன் இலங்கையை சோழராட்சியின் கீழ் கொண்டு வந்தபோது மும்முடிச்சோழன் எனும் பெயரை இலங்கை பெற்றது.

பிற்காலங்களில் அரசியல், மொழி, பண்பாடு என்பவற்றின் வளர்ச்சிப் பின்னணியில் அவ்விடங்களில் வாழ்ந்த ஆட்சியாளர்கள், அறிஞர்கள், மாமனிதர்கள், எழுத்தாளர்கள் முதலிய இன்னோரன்ன பெயர்களாலும் இடப்பெயர்கள் ஆக்கம்பெற்ற வரலாறு அறியப்பட வேண்டியதாயிற்று.

புதிதாக இடப்பெயர்கள் தோன்றுவதோடு இடப்பெயர்கள் மாற்றம் பெற்றும் தோன்றலாயிற்று.

அரசர்கள் தங்கள் வெற்றியின் நினைவாகவும் தாங்கள் வெற்றி கண்ட ஊர்களில் தங்களது உரிமைகளை நிலைநாட்டவும் வெற்றிகொண்ட பெயர்களை மாற்றுதல். அரசர்கள் கோயில்களுக்கும் அந்தணர்களுக்கும் நன்கொடையாக வழங்கப்படும் நிலங்களுக்கு தங்கள் பெயர்களைச் சூட்டுதல். பெயர் மாற்றம் பெறுவதற்கு முதன்மைக் காரணமாகும்.

## முரசுமோட்டை

வெள்ளைக்கார படைகளை வழிமறித்து போரிடும் நிலமை பண்டைக்காலத்தில் காணப்பட்டது. போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் முரசறையும் வழக்கம் காணப்பட்டது. அவ்வாறு முரசறையும் இடமாகக் காணப்பட்டமையால் அவ்விடத்திற்கு முரசுவெட்டை எனப்பெயர் ஏற்பட்டது. பின்னர் அது மருவி முரசுமோட்டை எனப் பெயரிடப்பட்டது. பண்டாரவன்னியனின் தங்கையாராகிய வள்ளிநாச்சியார் வரிகளைப் பெற்றுக்கொண்டு சுண்டிக்குளம் ஊடாக முல்லைத்தீவு பண்டாரவன்னியன் இராசதானிக்கு கொண்டுபோகும் போது படையெடுத்து வரும் மன்னர்களை வழிமறித்து போரிட்ட இடம் முரசுவெட்டை ஆகையால் அவ்விடம் பின்னர் முரசுமோட்டை என அழைக்கப்பட்டது. மோட்டை + ஓட்டை = நீர் கசிந்து வெளியேறும்படி வயற்பரப்புத்துவாரம். மோட்டை என்பது பள்ளநிலம், சிறுகுளம் என்பவற்றைக் குறிக்கும் சொல்லாகும். இயற்கையாகவே பள்ளமான இப்பகுதி மோட்டை என்ற இயற்பெயரால் வழங்குவதாயிற்று. முரசு முரல், முரல்தல், ஒலித்தல். முரசு என்ற சொல் குளத்திலிருந்து வடிந்தோடும் நீரோசையைச் சுட்டி, ஒலியெழுப்பும் குளம் என்ற தொனிப்பொருளில் முரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல் குளத்திலிருந்து வடிந்தோடும் நீரோசையைச் சுட்டியெழுப்பும் குளம் என்ற பொருளில் முரசுமோட்டை என்ற பெயர் பெற்றதெனலாம்.

வளமான மருத நிலம் முரசுமோட்டையில் உள்ளது. இதனால் இங்குள்ள ஒரு கிராமத்திற்கு மருதங்குளம் எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இங்கு பழையகமம், சேற்றுக்கண்டி எனும் பகுதிகளும் உள்ளன. கிளிநொச்சிப்பகுதியில் அதிகளவு நெல் விளைச்சல் தரும் பகுதியாகும்.

## வெளிக்கண்டல்

வெளிநாட்டிலிருந்து வேட்டைக்காக வருகைதந்த ஒரு குழு தட்டுவன் கொட்டியில் பன்றியைக் கண்ட அதேவேளை பன்றி வெளிக்கிட்டு ஓடிய இடம் வெளிக்கண்டல் எனப்பெயர் பெறலாயிற்று. இதனால் கண்டாவளைக்கு மேற்கே பன்றிமோட்டை என்ற இடமும் கண்டாவளையில் பன்றியை சுட்ட இடம் பன்றி சுட்டான் எனவும் அழைக்கப்படுகின்றது.

## கல்மடுநகர்

கண்டாவளைப் பகுதியில் கல்மடு என்ற குளம் ஒன்று காணப்படுகின்றது. அந்தக்குளத்தைச் சூழவுள்ள பகுதிகளில் கற்கள் காணப்பட்டமையினால் இது கல்மடு எனப்பெயர் பெற்றிருக்கலாம். எனக் கருதப்படுகின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் குதிரை வண்டிப்பாதை அமைந்திருந்தமைக்கு இங்கு பயன்படும் கண்டி வீதி சான்றாக உள்ளதாகக் கருதப்படுகின்றது. கிளிநொச்சிக்கு மேற்கே முறிப்புக்குளம் அதன் கீழ்க்கரையில் "ஊற்றுமோட்டை" என்ற காட்டுப்பகுதி என்பன அமைந்துள்ளன. இங்கே கண்டுபிடிக்கப்பட்ட வழிபாட்டிட கற்றூண்கள் இப்பகுதியில் பண்டை நாளில் மன்னராட்சியும் மக்கள் குடியிருப்பும் நிலைபெற்றிருந்தன என்பதற்குச் சான்றாக உள்ளது.

## உமையாள்புரம்

உமைநாச்சி என்ற அரசி ஆட்சி செய்ததால் இவ்விடத்திற்கு உமையாள்புரம் என்ற பெயர் ஏற்படலாயிற்று. கண்டாவளை பகுதியிலே ஆனையிறவு பகுதிக்கு அண்மித்ததாக உமையாள்புரம் அமைந்துள்ளது. குமரபுரத்திற்கு உமை நாச்சியார் என்ற அரசி ஆண்டதாக கூறப்படுவதால் உமையாள்புரம் என பெயர்பெற்றதாக சரித்திரம் உண்டு. மேற்கே குடியேறிய மக்களின் குல தெய்வமான உமையம்மையின் பெயரால் இவ்விடத்திற்கு உமையாள்புரம் எனப்பெயர் பெறலாயிற்று.

## குமரபுரம்

பரந்தன் சந்திக்கு மேற்குத்திசையில் அமைந்துள்ள பகுதி குமரபுரமாகும் குமரன் முருகன் இங்கு வாழும் மக்களின் குல தெய்வமாக முருகன் ஆலயம் காணப்படுவதால் இதற்கு குமரபுரம் எனப் பெயர் ஏற்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருமபுரம்

கண்டாவளைப் பகுதியில் புளியம்பொக்கணை கிராமத்திற்கு அருகில் 1958 இல் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டமே தருமபுரமாகும். 1958 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட தமிழ் சிங்கள கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு காணி வழங்கும் திட்டத்துடன் புளியம்பொக்கணையில் காடுகள் அழிக்கப்பட்டு நிலம் புனரமைக்கப்பட்டது. இங்கு மக்கள் குடியேற்றங்களை நிர்மாணிப்பதற்கு பல்வேறுபட்ட நிறுவனங்களும் தர்மத்தின் அடிப்படையில் உதவிச் செயற்பாட்டின் வழியாக இக் குடியேற்றத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் இவ்விடத்திற்கு தருமபுரம் எனப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## ஆனையிறவு

யாழ்ப்பாணத்தில் இருந்து 32 மைல் தொலைவில் யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் இவ்விடம் அமைந்துள்ளது. யாழ்ப்பாணக்குடா நாடும் ஈழத்தின் பெரும் நிலப்பரப்பும் கடலிலிருந்து பிரிபடாவண்ணம் தொடுத்து நிற்கும் பகுதி ஆனையிறவாகும். யானை+ இறவு = ஆனையிறவு இறவு என்பதற்கு எல்லை வரி என்ற கருத்துண்டு. ஒல்லாந்தர் காலத்திலே ஆனையிறவுக்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வணிக நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்ட யானைகளுக்கு வரி (இறை) அறவிடப்பட்ட இடமே ஆனையிறவு எனப்பெயர் ஏற்படலாயிற்று. பண்டைய நாட்களில் யானைகள் கூட்டமாக நீர் நிலையைத் தேடி வந்த இறக்கம் ஆனையிறவு ஆகும். பண்டைய நாட்களில் பூநகரிக் காட்டுப்பகுதியில் உள்ள யானைகள் கடும் வரட்சி காரணமாக யாழ்ப்பாணக்குடாநாட்டில் உள்ள காடடர்ந்த பகுதிகளுக்கு மேய்ச்சலுக்கு வருதல் வழக்கமாகும். அவ்வாறு வருவதற்கு முதலில் இறங்கிய இடம் ஆனையிறவு ஆகும்.

பண்டைய நாட்களில் வணிக நோக்கத்திற்காகக் கொண்டுவரப்படும் யானைகள் முதலில் இறக்கப்பட்டமையினால் இவ்விடம் யானையிறவு ஆனையிறவு எனக் காரணப்பெயர் பெறுவதாயிற்று.

ஆனையிறவு எனும் பெயர் இவ்விடத்திற்கு ஏற்படுவதற்கு முற்பட்ட காலத்திலே இவ்விடத்திற்கு "உவர் நீர்த்தொட்டி" எனப் பெயர் வழங்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

வன்னியர் மரபில் வந்த "பெத்த நாச்சன் வன்னிச்சி ஆளும் காலத்தில் உவர்நீர்த்தொட்டி என்ற இடம் ஆனையிறவு என்ற புதிய பெயரைப்பெற்றதாகக் கருதப்படுகின்றது. மேற்படி அரசியின் கால கட்டத்திலே விவசாயிகளுக்கு யானைத் தொல்லை இருந்து வந்தது. மதயானை அடக்குவோருக்கு 1000 வராகன் பரிசு தருவதாக பறையறிவித்தும் பயன் தரவில்லை. அமைச்சரவை கூடி மந்திரி சொக்கநாதப்பிள்ளையிடம் யானையை அடக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவுடன் மெய்க்காப்பதிகாரி ஒருவன் "சொக்கநாதரல்ல அவரது மனைவியாலும் ஏலாது அந்த யானையைப் பிடிக்கும் வேலை"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனக்கூறினார். வீடு திரும்பிய கவலையோடு இருந்த மந்திரி கவலையோடு இருந்ததைக் கண்ட மனைவி அவருக்கு ஆறுதல் கூறி மறுநாள் வார்க்கயிறு என்பவற்றுடன் காடு நோக்கிப்புறப்பட்டாள். கற்பின் வலிமையால் வார்க்கயிற்றின் வடத்தை வீசி யானையை அகப்படுத்தி யானை பின் தொடர அவள் முன்னே சென்றாள். "உவர் நீர்த்தொட்டி" எனும் இடத்தில்

யானையைக் கட்டி விட்டு கணவனிடம் சென்றாள். இதையறிந்த மெய்க்காப்பதிகாரி தனது மானம் போய்விடும் அரசியின் தண்டனைக்கு ஆளாக வேண்டி வரும் எனப்பயந்து சதியால் அவளைக் கொன்று விட்டான். உவர்நீர்த்தொட்டியில் அரசியால் கட்டப்பட்ட யானை கட்டுண்ட இடத்தில் பல நாள் கிடந்து பட்டினியால் இறந்தது. அதனால் அந்த இடம் "ஆனை இறவு" என அழைக்கப்படுகின்றது. (சி.சி.சின்னத்தம்பி; 1958:15------ - 20)

ஆனையிறவில் ஒல்லாந்தர் கோட்டைகள் இரண்டினைக்கட்டினார். அவை தற்போது அழிந்து போய்விட்டன. வன்னியரின் படையெடுப்பை அடிக்கடி ஒல்லாந்தர் எதிர்நோக்கியதால் தமது பாதுகாப்பிற்காக 1760 இல் ஒல்லாந்தர் கட்டினார். 1833 இல் ஆங்கிலேயர் இக்கோட்டையை பயன்படுத்தினர்.

## பரந்தன்

பரந்தன் ஆனது வரலாற்றுத் தொடர்புடைய இடப்பெயராகும் தமிழக அரசர்களின் படையெடுப்பின் நினைவாக பல இடப்பெயர்கள் தோற்றம் பெற்று வழங்கி வந்துள்ளது. சோழப்பேரசின் எழுச்சிக்கு வித்திட்ட 1ம் பராந்தகன் (கி.பி 907 - 9053) பாண்டி நாட்டிற்கு படையெடுத்துச் சென்று 3ம் இராசசிங்களை (கி.பி 910ல் வெற்றிகண்டான். இப்போரில் பாண்டிய மன்னன் சிங்களமன்னன் 5ம் காசியப்பனின் (கி.பி 914 - 923) உதவியை நாடியிருந்தான். இதனால் பராந்தகனுக்கு சிங்களப்படை எதிரியாயிற்று. தோல்வி கண்ட பாண்டியன் தனது முடியையும் சிம்மாசனத்தையும் சிங்கள மன்னனிடம் பாதுகாப்பாக ஒப்படைந்திருந்தான். இவற்றைப் பெறுவதற்காக பராந்தகன் ஈழத்திற்கு படையெடுத்து வந்த போது அவனை எதிர் கொள்ள முடியாது அப்போது ஆட்சியிலிருந்த உதயன் இப்பொருட்களுடன் றோகணத்திற்கு ஓடி மறைந்தான் என சூலவம்சம் விரிவாகக் கூறுகின்றது. இப்படையெடுப்பின் நினைவாகவே பராந்தகன் என்ற இடப்பெயர் தோற்றம்பெற்று அது காலப்போக்கில் பராந்தகன் ஆனது மருவி பரந்தனாக மருவியது.

## குஞ்சுப்பரந்தன்

முதலாம் பராந்தகனுக்கு குஞ்சுரமல்லன் என்பது ஒரு சிறப்புப்பெயராகும். குஞ்சுரம் குஞ்சு எனவும் பராந்தகன் பராந்தன் மருவி பின்னர் இரு சொற்களும் இணைந்து குஞ்சுப்பரந்தன் என வழங்கிவந்தது. 1ம் பராந்தகனின் ஆட்சி பூநகரிப்பகுதியில் இருந்தமைக்கு சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு 1985இல் முது மக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்டமை இவ்விடத்தின் பழமையை குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புளியம்பொக்கணை

புளி+அம்+பொக்கணை= புளியம் பொக்கணை பொக்கணை என்பது பள்ளம் குழி, பொந்து எனப்பொருள்படும். புளியம்பொக்கணை என்ற இடத்தில் முன்பு புளிமரங்கள் செறிந்து காணப்பட்டமையாலும் இவ்விடம் நிலத்தோற்றத்தில் பள்ளமாக இருந்தமையினால் புளியம்பொக்கணை என்ற பெயர் ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

## பிரமந்தனாறு

பெருமங்கலம் + ஆறு = பிரமந்தலாறு என திரிவடைந்திருக்குமோ என கருதப்படுகின்றது. கண்டாவளைப்பகுதியில் பிரமந்தனாறு ஆனது ஆறு ஓடும் பகுதியை நடுநிலையமாகக் கொண்டு குடியிருப்பு இருப்பதனால் பிரமந்தலாறு மருவி இன்று பிரமந்தனாறு எனப்பெயர் பெற்றது.

## புன்னைநீராவி

ஆரிய திராவிட நாகரீகங்களிலே ஆறு தெய்வமாகப் போற்றப்பட்டது. ஆறு நீர் நிலைகள் குளங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இடப்பெயர்கள் தோற்றம் பெறலாயிற்று. புன்னை + நீர் + ஆவி = புன்னைநீராவி. மரம் நீர் நிலை என்பவற்றின் காரணமாக இப் பெயர் ஏற்பட்டுள்ளது.

## தட்டுவன்கொட்டி

புராதன கால கட்டத்திலே ஆனையிறவிலே பிரதான வர்த்தக மையாமாக காணப்பட்ட காலகட்டத்திலே தட்டுவன் கொட்டி வீதியினாலே வர்த்தகர்கள் பயணம் செய்து ஆனையிறவிலே பண்டமாற்று பொருளாதார முறைமை இடம்பெற்றது. அவ்வாறு பயணிகள் செல்கையில் பயணம் தெருவோரத்தில் அவர்கள் தட்டுவத்தில் சாப்பிட்டு தட்டுவத்தினை எறிந்து செல்கின்றமையால் அவ்விடத்திற்கு தட்டுவன் கொட்டி என ஏற்படலாயிற்று.

## பெரியகுளம்

ஆரம்பத்தில் பெரிய வட்டக்கச்சி என்று அழைக்கப்பட்ட இடமே அங்கு குளம் வெட்டிய பின்னர் பெரியகுளம் எனப் பெயர் ஏற்பட்டது. கண்டாவளை பிரதேசத்தில் 2வது உடையார் பரம்பரை வாழ்ந்த இடம் பெரியகுளமாகும்.

இந்தவகையில் கண்டாவளையில் தமது மூதாதையரது பண்பாட்டு புலத்தை மேற்படி இடப்பெயர் ஆய்வின் ஊடாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது என்று கூறினால் மிகை இல்லை.

உசாத்துணை
இலங்கையின் இடப்பெயர் ஆய்வு பாலசுந்தரம்பிள்ளை
நேர்காணல்: கா.பாலேஸ்வரன் கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கி பிங்கியின் விளையாட்டு

திருமதி ஜெ.வராகினி
பெரியகுளம்.

சிங்கியும் பிங்கியும் இனிய நண்பர்கள் அவர்கள் ஒன்று கூடி மகிழ்ந்து விளையாடும் நாளில் "மச்சான் இந்தக் காடு போரடிக்குது ஒருக்க மனிதரைப் பார்த்து வருவமே" என்ற சிங்கி "ஓம் மச்சான் கன நாள் வெளியே போய்" என்றது பிங்கி. உடனே இருவரும் புறப்பட ஆயத்தமாகின்றனர். இட சிங்கியும் பிங்கியும் யார் தெரியுமா? சிங்கி என்ற குரங்கும் பிங்கி என்ற முயலும் தான் நண்பர்கள்.

அப்ப அவர்கள் தங்கள் இருப்பிடம் தாண்டி வெளியே நடக்க ஆரம்பித்தனர். இடையில் சந்தித்த ஏனைய காட்டு நண்பர்களிடம் "நாங்கள் மனிதரைப் பார்க்கப் போறம் வாறீங்களா?" என அழைப்பு விடுத்தனர். ஆனால் அவர்கள் யாரும் வர மறுக்கவே இருவரும் கை கோர்த்தபடி தாவிக் குதித்து காட்டு எல்லையை கடந்தனர்.

சிங்கி "அங்கபாரடா றோட்டு" "ஆ! எவ்வளவு வாகனங்கள்" என்றது. பிங்கியும் "ஆமா ஆமா ஜாலி" என்றது துள்ளிக்குதித்தது. மெதுவாக சாப்பாட்டிற்காக நிப்பாட்டிய டிப்பரில் தாவிய சிங்கி "டேய் மெதுவா கைகுடுடாநான் தூக்கி விடுறன்" என்று கை கொடுத்து பிங்கியை தூக்கி விட்டது. இருவரும் மணல் மூடியிருந்த தறப்பாளுக்குள் மறைந்து கொண்டனர். டிரைவர் சாப்பிட்டு முடித்து வந்து வாகனத்தை எடுக்க இவர்கள் மணல் மேல் படுத்துக் கொண்டு வானத்தைப் பார்த்தபடி "போவோமா ஊர்கோலம் பூலோகம் எங்கெங்கும்" என்று பாடியபடி இருவரும் ஜாலியாக சென்றனர்.

ஒரு இடத்தில் டிறைவர் திடிரென பிறேக் படிக்க இருவரும் விழுந்து எழும்பி மெதுவாக எட்டிப் பார்த்தனர்.

இப்படி கதைக்கும் போது கையால் மணலை தோண்டித் தோண்டி விளையாடி வந்த பிங்கியின் கைகளில் ஏதோ தட்டுப்பட"டேய் இங்கபாரடா ஏதோ பை" வெளியே தூக்கிப் போட்டது. இருவரும் தோண்டித் தோண்டி வெளியே நான்கு பைகளை எடுத்தனர். "என்னடா சிங்கி இது" "ஆமாடா என்னடா செய்வம் இப்ப" என்றது பிங்கி பழையபடி அப்படியே புதைத்து வை என்ன நடக்குது என்று பார்ப்பம்" என்றது. சிங்கி இப்படியே ஒரு காட்டுப்பகுதியில் இறங்கி கீழே உள்ள கம்பியில் பதுங்கி விட்டனர்.

நகரை வந்ததும் இருவர் வேகமாக வந்தனர். அந்தப் பொதிகளை வாங்கிக்கொண்டு சென்றனர். பிங்கியும் சிங்கியும் மெதுவாக அவர்கள் பின்னால் சென்றனர். அங்கே பாடசாலைக்கு அருகே உள்ள பெட்டிக்கடை ஒன்றிற்கு ஒருவன் செல்ல மற்றவன் வேறு பாதையில் பிரிந்து சென்றான். அப்போது சிங்கி "பிங்கி நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்க மறைந்து இரு நான் மற்றவனின் பின்னால் போய்ப்பார்க்கின்றேன்." என்று கூறிச் சென்றது. அப்போது பாடசாலை மாணவர்கள் சிலர் வந்து அண்ணா பொருள் அங்க வந்திட்டா?''எனக் கேட்டபடி வந்தனர். ஓம் தம்பி இப்ப தான் வந்தது இன்னும் பை பிரிக்கேல்ல ஒரு மணித்தியாலத்தில வாங்கோ" என்றார் கடைக்காரர் பிங்கி அதிர்ந்து போனது. "என்ன அந்தப் பிஞ்சுகளா இதைப் பாவிப்பது" " என்ன கொடுமையிது" என்று எண்ணியபடி இருக்க சிங்கியும் ஒரு பெரிய உரப்பையில் அந்தப் பைகளை போட்டுக்கொண்டு மூச்சிரைக்க வந்தது? "டேய் இதால சின்னஞ்சிறுசுகள் தான் பாதிக்குது" "அதில குப்பை எரிக்கிறாங்க அதில அதையும் எடுத்து போடுவம். " " நீ ஒழிஞ்சே இரு என்னைப் பிடிக்க மாட்டாங்கள்ங்க எனக்கூறி அந்தக்கடையில் உள்ள பைகளையும் தூக்கிக்கொண்டு வேகமாக எரியும் குப்பைக்குள் எறிந்தது. அது மேலும் சுவாலை விட்டு எரிந்தது.

பின்னர் வேகமாக வந்த சிங்கி "வாடா வேகமாக போவம் இந்த மனிதர்களை என் செய்வது நாம் ஏதோ கொஞ்சப்பேரை காப்பாற்றிய திருப்தியோட போவம்" என்றது பிங்கியும் "ஆமாடா இங்க எல்லாம் மோசமா இருக்கு வா நாம காட்டுக்கே போய் நிம்மதியாய் இருப்பம். "சொர்க்கமே என்றாலும் நம் ஊரைப்போல வருமா?''என்று பாடியபடி இருவரும் இருப்பிடம் நோக்கின் சென்றனர்.

(2019ம் ஆண்டு தேசிய கலை இலக்கிய போட்டியில் முதலாமிடம் பெற்ற ஆக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வரவு செலவுத்திட்ட மறு பரிசீலனை

சசிகரன் நளாயினி (பட்டதாரி பயிலுநர்)
பிரதெச செயலகம் கண்டாவளை

அரசாங்கம் எதிர்காலத்திட்டங்களை தீட்டுவதற்கு பொருளாதார வளங்களின் அருமை நிலையை எதிர்நோக்குகின்றனர். அதாவது இருக்கின்ற வருமானத்தைக் கொண்டு செலவுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இந்நிலையில் அரசாங்கமானது வருமான மூலங்களை வரி, வரிசார வருமானத்தை பெற்றுத் தேவைக்கேற்ப கடன்களை நீண்டகால, குறுங்கால வட்டியுடன், வட்டியற்ற வகையில் பெற்று வரவு செலவுத்திட்டத்தை நிர்வகித்து செய்கின்றது. எனவே வரவு செலவுத்திட்டமானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

1. பணமானது ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாங்கத்தின் இலக்குகளை மிகத்திறமையாக அடையக்கூடியதாகவும் மக்களின் விருப்புக்கு ஏற்றவகையிலும் செலவிடப்பட வேண்டும்.
2. வரிச்சுமையானது அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
3. பொருளாதார, அபிவிருத்தி போன்ற நீண்டகால இலக்குகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்கூறிய அம்சங்களை கருத்தில் கொண்டு குறிக்கப்பட்ட காலப்பகுதிக்கு முன்னரே இக் காலப்பகுதியில் குறித்த இலக்கினை அடைவதற்காக அக்காலப்பகுதியில் பின்பற்றவேண்டிய கொள்கையினை நிதி அல்லது தொகை ரீதியான கூற்றாக தயாரித்து ஏற்றுக்கொள்ளப்படுதலை வரவு செலவுத்திட்டம் எனலாம். இது வருமானம், செலவீடு, முடக்கிய மூலதனம் என்பவற்றை உள்ளடக்கும்.

ஆகவே இத்தகைய வரவு செலவுத்திட்டத்தில் பொது செலவீடுகளை கட்டுப்படுத்தல், முகாமைப்படுத்தல் என்பன முக்கியமானதாகும். வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு என்பது கொள்கை தேவையுடன் நிர்வாகிகளின் பொறுப்பினை தொடர்புபடுத்தி வரவு செலவுத்திட்டத்தினை அமைத்தலும் கொள்கையின் இலக்கினை ஒவ்வொரு தனித்தனி நடவடிக்கையிலிருந்து பாதுகாப்பளித்தல் அல்லது அதன் மீளாய்விற்கு வழிவகுக்க. வரவு செலவுத்திட்டமிடலின் விளைவுகளுடன் தொடர்ச்சியாக ஒப்பிடுதல் ஆகும்.

பொதுச் செலவீனத்தை கட்டுப்படுத்தி முகாமை செய்தலில் திறைசேரியின் பங்கு முக்கியமாகும். அதாவது இணையாளராக இருத்தல், தீர்மானம் எடுத்தல், இயக்க செயற்பாடு எடுத்தல், சிவில் சேவையை நடாத்தல் என்பவையாகும். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களை எடுக்கும் போது நடுத்தரமான திட்டங்கள், சமூகசேவைத்திட்டங்கள், கடுமையான பொறுப்புள்ள, அவசரமான பொருளாதார திட்டத்தை தெரிவு செய்தல் அதேபோல் திறைசேரி கட்டுப்பாடு என்பதன் மூலம் பொதுச்செலவீனத்தை நெகிழும் பாதீடாக ஏற்படுத்தல்.

அதேபோல் பாராளுமன்ற அபிவிருத்தி முறைமை மூலம் எவ்வாறு பாரளுமன்ற நடவடிக்கையை கட்டுப்படுத்தல், அங்கு ஏற்படும் உடைவுகளை எவ்வாறு தீர்த்தல், விலை வருமானங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை பொது பாராளுமன்ற தீர்மானம் போன்றவற்றின் மூலம் பொதுச் செலவீனத்தை கட்டுப்படுத்த முடியும். பொதுவாக ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வரவு செலவுத்திட்டம் காணப்படும். அது மரபு ரீதியானதாக இருந்த அந்த நாட்டுக்குள் இருக்கும் விசேட செயற்பாடுகளுக்கு ஏற்ப மாற்றமடைகின்றது. அவ்வகையில் இலங்கையில் இருக்கும் பாதீட்டை நிகழ்சித்திட்ட பாதீடு எனவும் (Programing budget) இந்தியாவில் Performance budget எனவும் இங்கிலாந்தில் Output Budget எனவும் பிரான்சில் Rationalised Budget எனவும் அழைக்கப்படுகின்றது. வரவு செலவுத்திட்டச் செலவுகள் மூலதனச் செலவு எனவும் மீண்டெழும் செலவு எனவும் காணப்படுகின்றது. இங்கு மூலதனச் செலவுகள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட ஆயுட்காலத்தை கொண்டதாகவும் மீண்டெழும் செலவுகள் ஓர் ஆண்டிற்குள் அடிக்கடி ஏற்படும் செலவகளாகவும் காணப்படும். உதாரணமாக யுத்த பிரதேச நாடுகளில் இராணவத்தளபாடங்கள், உடமைகள் மீண்டேழும் செலவுகள் உள்ளெடுக்கப்படுகின்றன.

இலங்கையில் *1960*ம் ஆண்டிற்கு முற்பட்ட காலங்களில் மரபு ரீதியான வரவு செலவுத்திட்டமே காணப்பட்டது. இங்கு அரச வரவு செலவுத்திட்டங்கள் நிர்வாகத்திணைக்களங்கள் அவற்றின் உப பிரிவுகளான தலைப்பு, வாக்கு, உபதலைப்பு, என்ற முறையில் தயாரிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திணைக்களமும் ஒரு தனியான தொழிற்பாட்டினைச் செய்வதனால் மொத்தச் செலவினமும் அதில் ஏற்படும் மாற்றங்களையும் அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் காட்டி நிற்கும். உதாரணமாக சுகாதார திணைக்களம் என்ற தலைப்பு சுகாதாரச் சேவையில் ஏற்பட்ட செலவுகளையும் அதில் ஏற்பட்ட மாற்றங்களையும் எடுத்துக்காட்டும்.

மரபுரீதியான வரவு செலவுத்திட்டத்தில் தலைப்பு என்ற பகுதி, எந்த திணைக்களம் என்பன குறிக்க வாக்கு என்ற பகுதி *7* பிரிவாக காணப்படுகின்றது. இங்கு வாக்கு *1* வாக்கு *2*,

வாக்கு *3* என்பன நிர்வாகம் சார்ந்த செலவுகளை உள்ளடக்கியதாகவும் வாக்கு *1*, வாக்கு *2* ஆகிய இரண்டும் ஆரம்பச்செலவு என்பதுடன் மீண்டெழும் செலவாகவும் காணப்படுகின்றன. வாக்கு *3* என்பது நிர்வாகத்திற்கான மூலதனச்செலவாகும். வாக்கு *4,5* என்பன சமூக அபிவிருத்தி சம்மந்தமான செலவுகளாகும். இதில் வாக்கு *4* மூலதனச்செலவு, வாக்கு *5* மீண்டெழும் செலவாகவும் காணப்படுகின்றது. வாக்கு *6,7* என்பன பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி சம்மந்தமான செலவாகவும் காணப்படுகின்றன. இவையிரண்டும் மூலதனச்செலவாகும். காலவோட்டத்தில் தொழிற்பாடுகளில் சிக்கலான தன்மையினை நவீன அரசாங்கங்கள் பாரம்பரிய முறையினை மேற்கொள்ளுதல் திருப்திகரமற்றதாக இருந்தது.

1960ம் இற்கு பிற்பட்ட காலத்தில் நிகழ்ச்சித்திட்ட வரவு செலவு திட்டத்தை அறிமுகப் படுத்தினால் இதில் பின்வருவன கருத்தில் கொள்ளப்பட்டது.

1. அரசாங்க கொள்கை ரீதியான இலக்கு,
2. செலவீனங்கள்,
3. கால அளவு,
4. மாற்றுவழிகளை தெரிவு செய்வதற்கான முறைகள்,
5. பௌதீக ரீதியான முன்னேற்றத்தினையும் செயல் திட்டத்தினையும் அளவீடு செய்கின்ற முறை,

எனினும் ஒவ்வொரு அரசாங்கமும் நடைமுறை இடத்திற்கான சிறந்த திட்டங்களை மேற்கொள்கின்ற போது அடுத்த வருடத்தினையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். நிகழ்ச்சித்திட்டத்தின் மீளாய்வு வரவு செலவு திட்டங்களும் மாற்றங்களை வேண்டி நிற்கின்றது. இத்தகைய நிலையில்

1. தேசிய இலக்கினை சரியாகவும் தொடர்ச்சியாகவும் கண்டறிதல்
2. இவ்வாறான இலக்குகளிலிருந்து அவசரமான ஒன்றை தேர்வு செய்தல்
3. இலக்குகளுடன் தொடர்பான செயல்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான வழிவகையினை ஏற்படுத்தல். போன்றவற்றினை உள்ளடக்குதல் வேண்டும்.

நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டத்தினை முக்கிய சீர்திருத்த நடவடிக்கையாக செலவு வகைப்படுத்தல் அமைகின்றது. இங்கு தலைப்பு, கருத்திட்டம், செலவு விடயங்கள், செலவு விடய விபரங்கள்,வளங்கள் விபரங்கள் என்பன காணப்படுகின்றன.

இங்கு தலைப்பு என்பது நிதி ஒதுக்கீட்டின் முக்கிய கூறாகும். இவைகள் செலவதிகாரத்தை குறிக்கும். தலைப்புக்கள் அமைச்சின் தலைப்பு உட்பட்ட 200 தொடந்து மூன்று எண்களால் ஆனவை. ஒவ்வொரு அமைச்சிற்கும் பத்து நம்பர்கள் ஒதுக்கப்படுகிகின்றது.

நிகழ்ச்சி வீதத்திட்டம் என்பது நிதி ஒதுக்கப்படும் செயற்பாட்டு அலகுகள் சேவைகளுக்கும் பொது நிவாரணத்திற்கும் உள்ள வேறுபாட்டை காண்பிப்பதற்காக உள்ளது. ஓர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெவ்வேறு செயற்பாடுகள் நோக்க அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

கருத்திட்டம் ஓர் நிகழ்ச்சித்திட்டத்தின் உப பிரிவாகும் பொதுவாக ஒரே தன்மையான செயற்பாடுகளை உள்ளடக்கிய கருத்திட்டம் அமைகின்றது. ஒவ்வொரு செயற்பாட்டையும் அதற்கான செலவினைக் கொண்டு கணிக்கவும் மதிப்பீடு செய்யவும் முடியும். மீள வரும் செலவை அடக்கும் கருத்திட்டங்கள் 1-100 வரையும் மூலதனச் செலவை காட்டும் கருத்திட்டங்கள் 101-199 எண்களால் குறிக்கப்படும். கருத்திட்டம் அமைக்கும் போது

1. செயற்பாட்டின் நோக்கம்,
2. செயற்பாட்டை நிறைவேற்ற உதவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணி,

3. கருத்திட்டம் தொடர்பான நன்மைகள், தீமைகள்,
4. செயற்பாடுகளுக்கு ஏற்படப் போகும் தடைகளும் பொருளாதாரத்திற்கு ஏற்படும் விளைவுகளும்.

**கருத்திட்டம் ஒன்றின் இலகுவானவடிவம்**




கருத்திட்ட வளையம்




ஒரு கருத்திட்ட திட்டத்தின் பொருளியல் அடிப்படையான செலவீனங்களையே செலவு விடையம் என அழைக்கின்றோம். மூலதனச் செலவு அடிப்படையிலும் மீள வரும் செலவடிப்படையிலும் இவை வகுக்கப்பட்டுள்ளன.

செலவு விடயங்கள் நான்கு எண்களால் ஆனவை முதல் எண் மீண்டெழும் செலவு அல்லது மூலதனச் செலவைக் காட்டுகின்றது பொருளியல் வகுப்பைக் காட்ட மற்றைய இரண்டும் செலவைக் காட்ட நிற்கிறன. நிகழ்ச்சித்திட்டம் என்பது உச்ச இலக்கையும் கருத்திட்டத்திட்டம் என்பது நோக்கையும் குறித்து நிற்கின்றது. இதனால் இவை தொழிற்பாட்டு பொருளியல் ஆய்வாக கொள்ளப்படுகின்றன. செலவு விடயம் என்பது உள்ளீட்டையும் (InPut) செலவு விபரம் விடயம் என்பது வெளியீட்டையும் (Out Put) குறித்து நிற்கின்றது. இதனால் இவை இரண்டையும் செலவு பயனுறுதி மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆகவே ஒவ்வொரு அரசாங்கமும் நடைமுறை இடத்திற்கான சிறந்த திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதன் காரணமாக நிகழ்ச்சித்திட்டங்களும், வரவு செலவுத்திட்டங்களும் ஒன்றோடொன்று உடன் பட்டது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகள்

ரா.லக்சி
பெரியகுளம்.

கலைகள் மக்களது உணர்வையும் உண்மைகளையும் தூண்டிவிடும். கலைச்சாதனங்கள் பெரும் வாரியாகவும் பெருமளவிலும் செப்பமான முறைகளிலும் பரந்து விரிந்து கிடக்கின்றன. மலர்ந்திருக்கும் பூ, காலைச் சூரியோதயம், பறவைகளின் உலாவல், மரஞ்செடி கொடிகள், இலைகள், கொப்புக்கள், கிளைகளின் அசைவு, மிருகங்களின் அசைவியக்கம், குருவிக்கூடுகள், வீடுகள் மலைகள், ஆறுகள் என்ற அனைத்திலுமே "கலைத்துவம்" என்பது ஒரு தனித்துவ அம்சமாகும். உலகம் உருண்டை என்பது ஒரு பெருங்கலையே ஆகும். சோதிடக்கலை, விஞ்ஞானக் கலை என்று கூறும் வழக்காறு உண்டல்லவா? அறிவுக்கும், மனதிற்கும் இன்பத்திற்கும் இடம் தரும் தன்மை கலைகளுக்கு உண்டு. இயற்கையின் படைப்புக்கள் கலைத்துவமிக்கன என்பது காணத்தக்கது. கலைத்துவம் மேதாவிலாசமென்பது அதனை சுவைப்போன் வெறும் இன்பத்திலேயே தங்கியுள்ளது. இங்கு கலைக்கும், கலைஞனுக்கும் உள்ள தொடர்பு துலக்கம் பெறுகின்றது. கலையின் பரிணமிப்பு, கலையில் எழுச்சி, கலைப்படைப்புக்களின் நுட்பம் பற்றிய அறிவு, கல்வி, அனுபவம், வாசகனொருவனது உணர்வு நலனை, ஆக்கத்திறனை, படைப்பு நுட்பத்தை மேன்மையுடையதாக்கும் என்பது அனுபவ உண்மை. காட்சியறிவையும், கருத்தியலறிவையும், கோட்பாடு நோக்கையும், ரசனை முறை நயப்பையும் நல்கும் திறன் கலைகளுக்குண்டு. கலா விமர்சகர்கள், ஆக்க இலக்கிய படைப்பாளிகள், சிற்பிகள், இசைவாணர்கள், கற்பனையிலே ஓவியம் தீட்டும் ஓவியர்கள், எழுத்துவாண்மை மிக்க படைப்புப்பிரம்மாக்கள், மேதைகள், சிந்தனையாளர்கள், விமர்சகர்கள் அனைவரும் கலை பற்றி பிரக்ஞைகளும், கலாபூர்வமான நோக்கம் கொண்டவர்களென்பது போதகரும் கலைபற்றிய பன்னொரு காலத்துச் சிந்தனைத் தடம் நம்மனக் கண்முன் விரிகிறது பழம்பெரும் நாகரிகங்களையும் மூடுண்டு கிடக்கும் புவி மேற்பரப்பின் ஆழப்பகுதியில் கிடக்கும் நாகரிகங்களினதும் இடிந்த கட்டடங்களினதும் சிலைகளினதும் தொல்பொருட் சின்னங்களினதும் கூறுகள் சிதைவுகள், கண்டுபடிப்பு என்பன கலைத்துவப் பெறுமானங்களை புதிது புதிதாகவே நல்கவல்லன. விக்கிரவியல், நாணயங்கள், மட்பாண்டங்கள் அழிந்த நாகரிகத்தின் எச்சங்கள் கலைக் கொள்கையை ஆராயுமிடத்-து நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

கல்லிலும், மண்ணினாலும், மரத்தினாலும் அமைக்கும் கலைகள் ஒரு வகையின் மனிதனிடத்திலே இயற்கையாயுள்ள குறளினாலும் இசை, வளம், ஓசை, சங்கீதம் என்பன கலையின் முக்கியத்துவம் வகிப்பவை. மொழியையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையையும் கற்பனையையும் எண்ணங்களையும் அடிப்படையாயக் கொண்டு புனைகின்றன. ஆனால் எங்கள் இனத்தில் கலைகள் வளரவே இல்லை. நாமாவது கலைகளை வளர்ப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கணை ஒரு பழமை

கலைஒளி மயில்.வேலாயுதபிள்ளை
ஓய்வுநிலை அஞ்சல் அதிபர்

வடக்குமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பழமையான பல பிரிவுகளில் கரைச்சி என்பதும் ஒரு பிரிவாகும். பின் ஒரு புறம் மன்னர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்திற்குட்பட்டதாகவே வன்னிராச்சியம் இருந்தது. என்றும் வன்னராச்சியத்தின் அல்லது வன்னிமையின் ஒரு பகுதிதான் கரைச்சி என்றும் சொல்லப்படுகின்றது. எனினும் கரைச்சி என்பது தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பெரிய பிரதேசமாகும். கிளிநொச்சி தனியாக நிர்வாக மாவட்டமாக இருந்தாலும் கரைச்சி யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்குட்பட்டதாகவே இருந்து வருகின்றது. கரைச்சி பெரும் பிரதேசமாக இருந்தமையால் கரைச்சிவடக்கு கரைச்சி தெற்கு எனப்பிரித்து சில நிர்வாக மையங்கள் நடைபெற்றுவருகின்றன. எனினும் கரைச்சி என்பது அடிநாதமோ புளியம்பொக்கணை கிராமமும் அதனோடு இணைந்த கலவெட்டித்திடல் கிராமமுமாகும். இவற்றுடன் புன்னைநீராவி என்பதும் ஒரு கிராமம். இதனாலேதான் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் புதிய புன்னைநீராவி எனும் ஒரு கிராமம் உதயமானதும் அதன் பின்பு இது பழைய புன்னைநீராவி என்றிருந்தும் தற்போது மறைந்துவருகின்றது. இப்போது கரைச்சியின் அடிநாதம் பற்றிப் பார்ப்போம். கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் தோற்றமும் தொன்மையும் அதன் வரலாற்றுச் சான்றுகளின்படி சுமார் 400 வருடங்களுக்கு முற்பட்ட காலமாகும். இதன்படி மேற்குறிப்பிட்ட மூன்று கிராமங்களும் ஆலய வரலாற்றுக் காலத்துடன் சமமானதாக அல்லது அதற்கு முற்பட்ட காலம் கொண்டவை என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

இக்கிராமங்கள் அடங்கியுள்ள வட்டாரம் என்ற பிரிவிற்குட்பட்டதாகவே கொழுந்துப்புலவு என்ற கிராமமும் இருந்தது என்று இங்கே வவுனியவேள், உடையாவேள் , சைவவேள் என மூன்று பிரிவு மரபினர் வாழ்ந்தனர் என்றும் அறியப்படுகின்றது. இவ்வாறான மரபுவழியைச் சார்ந்தவர்கள் முறையே சிவனையும் கண்ணகையையும் விநாயகரையும் தத்தம் குலதெய்வங்களாக வழிபட்டுவந்ததாக அறிந்த போதிலும் எழுதப்பட்ட வரலாற்று ரீதியான ஆவணங்களினால் உறுதிசெய்ய முடியவில்லை. இவையெல்லாம் எமது மூதாதையினரதும் அவர்களின் முன்னோர்களாலும் எமக்குத்தரப்பட்ட பரம்பரைவழியான தரவுகளாகும். இவ்வாறாக இந்த மூன்றுமரபினரும் குறிப்பிட்ட குலதெய்வங்களின் வழிபாட்டோடு கமச்செய்கை கால்நடைவளப்பு போன்ற தொழில்களையும் செய்து செல்வச் சீரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மையுடன் வாழ்ந்து வந்தனர். இக் காலப்பகுதியில் வழிப்போக்கராக வந்து கொழுந்துப்புலவு கிராமத்தில் தங்கியிருந்த ஒரு சன்னியாசி கொலை செய்யப்பட்டு அவரிடமிருந்து மிகவும் அரிதான ஏட்டுச்சுவடிகள் அபகரிக்கப்பட்டன. இதன் விளைவு சன்னியாசியின் காவல்தெய்வமான வைரவரின் தொந்தரவினால் அக்கிராமத்தினர் மிகவும் துன்பப்பட்டனர்.மீள முடியாத நோய் தாக்கம் இதனால் இறப்பு, கால்நடை அழிவுகள், பயிர்ச்செய்கையில் நட்டம், காட்டுமிருகங்களினால் தொல்லை இப்படிபல வழிகளிலும் பாதிக்கப்பட்டனர்.

இப்படியாக தொடர்ந்த தொல்லைகளினால் பயம் கொண்ட இவர்கள் தங்களது குலதெய்வங்களையும் எடுத்துக்கொண்டு வெளியேறினர். வெளியேறி வந்தவர்கள் புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் கிராமங்களில் குடியேறினர். தங்கள் குலத்தெய்வங்களுக்கு கோயில் அமைத்து பொங்கல், பூசைவைத்து வழிபட்டு தங்கள் குலத்தொழில் விவசாயம், கால்நடைவளர்ப்பு என்பனவற்றை மேற்கொண்டுவந்தனர்.

எப்படியிருந்த போதிலும் குறித்த வைரவரின் தொல்லைகள் இங்கும் தொடர்ந்தன. இதனால் கண்ணகை அம்மனுடைய பார்வையில் இருந்தால் வைரவரின் தொல்லை குறைவடையும். என்ற நம்பிக்கையில் கண்ணகியின் வாசலிலே வைரவருக்கும் ஒரு கோவில் வைத்து சன்னியாசி வைரவர் என்று ஆதரித்து வணங்கி வந்தனர். அதோடு பலியிடுவதாகவும் நேர்த்தி செய்து வேண்டி வந்தனர். வேண்டுதல் செய்ததின்படியே பரம்பரை பரம்பரையாக இன்றுவரை ஆடும் கோழியும் இன்றும் பலியிடப்பட்டு வருகின்றது. இப்பொழுதுள்ள சூழலில் பலி-யிடுவது நிறுத்தப்பட வேண்டிய ஒன்றாக பலர் பேசிக்கொண்டாலும் தெய்வப்பழிக்கு ஆளாகிவிடுவோம் என்று அஞ்சுகின்றனர்.

கண்ணகி அம்மன் ஆலயத்தில் உரிமைக்காரர்கள் கலவெட்டித்திடலில் கோவில் அமைத்து வழிபட்டாலும் சுண்டிக்குளம் என்ற அயல் கிராமத்திலும் வாழ்ந்து வந்தனர். அங்கிருந்து வந்தும் பூசைசெய்தும் வந்தனர். அத்தோடு கலவெட்டித்திடல் கிராம தலைவராக அதாவது விதானையாக ஆரம்பத்தில் சுண்டிக்குளம் கிராமத்தலைவரே கடமையாற்றி வந்தார். முன்பு விதானையுடையார், மணியகாரன் என்ற சொல்லில் பணி நிலைகள் இருந்துள்ளமையும் அறியப்படுகின்றது.

இவ்வாலயங்கள் இப்போது புனரமைப்புப் செய்யப்பட்டுவிட்டன. என்றாலும் இவை செங்கல் செதுக்கபட்ட காட்டுக்கல் என்பவற்றாலும் நிர்மானிக்கப்பட்டிருந்தமைக்கான சிதறல்களான ஆதாரங்கள் கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கின்றன. இப்போது கலவெட்டித்திடலில் இரண்டு கண்ணகை அம்மன் கோவில்கள் உள்ளன. ஆதி கண்ணகை அம்மன் என்றும் புதிய கண்ணகை அம்மன் என்றும் கூறப்படுகின்றது. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கருத்தின் அடிப்படையில் 1949ம் ஆண்டு புதிய கோயில் நிர்மாணிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது சிவன் ஆலயம் எப்படி நாகதம்பிரான் ஆலயமாகியது என்று பார்ப்போம். சிவனை வழிபாடு செய்த வம்சத்தை சேர்ந்த நீதிநாயகம் முதலியாருக்கு பிள்ளைப்பேறு இல்லாமை பெரும் குறையாக இருந்தது. இதன் காரணமாக தங்கள் குலதெய்வமான சிவனையும் பார்வதியையும் வணங்கி விரதம் இருந்து பல தர்மகாரியங்களை செய்து வந்தனர். அதன் பயனாக இவர்கள் குழந்தை செல்வம் பெற்று மகிழ்ந்தனர். இரண்டு ஆண்மகவும் ஒரு பெண் மகவும் கூடவே ஒரு பாம்பையும் பெற்றன. இந்த சர்ப்ப குழந்தையின் பெயர் தம்பிரான் என்றும் திருவிளையாடல்கள், திருவருள் தெய்வீகத்தன்மை என்பவற்றால் தெய்வமாக வழிபாடு செய்தனர். இக்காலப்பகுதியில் சிவ வழிபாடு நலிந்து நாகதம்பிரான் வழிபாடு முதன்மை பெற்றது. எனினும் புனருத்தான காலத்தில் நாகதம்பிரானுக்கு மட்டும் கோயில் அமைப்பது என்ற சர்ச்சையில் அப்போதைய பூசகரின் கனவில் காட்டியதன் படி சிவனுக்கும் நாகதம்பிரானுக்கும் தனித்தனியான மூலாயங்கள் நிர்மானிக்கப்பட்டமையை அறியலாம்.

கரைச்சியின் பழமையான கிராமங்களான புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல் புன்னைநீராவி ஆகிய கிராமங்களின் பெயர்களை நோக்குவோம். புளி என்பது புளி மரத்தையும் பொக்கணை என்பது போர் அல்லது கிடங்கு எனப்படும். பொக்கணையுடை பல முதிர்ந்த புளி மரங்கள் நின்ற இடம் என்பதனால் புளியம்பொக்கணையானது. பழைய கல்வெட்டுக்கள் இருந்த திடல் என்றும் அரசர் காலத்து கலை ஓட்டுசிதறல்ளின் திடல் என்றும் இதுவே மருவி கலவெட்டித்திடலானது என அறியப்படுகின்றது. புன்னைமரத்தின் கீழ் உருவான வாவி பின்பு புன்னை நீராவியாகி புன்னைநீராவி என்று மருவியது என்றும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறான புளியம்பொக்கணைக் கிராமத்தில் ஓரத்திலுள்ள சிறு காட்டுப்பகுதியில் சிறு தீவுகளும் இந்த தீவுகளின் இடையே ஒரே சமயத்தில் பார்த்திடமுடியாத நீர்க்குன்றுகளும் அரச காலத்தவை என்று சொல்லப்படும் கற்களும் இருக்கின்றமையை அறியலாம்.

இக்கிராமங்களில் நின்ற மிகவும் வைரம் பொதிந்த பனைமரங்கள், நூற்றாண்டுகாலம் பழமை கொண்ட தோம்பு உறுதிகள், குளங்கள், ஆறுகள் போன்றவையும் இவற்றின் தொன்மையும் எடுத்து இயம்புகின்றன. ஆரம்பத்தில் 10 குடும்பங்கள் வரை இருந்ததாகவும் பிரதான வீடு வட்டமானதாக காட்டுத்தடிகளால் அமைத்து பனையோலையால் வேயப்பட்டிருக்கும் இது வட்ட வீடு என அழைக்கப்படும். சமைப்பதற்கும் சிறகு குடில் அழகாக வேய்ந்து மட்டை வரிந்து படலை போடப்பட்டிருக்கும் மற்றும் மாட்டுக்குடில் இப்படி தேவைக்கேற்றபடி கொட்டில்கள் போட்டுக்கொள்வார்கள்.

பழமையான இக்கிராமங்களின் எல்லைகளாக படு வேலி அல்லது அக்கிள் வேலி போடப்பட்டிருக்கும் இவ் வேலி சிறு தடிகள் முள்ளுகள் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டி அடுக்காக போடப்படுவதாகும். இவ் வேலியின் பிரதான நுழைவிடங்கள் சங்கடம் என்று சொல்லப்படும். இது நாலு அல்லது 5 தடிகள் சொருகிக் கழட்டக்கூடியவாறு அமைந்திருக்கும்.

இவர்களுடைய போக்குவரத்து நடந்து செல்வதும், மாட்டுவண்டியில் பயணிப்பதுமாகும். தென்மராட்சி பிரதேசத்துடன் நெருக்கமான தொடர்பும் உறவு முறையும் இருந்து வந்துள்ளது. கண்டாவளை , மடுக்கரை பன்றி மோட்டை, தட்டுவன் கொட்டி ஆகிய கிராமங்கள் ஊடாக ஆனையிறவை அடைந்து பயணிப்பர்.

கமச்செய்கையும் கால்நடை வளர்ப்பும் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தமையினால் குறிப்பிட்ட காலங்களிலே முறைப்படி செய்ய வேண்டியவற்றை செய்துவிடுவர். காரியம் எதுவானாலும் நாள் கோள் பார்ப்பதில் தவறமாட்டார்கள். வயல்களில் கால்நடையை கட்டி அதன் எருவையும், சேமித்து வைத்திருந்த சாணம், குப்பை குழங்களையும் வயலில் போட்டு உழுது பண்படுத்தி வைத்திருப்பர். மழையை நம்பிச் செய்யப்படும் மானாவாரி நிலங்களானதால் ஆவணி மாதத்திலேயே விதைப்பு ஆரம்பமாகிவிடும். இதைப் புழுதி போடல் என்பர். இதற்கிடையில் நாள் பார்த்து வளர்பிறை கூடின நன்நாளில் நாள் நெல்லு கொத்தி விடுவர்.

வயல் விதைப்பில் பத்துக்கு மேற்பட்ட சோடி மாடுகள் கூட்டாக உழவில் ஈடுபடும். மாடுகளையும் நல்ல முறையில் பராமரிப்பர். ஏர் என்ற கலப்பையின் பாகங்கள் இப்படி அழைக்கப்படும். படவாழ், மேழி, ஏர்க்கால் கொழு. இதே போல நுகத்தையும் ஏரையும் இணைக்கும் கயிறு நந்தையாகும். விதைப்பு நிறைவு பெறும் நாள் கார்த்திகை விளக்கீட்டு நாளாகும். இன்று இறுதியாகவுள்ள ஒரு வயல் விதைக்கப்படும். இதை பொலிசை விடுவதாகக் கூறுவர். உழுவு மாடுகளுக்கும் நெல்லு வைத்து அந்தப்போகத்திற்குரிய விதைப்பை நிறைவு செய்வர்.

இங்குள்ளவர்கள் காவல் தெய்வங்களாகப் பிள்ளையார், வைரவர், நாச்சிமார், வீரபத்திரர் என வயல் நிலங்களின் எல்லைகளில் கோயில் வைத்து வழிபடுவர். அதோடு நாகதம்பிரான், கண்ணகை அம்மன் ஆலயங்களில் மழை அபிஷேகமும், நெற்பயிரை நோய்த்தாக்கம், காட்டுமிருகங்களின் அழிவு போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்காக பயிர்ப்பூசை என்றும் வைத்து வழிபடுவது இப்பவும் இருந்து வருகின்றது.

அறுவடைக்கு முன்னதாகப் புதிர் எடுக்கப்படும். அன்றைய தினம் சாணத்தால் முற்றத்தில் மெழுகிப் பிள்ளையார் பிடித்து வைத்துக் கோலம் போட்டு நிறைகுடம் வைத்து விபூதி, சந்தனம், குங்குமம் போன்ற மங்கலப்பொருட்களுடன் குடும்பத் தலைவன் வயலுக்குச் சென்று கதிர் எடுத்து வந்து வீடுகளுக்கும் கட்டுவர். அதன் பின்பு புதிர் உண்ணுதல் நடைபெறும். அன்றைய தினம் சகல மரங்களிலும் சமைத்து புதுப்பானையில் குடும்பத்தலைவி அரிசி போட குடும்பத்தலைவன் தேங்காய் உடைப்பது வழமை. சமையல் முடிந்த பின்பு கடகத்தில் படையல் செய்து முற்காலி கட்டி அதில் வைத்து காவலளிக்கு படைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் குடும்பத்தலைவரால் குழையல் செய்து எல்லோருக்கும் புதிர் கொடுக்கப்படும். முந்திய காலங்களில் மாட்டினாலே சூடு மிதிப்பார்கள். பேச்சு வளக்கில் சூட்டடிஎன்பர் மாட்டுச்சூட்டடிக்கு 4 பேர் மட்டுமே பங்கு கொள்வர். இதில் பொருத்தமான இடத்தில் களக்கட்டை நடுவர். களக்கட்டை காரை மரத்தில் நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டிருக்கும். களக்கட்டையை சுற்றி மெழுகி அல்லது பனையோலையால் இளைக்கப்பட்ட பாய்கள் விரிக்கப்படும். இப் பாய்களை முடஞ்சான் என்பர். மாடுகளை நடையன் என்றும் பாவிக்கும் கயிறுகளை கன்று தொடுப்பான் என்றும், ஆத்திரி என்றும் குறிப்பிடுவர். நெல்லைக்கூறன் என்றும் பொலி என்றும் சுளகை சுல்லம் என்றும் சாணத்தை போல் என்றும் வேலையாட்களை போலன் என்றும் சொல்வர்.

இக்கிரமங்களில் வாழ்ந்த மூதாதையர் சைவசமய விதிமுறைகளை கைக்கொள்பவர்களாகவும் பல விரதங்களை அனுட்டிப்பவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். ஆண்கள் வேண்டி, சால்வை அணிபவர்களாகவும் சிறு குடுமி வைத்திருப்பவர்களாகவும் பெண்கள் சேலை கட்டுவதும் அதில் மாறாடி போடுவதும் காதில் கடுக்கண் அணிவதும் மாதவிலக்குக் காலங்களில் வீட்டிலே தங்குவதும் பழமையாகக் கொண்டிருந்தனர். விரத நாட்களில் தென்னையோலையில் செய்யப்பட்ட கல்லை என்ற பாத்திரத்தில் சாப்பிடுவர்.

பல வருடங்கள் பழமையான பனைமரங்கள் நிறைய நின்றன பனைமரங்களின் ஒவ்வொருபாகமும் பலவிதமானமுறையில் பயன்பாட்டில் இருந்தன. இதில் தட்டுவம், தலைப்பெட்டி, பாய் கயிறு, பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல் என உணவுவகை இன்றும் பழக்கத்தில் உள்ளன.

பிந்திய காலத்தில் 1960 லும் அதை ஒட்டிய காலங்களிலும் காடாக இருந்த நிலங்கள் அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்டன. பத்து ஏக்கர் வீதம் புளியம்பொக்கணை மத்திய வகுப்புத்திட்டமாகவும், ஐந்து ஏக்கர் வீதம் மத்திய வகுப்புத்திட்ட பகுதி இரண்டு ஆகவும், நாலு ஏக்கர் வீதம் நாலு ஏக்கர் திட்டமாகவும், ஒரு ஏக்கர் வீதம் ஒரு ஏக்கர் திட்டமாகவும் வழங்கப்பட்டது. ஒரு ஏக்கர் திட்டம் தற்போது நாகேந்திரபுரம் என்ற கிராமமாகவுள்ளது. நாகதம்பிரானை முதன்மைப்படுத்தியே இப்பெயர் உருவானது. இப்போதுள்ள புளியம்பொக்கணை கிராமசேவகர் பிரிவில் புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல், நாகேந்திரபுரம், காணான், முசுறன்பிட்டி என்ற கிராமங்கள் உள்ளடங்குகின்றன. முன்பு யாழ்மாவட்டத்துடன் இருந்த போது கிராம அலுவலர் இலக்கம் 165 ஆகவும் தற்போது KN/56 ஆகவும் இருக்கின்றது. அங்கே இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், இரண்டு பாடசாலைகள் சனசமூகநிலையம் விளையாட்டு கழகம் இரண்டு கமக்காரர் அமைப்புக்கள் இன்னும் இதர அமைப்புக்களும் கொண்டவையாக அமைந்த புளியம்பொக்கணை ஒரு பழமை வாய்ந்த பூர்வீகக் குடிகளைக் கொண்ட கிராமமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களின் அன்பு

செல்வி வேலாயுதப்பிள்ளை சுபிதா,
புளியம்பொக்கணை.

ஒரு அழகிய மலைநாட்டுக்கிராமம் சிறிய கிராமத்தில் சின்னக்குடிசை ஒன்றில் சின்னதாய் ஒரு குடும்பம் அதில், அப்பா அம்மாவுடன் சின்ன மகள் ஒருத்தியும் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுடன் நாய்க்குட்டி ஒன்றும் வாழ்ந்து வந்தது. வறுமை எட்டிப்பார்த்தாலும் மன மகிழ்விற்கு குறைவில்லா குடும்பம். சின்னவள் நேதா ஒரு நாள் தந்தையுடன் கடைக்குச் செல்லும் போதுதான் வீதி-யோரமாக அனாதரவாக இந்தக் குட்டி நாய் பசியால் வாடி சோர்ந்து படுத்திருந்தது. அழுவதும், விழுவதுமாக இருந்த நாய்குட்டியை கண்ட நேதா தந்தையிடம் அந்த குட்டி பாவம் என்னை மாதிரி சின்னக்குட்டி அதின்ரை அம்மா, அப்பாவை விட்டு தனியாக நிற்கின்றது. நாங்கள் கொண்டு போவம் என நாய்குட்டியை தூக்கிவந்து விட்டாள். சோர்ந்து போயிருந்த நாய்க்குட்டியை குளிப்பாட்டி உணவு கொடுக்க அது மெல்ல மெல்ல தேறியது.


அந்த நாய்குட்டிக்கு வருண் என பெயரும் வைத்து செல்லமாய் வளர்த்தார்கள் நேதாவுடன்தான் எப்போதும் நாய்க்குட்டி நிற்கும். அவளோடு விளையாடுவதும். அவளோடு சாப்பிடுவதும் என்று அவள் என்றால் உயிரானது. அன்றொருநாள் காலை வேளை நேதாவின் அப்பா வேலைக்குச் சென்று விட்டார். அம்மா சற்றுத் தொலைவில் கடைக்கு பொருட்கள் வாங்கச் சென்றுவிட்டார். நேதாவுடன் துணைக்கு வருண் நின்றது. அப்பொழுது ஏதோ சத்தங்கள் கேட்க வருண் குலைத்தபடி வாசற்பக்கம் ஓட நேதா இருந்த இடம் மண் சரிவிற்குள் மூடுண்டு போனது வருண் குரைத்தபடி அங்கும் இங்கும் ஓடியது. அவ்வூரின் கதறல்களுக்கு இடையில் வருணின் குரைப்பு ஓயவில்லை. அதன் கண்ணால் கண்ணீர் ஓடியது. கத்திக் கத்திக் களைத்த நிலையிலும் நேதா இருந்த இடத்தில் முகர்ந்து முகர்ந்து காலால் மண்ணைக் கிண்டியது. மீட்பு பணியாளர்கள் மண் சரிவு இடங்களுக்கு விரைந்து வந்தார்கள். அவர்களின் கவனத்தை நாயின் குரைப்புச் சத்தம் திசை திருப்பியது. அவ்விடத்திற்கு விரைந்த அவர்கள் வருண் மண்ணைத் தோண்டும் இடத்தில் யாராவது மூடுண்டு இருக்கலாம் என்று சந்தேகத்தில் மண்ணை அகழ்ந்தார்கள். அங்கே மூச்சுத்தினறிய நிலையில் நேதா. கடைக்குச் சென்ற தாயும் சம்பவம் அறிந்து பதறிய படி வீடு திரும்பினார். அசைவற்றுக்கிடந்த நேதாவை கண்டு பதறி அழுதாள். நேதாவிற்கு முதலுதவி வழங்கப்பட்டது. வருணின் செயலால் சில நிமிடங்களிலே நேதா மீட்கப்பட்டதால் அவளின் உயிருக்கோ உடலுக்கோ பெரிதாய் எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடவில்லை. கண் விழித்த



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேதாவை கட்டியணைத்த தாயை தாண்டி வருண் நேதாவை நக்குவதும் அவளை கால்களால் தடவுவதுமாய் இருந்தது. அன்று அநாதரவாய் இருந்த தன்னை உயிர் காத்த நேதாவின் உயிரை காப்பாற்றிய சந்தோசத்தில் அவளை நன்றியுடன் தடவியது. நேதாவின் அம்மா நன்றியுடன் அவளைத் தடவினாள். நேதா வருணை அன்போடு அணைக்க அவள் அன்புக்குள் அடைக்கலமானது வருண்.

"எல்லா உயிர்களும் உணர்வுள்ளவை எல்லாவற்றிலும் நாம் அன்பு செலுத்துவோம்."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டுவன்கொட்டி கிராமம்

திரு. ஐ பத்மநாதன்.

தட்டுவன்கொட்டி

இலங்கையின் வடபகுதியில் கிளிநொச்சி மாவட்டத்திலே ஏ 9 வீதியிலிருந்து கிழக்குத்திசையில் 2 கி.மீற்றர் தூரத்தில் தெரியும் சிறிய வீடுகளைக் கொண்ட தட்டுவன் கொட்டிக்கிராமம் மிகப்பழமை பொருந்தியதாய் ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட அதே மாவிலங்கு மரத்தடியில் கண்ணகை அம்மன் கோயில் கொண்டதாக விளங்குகின்றது.

இக் கிராமம் தனக்கென ஒரு கட்டமைப்பையும் தங்களது மரபு விழுமிய பண்பாட்டு பாரம்பரிய கோலங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனிப்பெரும் பெருமை வாய்ந்த ஒரு பழமைக்கிராமம் ஆகும் கலப்பற்ற சிந்து புரத்திலிருந்து வந்து குடியேறி நீண்ட கால மரபுகளை கைவிடாது தங்கள் பரம்பரைக்கு தமக்கே உரித்தானபண்பாட்டு, பாரம்பரிய கோலங்களை கையளித்து வாழ்ந்து வருகின்றனர்.

சமயம் சைவசமயம். காணும் மக்களது நெற்றியில் விபூதிக்குறிகளும், விபூதிப்பட்டையும் திகழும். மொழி கலப்பற்ற துய தமிழ் புராண இதிகாசக்கதைகளை கேள்வி வழியாக முறைமை சாரக்கல்விக்கு உட்பட்ட மூத்தவர்கள் பாடியும், ஆடியும், கதைசொல்லியும், கூத்தாடியும் வாழ்கின்றனர். அவர்கள் கூடுதலாக ஆடும் கூத்து காத்தவராயன்கூத்து, கோவலன் கண்ணகி இவற்றை தற்பொழுதும் விடிய, விடிய ஆடி மகிழ்வர்.

இவர்களது தொழில் வருடம் முழுவதும் தோட்டமும், வயல் விதைப்பும், உப்பளத்தில் உப்பளக் கூலித் தொழிலும், மேற்பார்வைத் தொழிலும், இறால் அகப்படும் காலத்தில் 2மாத காலத்திற்கு இறால் பிடித்துமே தமது வாழ்வாதாரத்தை நடாத்தி வருகின்றனர்.

மழைகாலத்திலும், அதனை அண்டிய காலங்களில் துரவு வெட்டி அதன் உள்ளே நிறைந்து இருக்கும் தண்ணீரை சிறு பட்டை மூலம் மிளகாய், கத்தரி, புடோல், பாகல், நீற்றுப்பூசனி, சக்கரைப்பூசனி, மரவள்ளிக்கிழங்கு, வற்றாளைக்கிழங்கு ஆகிய தோட்டப்பயிர்களை விளைவிப்பதில் வல்லவர்கள். மானாவாரி நெற்செய்கையும் அதன் விளைவும் தான் கூடுதலான நிலப்பரப்பில் விளைவிக்கப்படுகின்றது. மழை பொய்க்கும் காலங்களில் இவர்கள் வாழ்க்கையும் பொய்த்து விடும். நெல் விளைந்தால் அவற்றைக் களஞ்சியப்படுத்த இடவசதியின்றி குடியிருக்கும் வீடு முழுவதும் நெல் மூடைகள் அடுக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தட்டுவன்கொட்டியும் பழமையும்:**

1938ஆம் ஆண்டிற்கும் அதற்கு முன்பும் வெள்ளைக்காரர் இக்கிராமத்தை விட்டுவைக்கவில்லை. அவர்கள் ஏ9 வீதியில் இருந்து நேரான பாதையை தட்டுவன்கொட்டிக்கு அமைத்து சென்று பழைய கண்டி வீதி எனக் கூறி முரசுமோட்டை ஊடாக முல்லைத்தீவுக்கு சென்றும் வந்தனர். அவர்களது பார்வையில் நிறைய பிள்ளைகள் விடுப்புப் பார்த்தனர். அப்பிள்ளைகளை கண்ட இடத்தவர்கள் 'பிள்ளை மடம்' எனவும் பெயர் வைத்திருந்தனர். இதனை கண்ணகை அம்மன் கோவில் உறுதியில் 'பிள்ளை மடம் கண்ணகை அம்மன்' எனக் குறிப்பிடப்பட்டிருப்பது உறுதி செய்யும்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட தற்போதுமுள்ள மாவிலங்கு மரத்தடி வழியாகவே மக்கள் புளியம்பொக்கணை, கண்டாவளை, மடுக்கரைக்கு சென்று வந்தனர். பிள்ளைமடம் றோட்டில் வைத்து அன்னதானம் கொடுத்தனர்.

**கண்ணகை அம்மன் தோன்றிய வரலாறு**

தட்டுவன் கொட்டி வழியே சென்ற மக்கள் மாவிலங்கு மரத்தடியில் களைத்துப் போய் உறங்கிய பொழுது அம்மரத்தடியின் மூலையில் இரத்தம் வழிந்தது. அதனைத் துடைத்து விட்டு மக்கள் படுத்தனர். படுத்திருக்கும் பொழுது அம்மன் கனவில் தோன்றி அந்த இடத்தில் வைத்து தன்னை கோவில் கட்டி ஆதரிக்கும் படி கூறினாள். அக்காலத்தில் வைத்த முத்துமாரி அம்மன் சிலை இன்றும் காணப்படுகின்றது. அதனை ஒட்டியே மக்கள் குடியேறியும் வாழ்ந்தனர். சிறிது காலத்தில் குடியிருப்புக்களில் தீ பிடிக்கவே மக்கள் அவ்விடத்தை விட்டு அகன்று தற்போதுள்ள இடத்தில் நிரந்தரமாக குடியேறினர்.

அதே நேரத்தில் ஆனையிறவு ஏரியை நன்னீராக்குவதற்கு 1996ம் ஆண்டு ஆனையிறவு இரும்பு பாலத்தை அகற்றி மண் போட்டு (தற்போதைய) தாராக்கி முற்றாக கடல் நீர் ஏரிக்கு வராமல் தடுத்தும் விட்டனர். இதனால் சுண்டிக்குள அணையிலிருந்து கோவில் உள்ள இடம் முழுதாக மழை காலத்தில் வெள்ளத்தில் மூழ்குகியது. இன்றும் மூழ்கின்றது.

**ஆனையிறவு என்ற பெயர்**

வெள்ளையர்கள் யானை ஒன்றை வீதி வழியாக கொண்டு வந்தபொழுது, கொண்டுவந்த யானை ஆனையிறவு கடற் சேற்றுக்குள் மாட்டிக்கொண்டது. வெள்ளையர் கடும் முயற்சி செய்தும் வெளிக்கொண்டு வரமுடியாமற் போனது. வெள்ளையர் ஒன்றும் செய்ய முடியாது தட்டுவன்கொட்டி கம்புளியன் ஆலயத்திற்கு வந்தனர். அங்கு கலையாடிய சுவாமி விடிவதற்கு முன்பு வெளியேற்றப்படும் என்று கூறி, '18 வரிசை' தரவேண்டும் என்றும் வாக்குப் பெற்றுக்கொண்டனர். அதன்படியே யானையும் வெளிக் கொண்டு வரப்பட்டு 18 வரிசையும் தட்டுவன்கொட்டி மக்கள் பெற்றுக்கொண்டனர். அதிலிருந்து அவ்விடம் ஆனையிறவு (Elephant



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

pass) எனப் பெயரிடப்பட்டது. (யானை- ஆனை) (இறவு- தாழ்வுற்ற சமயம்) இப்பதினெட்டு வரிசை இன்றும் வற்றாப்பளை பொங்கலில் இடம்பெறுகின்றது.

### தட்டுவன்கொட்டி என்ற பெயர்

பிள்ளை மடப் பழைய கண்டிப் பாதையால் சென்று வந்த மக்கள் குதிரை வண்டி, மாட்டு வண்டி, நடைபாதை மூலம் முல்லைத்தீவு சென்றனர். நீண்ட காட்டு வழிப்பாதையான படியால் இளைத்துக் களைத்த மக்கள் அங்கு படுத்து சமைத்து சாப்பிட்டனர். சாப்பிடுவதற்கு பனை ஓலையில் தட்டுவம் கோலி சாப்பிட்டு விட்டு சாப்பிட்ட தட்டுக்களை வைத்த மரங்களில் கட்டித் தூக்கி விட்டுச் சென்றனர். இதனைப்பார்த்த வெள்ளையர் அவ்விடத்தை தட்டுவம் கட்டி என்று அழைத்தனர். காலக்கிரமத்தில் 'தட்டுவம் கட்டி' 'தட்டுவன் கொட்டியாக' மாறியுள்ளது.

### தட்டுவன் கொட்டியும் பள்ளியும்

1938ம் ஆண்டு பள்ளிக் கூடம் அமைக்க எண்ணம் கொண்ட மக்கள் கந்தர் முருகரை அணுகி காணி பெற்றுக் கொண்டனர். அக்காணியில் சைவமும் தமிழையும் கட்டிக்காக்க இந்து போட் இராசரத்தினம் பெரியாரை நாடி சைவப் பாடசாலையை கொட்டிலில் அமைத்து கண்ணகி அம்மன் தமிழ் வித்தியாலயம் எனப் பெயரிட்டனர். இப்பாடசாலைக்கு வட்டுக்கோட்டை வணிகர் சமூகத்தை சார்ந்த கந்தசாமி, தெய்வேந்திரம்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோர் கிழமை நாட்களில் தங்கி நின்று கற்பித்து வார முடிவில் ஊருக்குச் செல்வர். ஊரவர்கள் தங்கள் உறவினர்கள் ஆனபடியால் உணவு, உறையுள் கொடுத்து ஆதரித்தனர். இப்பாடசாலையை அரசு 1953ல் பொறுப்பேற்றது முதல் அரசினர் பாடசாலையானது. திரு.ஐயம்பிள்ளை அவர்கள் அரசுக்கு தனது அப்பாவின் காணியை கையளித்து உறுதி எழுதிக் கொடுத்தார். 1986ம் ஆண்டு வரைஐந்தாம் ஆண்டு வரை இயங்கிய அப்பாடசாலை வட்டாரக்கல்வி அதிகாரி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை ஆறாம் வகுப்பு தொடக்க அனுமதித்ததால் அது க.பொ.த சாதாரணதரப் பாடசாலையாக இயங்குகின்றது.

### யுத்தத்திற்கு முன்பு

மக்கள் பல்முயற்சி, பல தொழில் செய்து வாழ்வாதாரத்தை காப்பாற்றினர். ஆனையிறவு உப்பளத்தில் வேலை பார்த்தனர் (மேற்பார்வை, கூலி வேலை) தட்டுவன் கொட்டி, காட்டுக்குளம், விளா ஓடை, நாவற்கொடியான், இரதாலை, வவுனி, ஊரியான், கோடைப்பிட்டி, கோரக்கன்கட்டு, வன்னியம்பிட்டி பகுதிகளில் உறுதிக் காணிக்கு உரிமை கொண்டு நெற்செய்கை, தோட்டம் செய்தனர்.

இவற்றின் விவசாய பொருட்களை சாவகச்சேரி, கொடிகாமம், சந்தைப்பகுதி களுக்கு வண்டில் மூலம் கொண்டு சென்றனர். பின்னைய காலத்தில் ஆனையிறவும் புகையிரத நிலையத் திற்கு வரும் புகை வண்டி மூலமும், பஸ் மூலமும் கொண்டு சென்றனர். தட்டுவன்கொட்டி பாலைக்காட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடுங்கும் பாலைப் பழங்களைகடகத்தில் எடுத்து சென்றனர். இறால் பிடிப்பதின் மூலமும் பணம் சம்பாதித்தனர். இது நிரந்தரத் தொழில் அல்ல இறால் பிடிப்பு மாணவர்களது கல்வியை பாதித்தமையால் அதை இல்லாதொழித்தனர்.

**தண்ணீர் வசதி**

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை குழாய் நீரில் தண்ணீரை எடுத்து தலையில் சுமந்து தட்டுவன்கொட்டிக்கு குடிக்கும் நீரை எடுத்து வந்தனர். அப்பொழுது இரணைமடு கழிவு நீர் குளிப்பதற்கு மக்குவாய் குளத்திற்கு வந்தமையால் மக்கள் குளித்துக் கொண்டனர். நாயாறு மூலம் வரும் தண்ணீர் ஆடு, மாட்டிற்கு குடிக்க பயன்பட்டது. குடிதண்ணீரை ஆனையிறவு கிராம அலுவலகம் பரந்தன் இயக்கச்சியிலிருந்து ஏற்றிக் கொடுத்தனர்.

இங்கு இறால் கொள்வனவு செய்து கொண்ட 'சீநோர்' ஸ்தாபனம் தண்ணீர் வசதியை முழு மனதுடன் செய்து கொடுத்தது. இயக்கச்சியில் 10ஏக்கர் காணியை தட்டுவன்கொட்டி மக்களது பேரில் வாங்கி உரிமையாகக் கொடுத்தனர். அங்கு 12 அடி விட்டமுள்ள வற்றாத கிணற்றை வெட்டி கட்டி விட்டனர். அதிலிருந்து உயர்த்திக்கட்டிய தண்ணீர் தொட்டிக்கு குழாய் (3 விட்டம்) மூலம் தட்டுவன்கொட்டிக்கு தண்ணீரை கொண்டு வந்தனர். தட்டுவன் கொட்டி மக்கள் தங்கள் மனித உழைப்பின் மூலம் வாய்க்கால் வெட்டி இயக்கச்சியில் இருந்து தட்டுவன் கொட்டிக்கு நீர் கொண்டு வந்து சேர்த்தனர்.

**நெற்செய்கையும் நீர்ப்பாசன வசதியும் விவசாய றோட்டும்**

இங்குள்ள குளங்கள்

1.பறவைக்குளம், 2.வவுனிக்குளம், 3.காட்டுக்குளம், 4.இருதாலைக்குளம், 5.மக்குவாய்க்குளம், 6.ஊரியான்குளம் புதிதாக குளம் அமைக்கக் கூடிய ஆத்துவெட்டுவான் தாழ்வுப்பகுதி குளம் ஆக்கப்பட்டு, ஆழமாக்கப்பட்டு நீர்ப்பாசன வசதியை இரணைமடு கழிவு நீர் மூலம் சிறுபோகத்திற்கு 1500 ஏக்கர் நிலமும் விவசாயச் செய்கைக்கு அரசாலே அமைத்து தரப்படவேண்டும், விவசாயப் பாதை அமைத்துதரப்பட வேண்டும். நீர்ப்பாசன பொறியியலாளர்கள் எங்கள் வறண்ட பகுதியை வளமாக்க அடி மட்டத்திற்கு வந்து நீர்ப்பாசனத்திற்கு நிதியை ஒதுக்கி செயற்படுத்துமாறு தாழ்மையாக இரு கை கூப்பி வேண்டுகின்றோம்.

கிளிநொச்சியில் பெய்யும் மழை வெள்ளமாகி அங்கிருந்து பழைய நாயாறு, கோடைப்பிட்டி ஆறு, சவர் ஆறு, பிரமந்தன்குளம், ஆகியவற்றில் தேங்கி கழிவு நீராகி அனைத்தும் ஆனையிறவு ஏரியை வந்தடைகின்றது. இவ்வேரி 13மைல் நீளமும் 2x2 மைல் அகலமும் கொண்டது. இந் நீரேரி நிரம்பி வெள்ளக்காடாகி சுண்டிக்குள அணையை வெட்டி விட வேண்டும். வெட்டிவிட மழை நீரும் கடலோடு கடலாக சங்கமமாகின்றது.

இவ் ஏரியை ஆழமாக அகலமாக வெட்டி நீரை இவ் ஏரியில் தேக்குவதே 'ஆறுமுகம் திட்டம்'. அதனை அமுல்படுத்தினால் சுண்டிக்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணை திறக்க வேண்டிய தேவை இல்லை. ஆனையிறவு ஏரி இன்னொரு இரணைமடுக்குளமாகும். அத்தகைய பெரும் குளத்தை அமைத்தால் ஆனையிறவு உவர்ப்பு நிலம் நன்னீர் நிலமாகும், உவர்ப்பு நிலம் விவசாய நிலமாக மாறும். நிலத்தடி நீரும் இதனால் இவ்விடத்து நிலம் மட்டுமல்லாமல் யாழ் மாவட்ட நிலத்தடி நீரும் நன்னீராகும்.

**பாதையும் தட்டுவன் கொட்டியும்**

தற்போதுள்ள மண் கிரவல் றோட்டு, பாலம் இருந்த காலத்தில் தட்டுவன் கொட்டிக்கு இடப்பட்ட மண் அணை. அது பாதை அல்ல. இவ்வணையை வைத்தே உப்புப் பாத்தியில் தண்ணீரைக் காய்ச்சினர். அக்காலத்தில் உப்பளத்திற்கு பொறுப்பாக இருந்த மூளாய் கனகநாயகத்தால் இடப்பட்ட மண் அணை. இவ்வணைக்கே அரச அதிகாரிகள் பழைய கிழவிக்கு முகத்திற்கு மேக்கப்பண்ணி மினுக்குவது போல காசு ஒதுக்கி சீர்ப்படுத்தி வருகின்றனர். அது ஓர் மக்கள் செல்லக் கூடிய பொதுப்பாதையல்ல படுபயங்கரபாதை.

முன்பு மக்கள் உண்மையாக பாவித்த பழைய பாதை ஆனையிறவும் பாடசாலைக்கு முன்பாக தொடர்ச்சி மேட்டுப்பாதையாக தட்டுவன் கொட்டி பழைய பாடசாலை அருகால் 1கிலோ மீற்றர் தூரமாக இருந்தது. மக்கள் பார்வைக்குட்பட்டு அப்பாதையையே பாவிக்கப்பட்ட பாதை.வெள்ளம் இருந்த இடத்தை மக்கள் சிறு தோணி மூலம் கடந்து சென்றனர். வெள்ளம் வற்றியதும் 1/4 மீற்றர் தூரத்தை வெள்ளத்தில் நடந்து சென்றனர்.

அப்பாதையே எமக்கு அமைத்து தரப்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களை கடிதம் மூலம் எமது கிராம முன்னேற்றச் சங்கம் வேண்டியது முதல் அமைச்சரையும் வேண்டி நின்றோம். எமது கிராமம் மேம்பட பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக அமைத்தல் வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பாகவுள்ளது.

1.பழைய 31/2கிலோமீற்றர் தூர உப்பளஅணைக்கு அதிக நிதியை செலவு செய்யாமல் ஏ9 வீதியில் இருந்து 1.3கிலோமீற்றர் தூரமுள்ள நேரடிப்பாதையை அமைக்க வேண்டும்.

2.மின்சார வசதியும் இவ்வீதியூடாகவே விநியோகிக்க வேண்டும்

3.நீர் வசதியையும் இதே பாதையால் குழாய் அமைத்து பரந்தன் உயர் நீர்த்தாங்கி மூலம் விநியோகிக்க வேண்டும்;.

4.உப்பளவேலைக்கு தொழிலாளியாக ஆட் சேர்க்கும் பொழுது எமக்கு கோட்டா அடிப்படையில் வேலைக்கமர்த்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5.நெற்செய்கைக்கு குளம் தொட்டு வளமாக்கி சிறுபோகச் செய்கைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

திருமதி நிசாந்தன் தசாயினி
கலவெட்டித்திடல், புளியம்பொக்கணை.

அலாரமணி அடிக்கின்றது திடுக்கென்று எழுந்த கமலம் மணிக்கூட்டை பார்க்கின்றாள். காலை 5 மணியைக் காட்டுகின்றது. பறவைகள் உற்சாகமாக தம் ஒளியைப் பரப்பி இரைதேடச் செல்கின்றன. அதே உற்சாகத்துடன் கமலம் எழுந்து குசுனிக்குள் சென்று வாயில் கரியைப் போட்டுக்கொண்டு அடுப்புச் சாம்பலை அள்ளுகின்றாள். சாம்பலையும் கேத்தலையும் எடுத்துக்கொண்டு போய் சாம்பலையும் மண்ணையும் சேர்த்து தேங்காய் தும்பால் மினுக்குகின்றாள். கேத்தல் புளியம்பொக்கணை கோயில் திருவிழாவில் வாங்கிய புதுக்கேத்தல் மாதிரி பழ பழத்தது.

அவ் வீட்டில் தலைவன் சாமி , தலைவி கமலம் அவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் அவ்வீட்டின் மகாலட்சுமிகள் பெண் பிள்ளை இருந்தால் அவ்வீடு இலட்சுமி கடாச்சம் நிறைந்த வீடாக இருக்கும். அதிகாலையிலே படிக்கத் தொடங்கிய மூத்தவள் பார்வதி படிப்பை நிறுத்தி வைத்துவிட்டு காலை கடன்களை செய்ய வெளியே வருகின்றாள். முற்றத்தைப் பெருக்கி தண்ணீர் தெளித்துவிட்டு மாட்டுக்கட்டையடியில் சாணம் அள்ளிவிட்டு மாட்டுக்கு தீனி போட்டு தண்ணீர் வைத்துவிட்டு நேராக கிணற்றடிக்கு குளிக்கச் செல்கின்றாள்.

கமலம் பாலெடுக்க செம்பில் தண்ணீருடன் செல்ல அதற்குள் தோட்டத்தில் நீர் பாச்சிவிட்டு வந்த சாமி தான் பாலெடுப்பதாகக் கூறி செம்பை வாங்கிக்கொண்டு பாலெடுக்கச் செல்கின்றார். கேத்தல் கொதித்து ஆவி தள்ளுகின்றது. அதற்குள் சின்னவள் இலட்சுமியை எழுப்ப அறைக்குள் செல்கின்றாள் கமலம். அப்பொழுதுதான் சோம்பல் முறித்துக்கொண்டு கண்ணை கசக்குகின்றாள். அப்பொழுது சிணுங்கியபடியே அம்மா சனிக்கிழமையாவது கிடக்க விடுங்கோவன். ஏனம்மா இப்ப எழுப்பிறியள். நல்ல பிள்ளை எழும்பி படியுங்கோ. ரியூசன் போகணும். ரியூசன் வேணாம் அம்மா கொலசிப் முடிஞ்சுதுதானே. இவ்வளவு நாளும் ஒரே ரியூசன். ஒரே எக்சாம் நான் இனி 6ம் வகுப்புக்குத்தான் போவேன் ரியூசன் என்கின்றாள் கடைக்குட்டி லக்சுமி. இல்லை பிள்ளை நீங்கள் இரண்டு பேரும் பொம்பிளைப் பிள்ளைகள் நீங்கள் படித்தால் தான் உலகத்தில் வாழ முடியும்.

அந்தக்காலத்தில்தான் பொம்பளைப் பிள்ளையள் பக்குவப்பட்டால் வீட்டை நிக்கின்றது. படிப்பு நிறுத்துகின்றது. இப்ப அப்படியில்லை எல்லாவிதமான துறையிலும் சாதனை புரிய வேணும். அப்படி இருந்தால்தான் காலத்தை ஓட்டமுடியும். நீங்கள் படித்து உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த முயற்சியில் குடும்பத்தை பார்க்க வேண்டும். நல்ல பிள்ளை படியுங்கோ? பிள்ளை அம்மாட்டை நீங்கள் நல்லது கெட்டது இரண்டு விசயங்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். என்ன பிரச்சனை என்றாலும் எனக்கு நீங்கள் தெரியப்படுத்தனும். என புத்திமதிகளை கூறி அன்போடு எழுப்பினாள். தேத்தண்ணி அடுப்பில் பழைய கறிகளை சூடாக்கிவிட்டு கணவன் எடுத்துவந்த பாலினை காச்சி தேத்தண்ணிக்கு எடுத்துக் கொண்டு மீதியை தணலில் உமியையும் போட்டு பாலை ஆடை பிடிக்க விட்டு தேத்தண்ணி யொக்குடன் வெளியே வந்தாள். கமலம் எல்லோரும் தேத்தண்ணியை குடித்து விட்டு இருக்கின்றனர்.

இண்டைக்கு உந்த மோட்டார் சயிக்கிளின் லீசிங் கட்ட வேண்டும். என்ன செய்வதென்று தெரியலை பிள்ளையளை நாங்கள் இவ்வளவு தூரம் என்ன என்று ஏத்தி இறக்கிறது. கட்டாயம் தேவை என்று எடுத்தம் பிள்ளையள் படிச்சால் எங்களுக்கு இந்தக்கஸ்ரம் ஒன்றும் தெரியாது. எல்லாம் கடவுள்தான் என்று கூறியபடியே வேலைக்குச் செல்ல ஆயத்தமானார் சாமி. பொறுங்கப்பா ஒரு பிடி பழஞ் சோறு தாறன் அதை சாப்பிடுங்கோ கையை கழிவிட்டு கறிச்சட்டிக்குள் பழம் சோற்றை பிழிந்து போட்டு உப்புத்தண்ணியையும் விட்டு உறியில் கிடந்த தயிரையும் விட்டு குழைக்கின்றாள் கமலம். வெங்காயப்பொடியுடன் சோற்றுச்சட்டியையும் கொண்டுவந்து திண்ணையிலிருந்து எல்லோருக்கும் திரணையாகக் கொடுக்கின்றாள்.

பழஞ்சோறு சாப்பிட்டால் சொல்லவா வேணும் அன்று முழுக்க ஒரே சோம்பல்தனம்தான் கிடந்தால் எப்படியிருக்கும் எனத்தோன்றும். வீட்டிலை கிடந்தால் கட்டின மனைவியையும் பெற்ற பிள்ளையையும் பார்ப்பது ஒரு வீட்டுத்தலைவனின் பொறுப்பாகும் என நினைத்தவண்ணமே கையை கழுவி விட்டு சயிக்கிளை எடுத்துக்கொண்டு வேலைக்குச் செல்கின்றார் சாமி. படலையடியில் போனபடியே இஞ் சாரப்பா கமலம் பிள்ளைகளை ரியூசன் கொண்டு போகேக்கை கரையாலை அவசரமில்லாமல் நிதானமாக போட்டு வாங்கோ எனக்கூறிய படியே படலையை சாத்திவிட்டு செல்கின்றார். ஓமப்பா என்ற படியே மிகுதி வேலையை பரபரப்புடன் கமலம் செய்கின்றாள்.

நாட்கள் மாதங்களாயின புலமைப்பரிசில் புள்ளிகளும் வெளிவந்தன. சின்னவள் லக்சுமி மாவட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் பாஸ் பண்ணிவிட்டாள். உயர்தரப்பரீட்சை முடிவடைந்தது பெறுபேறுக்கான காத்திருந்தாள் ஆங்கிலம் , சிங்கள வகுப்புகளுக்கு சென்று வந்தாள் மூத்தவள் பார்வதி. வீட்டினுள் அயல் பிள்ளைகளை கூப்பிட்டு ரியூசன் வைத்து அதில்வரும் காசைக் கொண்டு தையலும் பழகினாள். பரீட்சை பெறுபேறு வெளியாகியது. பல்கலைக்கழகம் தெரிவாகவில்லை ஒரே மனச்சோர்வு கல்வியல் கல்லூரிக்குத்தான் பெறுபேறு காணுமென ஆசிரியர் கூறினார்.

கிடைத்ததைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீலீ வாழ்வோம் என எண்ணி மனதை ஒரு நிலைப்படுத்திக்கொண்டு தைத்து ரியூசனும் வைத்து காலத்தை நடத்தினாள். கல்வியற் கல்லூரி நேர்முகத் தேர்விற்கு கடிதம் வந்தது நல்லவிதமாக தேர்வை முடித்து வந்தாள். காலம் உறுண்டோடின ஆசிரியர் சேவையில் இணைந்தாள். தந்தையையும் தாயையும் இரு பெண் பிள்ளைகளும் நன்றாக பார்த்தனர். எத்தனை ஆண் பிள்ளைகள் இருந்தாலும் எவ்வளவு கஸ்ரம் வந்தாலும் பொம்பிளைப்பிள்ளைகள் இருக்கிற வீடு லக்சுமி கரம் நிறைந்த வீடாக இருக்கும். வாழ்க்கையில் கிடைத்ததைக் கொண்டு திருப்தியோடு வாழ்ந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் கையே தனக்கு உதவி

திருமதி யமுணாராணி குலபாலசிங்கம்
கிளி/பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம்.

இன்றைய காலகட்டத்தில் மனோதத்துவ நிபுனர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போமானால் அவமானப்பட்டுவிட்டால் உடனே அடங்கிப் போய்விடக்கூடாது. நாங்கள் அதையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு மனதில் ஒரு வைராக்கியத்தோடு முயற்சி செய்தால் வாழ்க்கையிலே எல்லோரும் முன்னேறலாம் அவமானம் என்பதை நாம் வைராக்கியமாக மாற்ற வேண்டும். அதுதான் வெற்றிக்கு வழிகோலும் நாங்கள் எமது வாழ்க்கைப்பயனத்தில் சில சந்தர்ப்பங்களில் அவமானங்களை சந்தித்தே தீர வேண்டியிருக்கின்றது. என்ன செய்வது எல்லாம் அவன் செயல் குப்பையில் போட்டாலும் குன்றிமணி மங்காது என்பதனை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு செயற்படுவது நல்லது. அவமானப்படுபவர்கள் உடனே அடங்கிப்போவதுதான் உலக வழக்கம். அவமானப்பட்டுவிட்டால் உடனே சீறி எழுகிறவர்களும் உள்ளனர். ஆனால் அதேயே ஒரு சவாலக வைத்துக்கொண்டு சவால்களை எப்பொழுதும் எதிர்கொண்டு சமாளிக்க கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவமானப்படுத்துகிறவன் யார் அவனுக்கு எமக்கும் என்ன தொடர்பு, தகுதி, உறவு, தராதரம், அந்தஸ்து அவர்கள் யாரோ நாம் யாரோ என்ற எதிர்நீச்சல் போட வேண்டும்.

"நுணலும் தன்வாயால் கெடும்" "துள்ளுகிறமாடு பொதி சுமக்கும்" பயப்படக்கூடாது எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே உன்னை இடறவைத்து தள்ளப்பார்க்கும். குழியிலே அத்தனையும் தாண்டி இலட்சியப்பாதையில் தடம் பதிக்க வேண்டும். தடைக்கற்களை படிகற்களாக்கி அலைபாயும் எண்ணங்களையும் நிலையற்ற சிந்தனைகளையும் கொண்ட அழுக்கான மனத்திரைக்கு கடிவாளமிட்டு கட்டுபாட்டிற்குள் கொண்டுவர முனைய வேண்டும். சிறந்த சிந்தனை சக்தியையும் உன்னத எண்ணங்களையும் கொண்ட வெள்ளை உள்ளம் கொண்ட மனிதனாகிய எமக்கு ஒரு இலட்சியம் இருக்க வேண்டும். நேரான பாதையில் மனிதரைக்கொண்டு செல்வது உன்னதமான இலட்சியம் என்பதனை மனதில் ஆழப்பதித்து மற்றவர்களுக்கு வழிகாட்டப் பழகவேண்டும். எண்ணங்களை சிதறவிடாமல் பாதுகாத்துக்கொண்டு உயர்ந்த சிந்தனா சக்தியுடன் கூடிய உயர்ந்த உள்ளம் நிச்சயமாக வெற்றிபெறும். தனியாள் வேறுபாடுகளுக்கமைய ஒவ்வொருவருடைய பண்புகளும் வேறுபடும். வெவ்வேறு வழிகளில் செல்லும் ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டும். நான் யார் என்னால் என்ன செய்ய முடியும் நான் என்னை சார்ந்தவர்களுக்கும் சமூகத்திற்கும் செய்ய வேண்டியவை எவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவனும் தனது விருப்பம் ஈடுபாடு இயல்பு போன்றவற்றிற்கேற்ப பயனற்ற செயல்களை விடுத்து நேர்மையான உயரிய இலட்சியத்துடன் வாழ்வோமானால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

இராமர் இந்தப்பூமியிலே பிறந்ததே ஒரு வைராக்கியம்தான் என்று ஒருவர் என்னிடம் கூறினார். நான் ஏன் என்று அவரிடம் வினாவிய பொழுது அவர் கூறினார் தசரதனுக்கு இராமர் குழந்தையாக வந்து பிறக்கணும் அப்போதுதான் இங்கேயுள்ள கஸ்ரங்கள் எல்லாம் நீங்கும். அப்படி என்றால் சர்வலோகமும் எதிர்பார்த்துக் கொண்டு நிற்கும். ஆனால் அவர் எப்ப வருவார் எப்ப வந்து பிறப்பார் என்பது யாருக்கும் தெரியவில்லை அந்தக்காரியம் சீக்கிரம் நடக்கணும் அதற்கு என்ன செய்வது. நாரதர் ஒரு நாள் தசரதனைத் தேடிக்கொண்டு வந்தார். தசரதன் உனக்கு ஒரு செய்தி தெரியுமா? என்று ஆரம்பித்தார். நாரதர் எப்போதும் இப்படித்தான் ஆரம்பிப்பது வழக்கம் என்ன விடயம் என்று தசரதர் கேட்டார். தசரதா நீ அடிக்கடி உன்னோடை தேரில் ஏறிக்கொண்டு தேவலோகத்திற்கு போகின்றாய் வருகின்றாய் எல்லாம் சரி தேவலோகத்திலும் உன்னை நல்லபடியாய்தான் வரவேற்கின்றார்கள் தெய்வேந்திரன் உன்னை அன்பாக பிரியமாய் அழைத்துக்கொண்டு போய் தன்னுடைய சபையில் தனக்குப்பக்கத்திலே உட்கார வைத்திருக்கின்றார். ஆனால் நீ இங்கே வந்ததற்கு பிறகு அங்கே என்ன நடக்குகிறது என்று உனக்குத் தெரியுமா? என்றார். தசரதர் என்ன நடக்கிறது எனக்கு ஒன்றும் தெரியவில்லையே என்றார். நாரதர் அவருக்கு அருகில் வந்து காதோடை காதாகச் சொன்னார் இதை எங்கள் மூதாதையார்கள் சொல்வார்கள். அவர்களின் பாசையில் பத்த வைச்சார். நீ எங்கே தெய்வீந்திரனிடம் உட்கார்ந்து பேசிவிட்டு வந்த பிறகு நீ அங்கே உற்கார்ந்த அரியாசனத்தை தண்ணீர் ஊற்றி கழுவி சுத்தப்படுத்துகின்றார்கள். நீ என்ன அந்த அளவிற்கு சுத்தமில்லாத ஆளா என்று கூறினார். தசரதனுக்கு இது ரொம்பவும் அவமானமாக போய்விட்டது. அப்படியா செய்கிறார்கள் என்று கேட்டார்கள் நீ வேண்டுமென்றால் நான் சொல்வது உண்மையா இல்லையா என்று சோதித்துப் பார் என்றார்.

உடனே தசரதர் இதற்காக புறப்பட்டு தேவலோகம் போனார். அங்கே வழக்கம் போலவே அவரைக் கூப்பிட்டு உக்கார வைத்து பேசிக்கொண்டிருந்தான் தெய்வேந்திரன். கொஞ்சநேரம் போயிவிட்டு சரி நான் போய் வருகிறேன் என்று புறப்பட்டார் தசரதர். அவனும் வாசல் வழிவரைக்கும் வந்து வளியனுப்பிவைத்துவிட்டு உள்ளே போனார். தசரதன் வெளியே கொஞ் சநேரம் மறைந்திருந்துவிட்டு வந்து மெதுவாக உள்ளே எட்டிப்பார்த்தார் என்ன நடக்கிறது என்று நாரதர் சொன்னது சரிதான் தசரதன் உட்கார்ந்திருந்த ஆசனத்தை அங்கே இரண்டு தேவர்கள் கழுவி சுத்தப்படுத்திக்கொண்டிருந்தார்கள். தசரதனால் பொறுமையாக பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை இந்த செயற்பாட்டை பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகுலைந்து போனாள். அவருக்கு ரொம்பவும் அவமானமாகப் போய்விட்டது. நேராக கிடு கிடு என தெய்வேந்திரன் கிட்ட சென்றார். நான் உட்கார்ந்திருந்த இருக்கையை சுத்தம்செய்கின்றியே நான் என்ன அந்தளவிற்கு பாவியா? என்று கேட்டார். ரொம்பக் கோபமாக தசரதனே மனிதனுக்கு மூன்று கடன்கள் உண்டு. தேவகடன், ரிசிகடன், பிந்துரு கடன் இவற்றை தீர்க்காதவன் பாவியாகின்றான். இதிலே மகனை பெறுவதால்தான் பித்துருகடன் தீரும். உனக்கு மகன் இல்லை அதனாலே நீ பாவியாகின்றாய். பாவி உட்கார்ந்த இடம் என்பதனாலே அதை சுத்தம் செய்ய வேண்டியது எங்கள் கடமை என்றார் தெய்வேந்திரன் இந்த இடத்திலே தசரதருக்கு ஏற்பட்ட அவமானம் மாறி-விட்டது. தெய்வேந்திரரே கேட்டுக்கொள் ஒரு மகனைப் பெற்ற பிறகுதான் இந்த சபையிலே மறுபடியும் அடி வைப்பேன் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். போய் புத்திர காமோஸ்ரி யாகம் செய்தார். புத்திரர்கள் பிறந்தார்கள்

இந்தக்கதையிலே உள்ள கருத்து என்ன வென்றால் தெய்வேந்திரன் தசரதனை அப்படி அவமானப்படுத்தவில்லை என்றால் அவருக்கு இப்படி வைராக்கியம் இருந்திருக்குமா? யோசித்து பாருங்கள் நமக்கு ஏற்படுகின்ற சில அவமானங்களையும் வைராக்கியமாக மாற்றுவோம். வாழ்க்கையில் பெற்றி பெறுவோம் ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையில்லை. விழ்ந்த போதேல்லாம் எழுந்தான் என்பதே பெருமை. நீ என்னவாக வேண்டுமானாலும் இரு உன் தொழில் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும் நீ நீயாக மட்டும் இரு. உன் தனித்துவத்தை எதர்க்காகவும் யாருக்காகவும் இழக்காதே. உண்மையான சம்பவம் தந்தைக்கு உபதேசம் செய்த முருகனைப்போன்று ஒரு ஆசானுக்கு அவருடைய பன்னிரண்டு வயது மகன் கூறுகின்றான். நீங்கள் அம்மா நீங்களாக இருக்கும் வரை உங்களை பல துன்பங்கள் துரத்திக்கொண்டே இருக்கும் என்று கூறினார்.

உள்ளம் தூய்மையாக தெளிவாக உணர்ச்சிபூர்வமாக இருக்கும் போது எண்ணங்கள் ஒளி வீசும் அவ்வேளையில் தான் அன்று மலர்ந்த மலர் போல முகம் மலர்ச்சியடையும் நீ எதை மதிக்கின்றாயோ அது உன்னை மதிக்கும் உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம்வாழ வேண்டும். மற்றவர்கள் பார்த்து பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக்கூடாது. இறந்தும் நாம் வாழ வேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாகவே வரவேண்டும். அறிவு மேலே செல்லச் செல்ல பணிவு கீழ்ப்படிவு வேண்டும். ஒரு நகைச்சுவையான துணுக்கு நிழலல்ல நிஜம் வெள்ளை உள்ளம் கொண்ட மகவு தான் குருவிற்காக ஒதுக்கப்பட்ட ஆசனத்தை தேடியலைந்து கொண்டிருந்த வேளையில் கடவுள் கடாச்சம் பலிக்கின்ற மண்டபத்திலே இருக்கையைக் கண்டு அதனை எடுத்துவரச்சென்றது. அப்போது அந்த மகவின் குருவைவிட மேலானவர்கள் (பதவியில்) இருவர் தமது வேலையில் திளைத்துக்கொண்டிருந்தனர். அப்போது அதில் ஒருவர் கேட்டார் குழந்தாய் ஏன் வந்தாய்? என்று அவர் பொறுமையில் இலக்கணமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுத்துக்கொண்டிருக்கும் பழம் அந்தக் குழந்தை என குருவின் ஆசனத்தை எடுக்க வந்தேன் என்றது. அதற்கு அடுத்த நபர் கூறினார்ஆசனம் இல்லை போ என்றார். அன்றலர் செந்தாமரையின் முகம் வாடிற்று. வாடியிருக்கும் வேதனையில் இருக்கும் குழந்தைக்கு மத்தியில் அவரால் கூறப்பட்ட அடுத்த வசனம் இந்த ஆசனம் அங்கு எடுத்துச் செல்லப்படக்கூடாது. இங்கையே இருக்கட்டும் கொடுக்க வேண்டாம் என்றார். பொறுமையாக இருப்பவர் முகம் கருகிய மலர் தன் குருவிடம் அதனைக் கவலையுடன் கூறியது. அங்கிருந்த ஏனைய பிஞ்சுகளும் வாடிவிட்டன. பிஞ்சுகளின் மனதில் இவ்விடயம் ஆழப்பதிந்து விட்டது. அந்த பிஞ்சுகளின் குரு சிரித்தார் பிஞ்சுகளும் சிரித்தனர். கடும் வெப்பம் வெளியில் செல்ல முடியாது ஒரு பறவை தன் குஞ்சுகளோடு சேர்ந்து உணவு சமைத்து குஞ்சுகளுக்கு உணவு கொடுத்துவிட்டு உடல் சற்று அசதியால் கஸ்ரப்பட்டு கொண்டிருக்கும் போது ஒரு குஞ்சு கற்றாடியை ஓடவிட்டது. அதே ஒரு நொடிப்பொழுதில் பெரிய பறவை ஒன்று பறந்து கொண்டு வந்த வேளை கற்றாடி அசைவதைப் பார்த்து அதன் ஆழியை நிறுத்திவிட்டுச் சென்றது. இது குஞ்சுகளுக்கு உலகம் எப்படி உள்ளது என்று அதிலிருந்து நாம் எப்படி வானில் சந்தோசமாக ஒற்றுமையாக பறந்து வெற்றிநடை போட கற்றுக்கொண்டது. பறவைக்குஞ்சுகளில் ஒன்று மீத்திறன் வாய்ந்தது அது பறவையிடம் கேட்டது ஏன் இப்படியெல்லாம் நடக்குது என்று. அதற்கு பறவை கால் இருந்தால் எல்லாம் நடக்கும் என்றது. ஏனைய குஞ்சுகள் சிரிக்கக் கற்றுக்கொண்டன. இக் கதை போலவே பல நபர்களிடையேயும் மூத்த நபர்களுக்கு மத்தியில் பற்பல மனதைப் புண்படுத்தும் சம்பவங்கள் நிகழக்கூடும். சம்பவங்கள் நிகழும் போது பொறுமை நல்லது. பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார் காடாள்வார் என்று கூறுவார்கள். இன்னும் எத்தனை நாள்தான் இப்படி எல்லாம் நடப்பது அனுபவம்தான் அனுபவம் வெற்றியின் நண்பன்.

மாறிவரும் உலகில் எத்தனையோ சவால்களை எதிர்கொள்ள வேண்டிவரும் பல பல சோதனைகள் வேதனைகள் எம்மை விரட்டும் பயந்து ஓடி விடக்கூடாது. உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது. என்பது வல்லவன் வகுத்தது. வருவதை எதிர்கொள்ள வேண்டும். கடலும் கலங்கித்தான் தெளியும். எமது பயணத்தை இடைவிடாது எமது இளைய சமூகத்தை நல்வழிப்படுத்தும் பாரிய பொறுப்பை இயற்கை எமக்களித்து இருக்கின்றது. இந்த பாரிய பொறுப்பில் இருக்கும் எமக்கு துன்பங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஓடிவிடும். பெரிய மரத்தை சுற்றிய பல்லி பாழ் போகாது. சிறார்களின் நலனில் ஆத்ம திருப்தியோடு பணியாற்றும் பாரிய பொறுப்புக்களில் நிலைத்திருக்கும் எமக்கு எந்த துன்பங்களும் வாட்டாது.

இளம் மொட்டுக்களை மலராக்கி காயாக்கி தீன்சுவை தரும் கனியாக நாம் வாழ்வோம். இறைவன் எமக்கு வழிகாட்டுகூார் எம்மை நேசிப்பவரிடம் மற்றவரை எப்படி அன்பு செலுத்தலாம் என்பதை கற்றுக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். எம்மை வெறுப்பவர் மூலம் நாம் மற்றவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும் என்பதனை கற்றுக்கொள்ள முடிகின்றது. எம்மை அலட்சியம் செய்பவர்கள் அவர்களிடமிருந்து நாம் பிறரை சார்ந்திருக்கக்கூடாது என்பதனையும் கற்றுக்கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவத்தின் மகிமை"

செல்வி நடனவதி முருகேசு
தர்மபுரம் ம.கல்லூரி பிரதி அதிபர்
(ஓய்வு நிலை)

உணர்வுகளை உள்ளபடி வெளியிடும் ஆற்றல் எப்போழுதுமே சொற்களுக்கு வருவதில்லை. தமிழ் முத்தமிழ் வடிவினது. இயல், இசை, நாடகம் என்பவை அவை. முத்தமிழ் மாலை சூட்டி முக்கண்ணன் சிவனையும் அவரது மூர்த்தங்களையும் வழிபடுவார்கள். இசைக்கு வசையாதோர் யாருமில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ வைப்பது ஏழுவகை பிறப்புக்களும், அதாவது மக்கள், தேவர், விலங்குகள், பறவைகள், தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன என்பவை இரசித்து ஆக்கமும், ஊக்கமும் பெறுபவை. கல்விச் செல்வத்தைத் தந்தருள்பவள் கலைமகள் உலகைப் படைத்துக் காக்கும் ஒப்பற்ற இறைவன் பரமேஸ்வரன், பார்வதி சமேதராய் ஈரேழுலகங்களையும் கண்காணித்துக் கொண்டிருகின்றார்.

**"வெள்ளை நிற மல்லிகையோ? வேறெந்த மாமலரோ?**
**வள்ளல் அடியிணைக்கு வாய்ந்த மலரெதுவோ?**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல,**
**உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது"**

மனிதர்கள் வாழ்வதற்காகவே வையத்தில் உதிக்கின்றார்கள். அந்த வாழ்க்கையிலே தான்மட்டும் பயன் கொள்ளாது பிறருக்கும் பயன்பட்டு வாழ்தல் சிறப்பிற்குரியது. உலகை உருவாக்கி உழலவிட்ட ஆண்டவன் அதில் உயிர்களை உருவாக்கி அவற்றிக்கு உணர்வுகளைக் கொடுத்தும், பிணைத்து விட்ட ஆண்டவன் உயிர்கள் பிரிந்து உலகைவிட்டு சென்ற பின்னும் ஏன் அந்த உணர்வுகளை மறக்க பந்தப்பிணைப்புக்களை உடைக்க வழிதராது விட்டார்? வேதனைப்படுவதால் வேண்டுவது கிடைப்பதில்லை. இதனையே சைவசமயம் விளக்குகின்றது. சிவபுராணம் சொல்லும் போது கரங்கள் கூப்பி தொழ வேண்டும். "கரம் குவிவார் உள்மகிழும் கோண்கழல்கள் வெல்க" என்ற பதம் இதனை வலியுறுத்தி நிற்கின்றது. ஈசன் என்ற இறைவன் மனதில் வரவேண்டுமாயின் கற்கவேண்டுமென "கல்லான் நெஞ்சில் நில்லான் ஈசன்" என விழித்துக் கூறியுள்ளது.

**"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"**

தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கிநிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் சந்தோஷத்துடன், துன்பத்தையும் கூடவே கொண்டுவரும். செல்வம்சேரச்சேர, ஆசைகளும் பன்மடங்காகப் பெருகச் செய்யும். சொத்து அனைத்துமே இறைவனின் என்பதை உணரவேண்டும். அவற்றைக் கைவிட்டுச் செல்லத் தயாராய் இருக்க வேண்டும். இதுவே பற்றற்ற வாழ்வு என்கிறது. இறையன்பு இருந்தால் எந்தப்பிரச்சனையும் தொல்லைதராது. விரைந்து செல்லும் முகிற்கூட்டம் போன்று இன்ப, துன்பங்கள் வரும் போகும்; ஆன்மீக நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும். அவை நம்மை புடம் போட்டு நல்லவனாக்கவல்லவை. இறைவன் இல்லாத இடமே இல்லை. காடாயினும், நாடாயினும், ஆறாயினும், மலையாயினும், மலைஉச்சியாயினும், ஆழ்கடலாயினும், எங்கிருப்பினும் இறைவன் காப்பாற்ற ஓடி வருவான். உயர்ந்த செயல் செய்ய இறைவன் இந்தத் தேகத்தைத் தந்திருக்கின்றான். செயல்கள் அனைத்துமே ஆன்மீக சேவையாக வேண்டும். சேவை செய்து அன்புகாட்டி வீடு பேறு பெற வேண்டும். மக்கள் சேவையால் நல்ல கதிக்கு குறைவில்லை பலன்களுக்கு அடிமையானால் என்றுமே விடிவில்லை. ஒரு கல்லை மேலே எறிந்தால் அது கீழேவரத்தான் வேண்டும். அவ்வண்ணமே நாம் செய்பவைகளும் திரும்பி எம்மிடத்தில் வரத்தான் வேண்டும். மாற்றம் என்ற சொல், அழுக்கை அகற்றுவது, புனிதமாக்குவது ஒழுங்கில்லாத பாதையை விட்டு நல்ல பாதைக்கு மாறுவது இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு வருவது இப்படிப்பட்ட பல கருத்துக்களை உள்ளடக்கும். மனிதன் தெய்வீகத்தின் திருமுகம். கடவுள் மனித சமுதாயத்தைச் சீர்படுத்த மனித வடிவில் வருகிறார். தற்பெருமையும் கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் இறையருள் தங்கி நிற்பதில்லை. "என் செயலாவது யாதொன்றுமில்லை" என்றும் கொள்ளை. மனதில் உறுதியாக நிலைக்குமானால், மனிதனுக்கு இந்தப் பிறவியிலேயே முத்தி உண்டாகும். அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும், முத்தியும் கை கூடாது. இதனை அனைவரும் உணரவேண்டும்.

நாம் பெறும் ஒவ்வொன்றும் செல்வமோ, வறுமையோ, நயமோ நட்டமோ, உடல்நலமோ, நமது செயல் அல்லது கன்மத்தினால் கிடைத்த ஆதாயம் ஆகும். அறியாமை காரணமாகவே நாம் நல்லதை கெட்டதாகவும், ஆரோக்கியமான வாழ்வைத் துன்பமானதாகவும் எடுத்துக் கொள்கின்றோம்.

ஆகவே சைவசமயம் ஒரு தெளிவான, மேலே உயர்த்துகின்ற சமயம். எல்லா மனிதர்களையும் நல்லவர்களாகவே கருதுகின்றது. தன்னைப் பின்பற்றுபவர்களுக்குச் சைவசமயம் வழங்கும் உயர்வானதும், மிக எளிமையானதுமான அகிலக்கொடை திருநீறு, சைவனென்று கூறிக்கொள்பவர் ஒவ்வொருவரும் அதை வைத்திருப்பதால் அது அகிலத்தின் சொத்து. அதை அறியாத எவனும் சைவனல்ல. திருநீறு ஆன்மாவுக்கு விடுதலையைக் கொடுப்பதாகக் கூறப்படுகின்றது. (முத்திதருவது நீறு) தயிரில் நெல் இருப்பது போல் திருநீற்றின் மகிமையை உணர்ந்து நல்ல மனதோடு எண்ணங்களின் உறைவிடமான நெற்றியில் அணிய வேண்டும். உரிய முறையில் தெளிவான சிந்தனையோடு அணிவோமாகில், எம்மில் பிழையான விருப்புக்கள், எண்ணங்கள் தலைதூக்காது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அநேகமானோர் படுக்கைக்குச் செல்லும் போது, எழுந்தவுடனும் இறைவனைத் தியானித்து விபூதி அணிந்து கொள்வார். சிவசின்னங்களில் இதுவும் ஒன்று.

முழுமுதற்கடவுளாகிய சிவனை வழிபடுபவன் சைவசமயி. எம்மீதான இறைவனது கருணை எல்லையற்றது. ஆகவே நமக்கு நடப்பன அனைத்தும் எம்மீதான அவனது கருணையை அடிப்படையாகக் கொண்டவையே. ஆகவே பயம், துக்கம், கோபம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இருக்கமுடியாது. புகழ் பொய்யானது. அது அறியாமை-யினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. உண்மைச் சைவசமயி ஒருவனின் வாழ்வு இலட்சியமுடையதொன்று. சைவசமய ஒருவனின் துர்அதிஷ்டம் அவனது சைவசமயம் பற்றிய அறியாமையாகும். சரியைப் பிழையிலிருந்து வேறுபடுத்தும் பாதுகாப்பான வழிமுறையாகும்.

கோவில்களில் நடைபெறும் வருடாந்த மகோட்சவங்கள் அநேக ஆலயங்களில் சரியான மனப்போக்குடன் கொண்டாடப்படுகின்றது. கோவில் சுற்றாடலில் உள்ள மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைகிறது. சமயக்கல்வி வளர வேண்டும். அது இளைஞரையும் முதியவரையும் சென்றடைய வேண்டும். அது சைவப்பாடசாலைகளிலும் கல்வி கற்கும் அதிர்ஷ்டமுள்ள இளம் வயதினரை சுலபமாகச் சென்றடையும். அவ்வாறாயின் மட்டுமே சைவசமயம் தனது எல்லா மேன்மைகளுடனும் ஒளிரும். நாங்கள் இந்தப்பூமிக்கு வந்துள்ள விருந்தினர். சேவை செய்து, அன்பு காட்டி வீடுபேறு பெறவேண்டும். பதவி, அதிகாரம் எம்முடன் வராது. ஆனால் அப்பதவி ஊடாகப் பிறருக்கு அன்புடன் செய்யும் உதவி, புண்ணியம் என்ற உருவிலே வந்து தீரும்.

வாழத் தெரிந்தவனுக்கு வரும் பெரும் சோதனைகள் எல்லாம் வேதனைகள் அல்ல. அது இலட்சியப் பாதையின் விடிவிளக்குகள். விடாமுயற்சியும், குறிக்கோளும் வெற்றிப்பாதையில் முன்னேற, இரு சக்கரங்கள் இல்லையென்று ஒரு போதும் சொல்லாதே. என்னால் இயலாது என்று ஒருபோதும் எண்ணாதே. பள்ளம் நோக்கிப் பாய்வதே நீரின் இயல்பு. ஆனால் சூரியனின் கதிர்கள் அதனை மேலே இழுத்துக்கொள்கின்றன. அதுபோல் மனத்தின் இயல்பும் பலன்வழிச்செல்வதே. ஆனால் இறைவனின் கருணை அதனை மேல்நோக்கி அதாவது, இறைவனை நோக்கி இழுத்துக் கொள்கிறது. இறைவன் எங்கள் முன் ஒளிவடிவமாக இருந்து எம்மை வாழ வைக்கின்றார். ஒளி இல்லாவிட்டால் நாம் வாழ முடியாது. நம் கண்ணுக்குப் பார்வை உண்டேனும், ஒளி இல்லாவிட்டால் பொருட்களைப் பார்க்கமுடியாது. ஆகவே காரியங்களைத் தொடங்கும் போது ஒளி வடிவமாக அவரை மங்கல தீபத்தில் எழுந்தருளச் செய்து வழிபடுவதே மங்கல விளக்கு ஏற்றுவதன் நோக்கமாகும்.

மனிதனுக்கு ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியின் அடிப்படையான இலட்சியமாகும். இவ்வுயிர் இவ்வுலகில் இவ்வளவு நாள்தான் இருக்குமென்பது இறைவனுக்கு மட்டுமே தெரிந்த பரமரகசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முடிசார்ந்த மன்னரும்
மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு
பிடிசாம்பராய் வெந்து
மண்ணாவதுங்கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை
நினைப்பதல்லால் பொன்னின்
அம்பலவர்
அடிசார்ந்தும் நாம் உய்ய
வேண்டும் என்றே அறிவாரில்லையே."

உள்ளத்தில் இருந்து எழுந்த ஒரு சிலவற்றை இங்கு வெளிப்படுத்தியுள்ளேன். எனவே சைவத்தின் மகிமையை அளவிட்டுக் கூற முடியாது, உணர்வு பூர்வமாகச் செயற்படின் ''சைவத்தின் மகிமை'' உலகறியும் "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்றவாறு அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு யாழ்ப்பாண குடிநீர் விநியோகத்திட்டமும் கேள்விக்குறியாகும் யாழ்ப்பாண, கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரமும்

திரு.ரி.நந்தகுமார்
கிராம அலுவலர் பிரதேச செயலகம் கண்டாவளை.

இறைவனால் இயற்கையாக இலவசமாக அனைத்து ஜீவராசிகளுக்கும் வழங்கப்பட்ட நீருக்கு பணப்பெறுமதி இருப்பதாகக் கூறி இதனை பணமாக்கும் திட்டம் அரச அதிகாரிகள் மட்டத்தில் திட்டம் தீட்டப்பட்டு நிறவேற்ற முயற்சிக்கப்படுகின்றது.

பெரும் பணச்செலவில் மேற்கொள்ள முயற்சிக்கப்படும் இத்திட்டத்திற்கு அதிகாரிகளால் சூட்டப்பட்டப் பெயர் "இரணைமடு யாழ்ப்பாணம் நீர் விநியோகத்திட்டம்" என்பதாகும். இதில் குடிநீர் என்ற எந்தப்பதமும் பயன்படுத்தப்படவில்லை.

குடிநீர் விநியோகம் என்பதற்கும் வெறுமனே நீர் விநியோகம் என்பதற்கும் இடையில் பாரியளவிலான வித்தியாசமுண்டு.

நீர் விநியோகம் என்றால் இரணைமடுவிலிருந்து கொண்டு செல்லப்படும் நீரை யாழ்ப்பாண பயனாளிகள் எந்தத் தேவைக்கும் பயன்படுத்த முடியும். உதாரணமாக கார் கழுவுவது முதல் தோட்டப்பயிருக்கு விடுவதுவரை பயன்படுத்த முடியும். குடிநீர் விநியோகத்திட்டம் எனின் குடி நீருக்கு மட்டமே பயன்படுத்த முடியும். யாழ்ப்பாண மக்களுக்கு குடி நீர் பிரச்சனையா? அல்லது நீர் பிரச்சனையா உள்ளது. இரணைமடு விவசாயிகளினால் இரணைமடு யாழ்ப்பாண நீர் வழங்கல் திட்டம் என்பது "குடி" என்ற சொல்லை புகுத்தி இரணைமடு யாழ்ப்பாண குடி நீர் விநியோகத்திட்டம் என மாற்றியமைக்குமாறு முதலில் கோரப்பட்டது. எனினும் அதிகாரிகளினால் முற்றாகவே மறுக்கப்படவே இதன் உள்ளார்ந்த பிரச்சனைகள் தொடர்பாக விவசாய மக்களால் எங்கெங்கோ சென்று ஆராய்ந்ததன்படி பல குழறுபடியான விடயங்களும் இச்சதித்திட்டம் தொடர்பாகவும் அறியப்பட்டதன் விளைவு. இரணைமடு விவசாயிகள் கொதிதெழுந்து பல வழிகளில் போராடினார்கள். இது இவ்வாறு இருக்க குறித்த திட்டம் தொடர்பாக பிரச்சனைகள் பற்றிப் பார்ப்போம்.

முதலில் இத்திட்டம் இரணைமடு விவசாயிகள் மற்றும் பயனாளிகள் எவரினதும் கருத்துக்கள் அறியப்படாமலேயே உருவாக்கப்பட்டதாகும். கிடைக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்திலும் போதிய நேரமின்மை, பேச்சாற்றல் குறைவு, தலமைத்துவ பண்பு நிலை குறைவு, மற்றும் அதிகாரிகளிடமிருக்கும் பணிவு, என்பன காரணமாக இரணைமடுவிவசாயிகளினால் தங்கள் முழுமையான கருத்துக்களை பதிவு செய்ய முடியாமல் போய்விட்டது. இப்பண்பு நிலையை சாதகமாக்கிக் கொண்ட அதிகாரிகள் திட்டத்தை நடைமுறைப்படுத்த முழு வீச்சில் செயற்பட்டார்கள். தண்ணீரை காசாக்குவது எப்படி என்பது தொடர்பாக மட்டுமே எண்ணமாக இருந்ததே தவிர என்னால் கீழே குறிப்பிடப்படும் விளைவுகள் தொடர்பாக கவனம் செலுத்த யாரும் முற்பட வில்லை ஏனெனில் கவனம் செலுத்தும் பட்சத்தில் குறித்த திட்டம் முழுவதுமே பிழையானது என்பது புலப்பட்டு விடும் என்பதேயாகும். இத்திட்டத்தின் விளைவுகளாக ஏற்படக்கூடியன

இரணைமடு நீர்பாசனத்திட்டமானது 1800 களின் இறுதிப்பகுதி திட்டம் தீட்டப்பட்டு 1902ம் ஆண்டு நிர்மானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1920களில் நிறைவுறுத்தப்பட்டது. இத் திட்டமே இலங்கையின் முதலாவது திட்டமிடப்பட்ட நீர்ப்பாசனத்திட்டமாகும். இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது யாழ்ப்பாணத்திற்கான உணவுப்பாதுகாப்பாகும். ஏன் எனில் செறிவான சனத்தொகையைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் நெல் உற்பத்திசெய்யக்கூடிய மூலம் காணப்படாமையாகும். தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கான அரிசி தேவையின் அதிகரிப்பிற்கேற்ப காலத்திற்கு காலம் இரணைமடுக்குளத்தின் கொள்ளவு அதிகரிக்கப்பட்டு நெல் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாணக்குடித்தொகையின் செறிவு கட்டுப்படுத்தப்பட்டு படித்த வாலிபர் திட்டம், கொலணித்திட்டம் என்று குடிப்பரம்பல் செய்யப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. ஆகவே இரணைமடு நீர்பாசனத்திட்டத்தின் அடிப்படை சமன்பாடான உணவுச் சமன்பாட்டை மாற்றி அதிகாரிகளின் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர்சமன்பாடாக மாற்ற முயல்வது யாழ்ப்பாணத்திற்கான உணவு பாதுகாப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் யாழ்ப்பாண எதிர்கால சந்ததியினர் அரிசிக்காக ஏனைய மாவட்டங்களிலும், நாடுகளிலும் முழுமையாக தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதுடன் இரணைமடு விவசாயிகள் இன்னுமமொரு குடிபெயர்வுகளுக்கும் உட்படலாம்.

இரணைமடுக்குளமானது 1920 களில் நிர்மானிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் உணவுத் தேவைக்கமையவும் குடியேற்றத்திட்டங்களுக்கு அமைவாகவும். 1950 மற்றும் 1970 களில் கொள்ளவு அதிகரிக்கப்பட்டது. 1970ற்கு பின் கொள்ளவு அதிகரிக்கப்படவில்லை. ஆனால் நிலப்பரப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன். தற்போதுள்ள 22000 ஏக்கருக்கு மேலதிகமாக 12000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்புகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க வேண்டிய தேவையுள்ளது. தற்போது குளத்தின் நீர் மட்டம் 2 அடியினால் உயர்த்தப்பட்டு அதிகரிக்கப்படும் நீரே யாழ்ப்பாண குடிநீருக்கு பயப்படுத்தப்போவாக அதிகாரிகளினால் கூறப்படுகிக்றது. ஆனால் இவ்விரண்டு அடி அதிகரிப்பானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970களில் விவசாயத் தேவைக்காக திட்டமிடப்பட்டதாகும். இதற்கான ஆதாரம் இரணைமடு குளத்தில் 11 சுழற்சிக் கதவுகள் அமைக்கும் போது 2 அடி மேலதிக உயரத்துடன் அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். எனவே ஏற்கனவே விவசாயத் தேவைக்காக திட்டமிடப்பட்ட நீரை வேறு தேவைக்கு பயன்படுத்துவது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஒட்டுமொத்தமாக பாதிக்கும் என்பதுடன் இம் மட்டத்தின் மேல் இனிவரும் காலங்களில் இரணைமடுக்குளத்தின் நீர் மட்டத்தினை அதிகரிக்க முடியாது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

கடந்த பல தசாப்தங்களாக இரணைமடு விவசாயிகள் தமது நிலப்பரப்பில் 40 வீதத்திற்கும் குறைவான பகுதியில் தான் சிறுபோகம் செய்து வருகின்றனர். பல வருடங்களில் நீரின்மை காரணமாக சிறுபோக செய்கையை கைவிட்டுமுள்ளனர். ஆனால் யாழ்ப்பாண கிளிநொச்சி நுகர்வானது தொடர்ந்து பெரியளவில் அதிகரித்து செல்வதுடன் விவசாயிகளின் குடும்ப எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. இந்நிலையில் சிறுபோக செய்கை விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டு விவசாயிகளின் தனிநபர் வருமானம் அதிகரிக்க வேண்டிய சூழ் நிலை இருக்கும் போது இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தின் நோக்கத்தை மாற்ற முயற்சிப்பது வேதனைக்குரிய விடயமாகும். கடந்த ஒரு நூற்றாண்டில் குறைந்தது 20-----25 வருடங்கள் பெரும்போகமும் நீரின்றி பொய்த்தமை யாவரும் அறிந்த வரலாறாகும்.

யாழ்ப்பாண சனத்தொகையில் அதிகரிக்கும் போதும் அவர்களின் வாழ்வாதாரத்தை நோக்கிய குடிப்பெயர்வானது கிளிநொச்சி நோக்கியே இருந்தது அத்துடன் தற்போது கிளிநொச்சியை அண்டிய ப-குதியில் ஏற்படுத்தப்படும் பௌதீக கட்டுமானங்களான யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீடம், விவசாயப்பீடம் மாங்குளத்தில் அமையவுள்ள வடமாகாண தலைமைச் செயலகம் முன்மொழியப்படுகின்ற வர்த்தக வலயங்கள் என்பவற்றால் எதிர்காலத்தில் சனத்தொகையின் மைய விசைப்புள்ளியாக கிளிநொச்சியும் அதனை அண்டிய பகுதிகளுமே காணப்படப்போகின்றது. இந்நிலையில் கிளிநொச்சியின் வடக்கே ஆனையிறவு, மாங்குளம், கிழக்கே கல்லாறு சுண்டிக்குளம் , மேற்கே பூநகரி உள்ளடங்கிய பெரு நிலப்பரப்பு பிரதேசங்களுக்கு எதிர்காலத்தில் ஒரேயொரு குடி நீருக்கான மூல வளம் இரணைமடுக்குளம் மட்டுமே ஆகும். இப்பிரதேசங்களில் நிலத்தடி நீருக்கான பாறை அமைப்புகளும் சாதகமற்ற நிலையில் காணப்படுவது குறிப்பிடப்படவேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் குழாய் நீர் பயன்பாட்டிற்கு பழக்கப்பட்டவுடன் நிலத்தடி நீரின் பயன்பாடு அற்றுப்போவதுடன் நீர் தட்டுப்பாடும் வறட்சியும் ஏற்படும் போது ஒரே வம்சாவளிகளான எமக்குள் பிரதேச வாத உணர்வுகளையும் உள்ளக முரன்பாடுகளையும் உருவாக்கி வன்முறை கலாசாரத்தை தோற்றுவிக்கலாம் என அஞ்சவேண்டியுள்ளது.

எமது மூதாதையினர் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களிலிருந்து வந்து குடியேறி மலேரியாவிற்கும் காட்டு விலங்குகளிற்கும் இன்னும் பல கொடிய நோய்களுக்கும் தமது உறவுகள் பலரை பறி கொடுத்து தமது கரங்களைக் கொண்டு காடழித்து காலணியாக்கிய வயல் நிலங்கள் இத்திட்டத்தின் மூலம் மூண்டும் புதர்மண்டவிட வேண்டிய சூழ் நிலை உருவாக்கப்படுவதுடன் இரணைமடு விவசாயிகளை மீண்டுமொரு வாழ்வாதாரத்தை நோக்கிய குடிபெயர்விற்கு இந்நிலை இட்டுச்செல்லாம்.

இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் நிறைவேற்றுப்பணியில் பங்கேற்று எமது விவசாய வாழ்வில் ஒளியேற்றியவர்கள் , யாழ்ப்பாணத்திற்கான உணவுப்பாதுகாப்பை உருவாக்கியவர்கள் அன்றைய கிளபொறியியலாளர்கள் இவர்கள் எந்த இனம், எந்த மொழி , எந்த சாதி என்பதைப்பார்க்காமல் ஆதிக்க வாதிகளாக இருந்தாலும் சரி எமர்சன் வீதி, வில்சன் வீதி , கொன்றி பார்க்ர் வீதி , ஆறுமுகம் வீதி , சிவபாதசுந்தரம் வீதி , சில்வா குணசேகரா வீதி, றோஸ் வீதி றொற்றிக்கோ வீதி என்றெல்லாம் எமது பிரதான வீதிகளுக்கெல்லாம் அவர்களின் நாமங்களை வைத்து எமது விவசாயிகள் போற்றி வருகின்றார்கள். ஆனால் இன்றைய அதிகாரிகள் இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் நோக்கத்தையே மாற்ற முயல்வது ஏன்என்று புரியாமல் இருபதுடன் எம்மை மிகவும் வேதனை கொள்ளச் செய்கின்றது.

இரணைமடுக்குளமும் விவசாய நடவடிக்கையும் இல்லாத கிளிநொச்சி மாவட்டத்தை யாராலும் நினைத்து பார்க்க முடியுமா? பச்சைப்பசேல் வயல் நிலக்களை நினைத்துப் பார்க்காமல் யாராலும் இருக்க முடியுமா? யுத்த காலத்தில் இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் உணவுப்பங்களிப்பு எவ்வாறு முக்கியமானதாக அமைந்திருந்தது. மற்றும் 1995ம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது அனைவருக்கும் உணவு வழங்கியது எது? ஏ9 வீதி மூடப்பட்டு கிளிநொச்சி தொடர்பற்று இருந்த போது யாழ்ப்பாணத்தில் அரிசிவிலை என்ன? என்பவற்றை அனைவரும் சிந்திக்கும் படி கேட்டுகு நிற்கின்றோம்.

குறிப்பு: எந்தவொரு பாரிய திட்டத்தின் போதும் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை பெறப்பட வேண்டும். இதன் போது சமூகமட்ட தாக்கம் பற்றி ஆராயப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். சமூக அமைப்புக்கள், மக்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும். மக்களிற்கும், அமைப்புகளிற்கும் பூரண விளக்கம் வழங்கப்பட வேண்டும். ஆனால் இங்கு திட்டம் தொடர்பாக எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

அப்படியானால் யாழ்ப்பாண மக்களுக்கு சுத்தமான குடிநீர் எவ்வாறு பெறலாம்? என்று கேட்கலாம். எமக்குத் தெரிந்த சில மும்மொழிவுகளை நாங்கள் இங்கே தருகின்றோம்.

யாழ்ப்பாண குடா நாட்டில் நிலக்கீழ் அமைப்பானது சுண்ணாம்பு கற்பாறைகளினால் ஆனது இதனிடையே துளைகளின் நீர்க்கொள்ளளவானது பல இரணைமடுக்குளத்தைப்போன்றது எனக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் சராசரி மழை வீழ்ச்சியானது ஆண்டுக்கு 1500 மில்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீற்றர் ஆகக் காணப்படுவதுடன் இதில் சுமார் 30 வீதமான நீரே நிலத்தின் கீழ் உறிஞ்சப்பட்டு சுண்ணாம்பு கற்களுக்கிடையே மீள் நிரப்புகைக்கு உட்படுகின்றது. எமது முன்னோர்களால் பண்டைய காலம் தொட்டு சிறுசிறு குளங்கள், தடுப்பணைகள், உவர் நீர் தடுப்பணைகள் என்பன அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது இவையனைத்தும் பாழடைந்து பராமரிப்பற்ற நிலையில் காணப்படுவதுடன் கடந்த பல தசாப்தங்களாக புதிய சிறுகுளங்கள் அமைக்கப்படவுமில்லை என்பது உண்மையாகும். எனவே யாழ்ப்பாணத்திற்கு வருடம் தோறும் கிடைக்கும் மழை நீர் நிலத்தடி நீராக உச்சத்தன்மையில் மீள்நிரப்புகைக்கு உட்படுத்தும் வகையில் சிறு குளங்கள் மற்றும் தடுப்ணைகள் புனரமைக்கப்படுவதுடன் புதியவையும் அமைக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமான "ஆய்வுகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளும்" மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் மழை நீரின் உச்சப்பயன்பாட்டை பெறும் விதத்தில் யாழ்ப்பாணத்தில் காணப்படும் பொதுக்கட்டிடங்கள், பாடசாலைகள், கோவில்கள் மற்றும் வீடுகள் என்பவற்றின் தேவைக்கேற்ப நிலத்தின் கீழ் மற்றும் நிலத்தின் மேலான மழைநீர் சேமிப்புத்தாங்கிகள் அமைக்கப்பட வேண்டும்.

யாழ் குடா நாட்டிற்கான ஆற்றுத்திட்டம்.

எமது நீரியல் பொறியியல் முன்னோடி எந்திரி உ.ஆறுமுகம் அவர்கள் யாழ்ப்பாண நீர் பிரச்சினைக்கு தீர்வாக யாழ்ப்பாணத்திற்கான ஆறு என்ற திட்ட முன்மொழிவை தந்துள்ளார். (இது சம்பந்தமாக ஆய்வு அறிக்கைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.) இத்திட்டமானது இரணைமடுக்குளத்திலிருந்து கனகராயன் ஆற்றிலிருந்து உபரி நீர், நெத்தலியாற்றின் ஊடாக வரும் நீர், தேராவில் ஆற்றினூடாக வரும் நீர் ஆகியவற்றை ஆனையிறவிலும் சுண்டிக்குளத்திலும் தடுப்பணைகள் அமைத்து ஆனையிறவுக் கடலேரியில் சேகரித்து பின்னர் முள்ளியானூடாக வல்லைவெளி மற்றும் உப்பாற்று வெளி என்பவற்றை உள்ளடக்கி தொண்டமான் ஆறு மற்றும் அரியாலை தடுப்பணை என்பவற்றுடன் இணைத்து பாரிய நீர்த் தேக்கத்தை உருவாக்குவதே ஆகும். இத்திட்டத்தினால் யாழ்ப்பாணத்து நிலத்தடி நீரானது பலமடங்கு மீள்நிரப்புகைக்கு உட்படுவதுடன் வடமராட்சி, தென்மராட்சி பகுதியில் காணப்படும் பல ஆயிரம் ஏக்கர் சதுப்பு நிலங்கள் மற்றும் உவரத் தரைகள் என்பன பயன்பாட்டிற்கு கொண்டு வரலாம் என்பதே ஆகும். அத்தோடு யாழ்ப்பாணத்தின் சுற்றுலாத் துறையில் பாரிய அளவில் முன்னேற்றம் ஏற்படுவதுடன் சுற்றுச்சூழல் நிலைமைகளும் அபிவிருத்தி அடையும். இத்திட்டமானது 1980 களின் முற்பகுதியில் பாரிய அளவில் முன்னெடுக்கப்பட்டு யுத்தம் காரணமாக பின்னர் கைவிடப்பட்ட திட்டமாகும். எனவே இத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து யாழ்ப்பாணத்திற்கான நீடித்த நிலையான நீர்வள அபிவிருத்தியை மேற்கொள்வதே மிகச்சிறந்ததாகும்.

யாழ் - இரணைமடு நீர்விநியோகத்திட்டத்திற்கு பிரதான காரணமாக அதிகாரிகளினால் கூறப்படுவது யாழ்ப்பாண நிலத்தடி நீர் தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசுபட்டு வருகிறது என்பதாகும். இங்கு இம்மாசு எதனால் ஏற்படுகின்றது என்பதை யாரும் சிந்திக்கவில்லை. அத்துடன் அதனை கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள், வரையறைகள், ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்வதற்கு எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை அதிலும் பிரதான மாசுபடுதல் வழியாக கூறப்படுவது யாழ்ப்பாணத்தில் அடர்த்தியான மலசலகூடங்கள் அமைத்தலாகும். இவற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர சட்டங்களில் இடமுண்டு என்பதுடன் பல ஆயிரம் மில்லியன் ரூபாய்களை செலவழித்து இரணைமடு நீரை பெறுவதிலும் பார்க்க கொழும்பில் உள்ளதைப் போல யாழ்ப்பாணத்திலும் பொதுக்கழிவகற்றல் வலையமைப்பை உருவாக்குதல் சாலச் சிறந்ததாகும்.

தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் நெருக்கடியானது 25 வருடங்களின் பின்னரே ஏற்படக்கூடிய நிலை காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. அக்கால கட்டத்தில் கடல் நீரை குடி நீராக மாற்றும் தொழில் நுட்பம் இலகுவாக கிடைத்துவிடும் என்பதுடன் இத்திட்டமே யாழ்ப்பாணத்திற்கான பல ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடித்து நிலைக்கக்கூடிய திட்டமாகும். எனவே இரணைமடு விவசாயிகளாகிய நாங்கள் எதிர்பார்த்து நிற்பது இவ்விடயத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும், மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் ஆரோக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். இதனால் நீண்டகால நோக்கில் பாதிக்கப்படப்போவது யாழ்ப்பாண மக்களும்தான் யாழ்ப்பாணத்திற்கு இலவசமாகவும் இயற்கையாகவும் ஆரோக்கியமான குடிநீர் கிடைக்க பல வழிகளை இறைவன் தந்த போதும் இவ்வாறு இரணைமடுவிலிருந்து நீரை வழங்க முயற்சிப்பது பன்னாட்டு வங்கிகளும் நிறுவனங்களும் கடன் என்ற போர்வையில் நிதியை வழங்கி பின்னர் நீண்டகாலத்திற்கு யாழ்ப்பாண மக்களின் உழைப்பை உறுஞ்சி தங்கள் கயானாக்களை நிரப்பிக்கொள்வதற்கேயாகும். அத்துடன் யாழ்ப்பாணத்திற்கான உணவுப்பாதுகாப்பு அரணை தகர்த்து அவர்களை தங்கி வாழும் நிலைக்கு தள்ளுவதேயாகும்.

எனவே அனைவரும் நன்றாகச் சிந்தியுங்கள்! உணவுப்பாதுகாப்பு வளத்தை பேணுங்கள்! ஆரோக்கியமான குடிநீரை மாற்று வளிகளில் பெற வழி செய்யுங்கள்!

இவ்விடயங்களை எடுத்துக்கூறி அப்பாவி ஏழை விவசாயிகளுக்காவும் விவசாயத்திற்காகவும் பாடுபடுவது பிரதேசவாதமாகுமா? இது பிரதேச வாதமெனில் நானும் பிரதேசவாதியாக இருப்பதால் பெருமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாதக் கவியோசை

யோ.கோபிநாத்
கலைஒளி கலைக்கூடம்
கட்டைக்காடு.

எள்ளி நகையாடி ஏர் பிடித்து பார் கிழித்து
வண்ணக்கோலமிட்டு வரை மணி விதைத்து
பொன்னும் மணியும் பூமியிலே அள்ளி வரும்
வன்னி மண் வணங்கு பெருந்தகை புகழ்பாடு
வளையோசை வாழிய! வரலாறும் வாழிய!

வண்ணக்கவிவடித்து வலையொடு கடல் சுருட்டி
முதுகடல் முக்குளித்து மேவு அலை கரைசேர்
செத்த மீனினமே ஜென்மமறியா சுடுசோறும்
சொதி மீனும் சுவைமீனும் கவிபாடும் கடலோர
அலையோசை வாழிய! வரலாறும் வாழிய!

மெல்லப் பனையேறி மேனி பிழிந்தெடுக்கும்
கள்ளும் கருப்பணியும் சொல்லும் பொருட் சுவையும்
மண் பிழிந்து பண் செதுக்க மண்டியிடும்
கொல்லப்புற குயவனின் சொல்லொடு செயல்பாடு
புகழோசை வாழிய வரலாறும் வாழிய!

நிழல் தரு இடமெலாம் கலைதரு கூடங்கள்
கற்பனைக் கெட்டாத கவி பாடு தண்பதி
நிலைமாறியேனும் பிறழ் வழி போகா கலையொடு கூத்து
ஊட்டி உடல் வளர்த்து விலை ஏதும் போகா
நவ ஓசை வாழிய! வரலாறும் வாழிய!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தனதுள்ளம்

சு.மாதினி
குமரபுரம்

தந்திட்டேன் நான் எந்தன் உள்ளம்--உன்மனதை
தர ஏனோ கள்ளம்

வென்றிட்டேன் என்றுதான் குதித்தேன் -- இன்று
வெறுப்போடு அடியோடு மடிந்தேன்

என் மனக்கடலில் மாற்று உன் வள்ளம் -- அப்போ
எனக்கு கரைபுரளும் ஆனந்த வெள்ளம்

உன் பூவிதழ் செம்பவழ வண்ணம் -- என்
உள்ளமெங்கும் உந்தனது எண்ணம்

வருடமெல்லாம் இதற்காக யாகம் -- இனி
வசதிக்கோ இங்கில்லை என்னது கோசம்

உன்னருகே உடைகிறது எந்தனது ஞாபகம் -- இப்போ
உன் கையில் தான் இனி எந்தனது கோபுரம்

மனிதன் தினமும் அலை புரளும் குமுழியாம் -- அன்பே
மனிதவுடலில் எனக்கு நீ அடி வயிற்றுக் கபடியாம்

சறுக்கி விழும் வெண்பனி உன்முத்தம் -- அங்கே
கண்டதில்லை இப்படியொரு விளக்கம்

நான் உனக்காக என்பதே நிதர்சனம் -- இதில்
கடுகளவில்லை இதில் வேசம்

உன் வழிதேடும் தினம் உன் தரிசனம் -- ஆங்கே
ஊருக்குள் இதைப்பற்றி விமர்சனம்

உன்னை விடுவது இனிக் கனம் -- அன்பே
உயிர் காவுகொள்ளும்வரை வரும் இந்த மனம்

இங்கு வைத்துவிடு என் மீது பாசம்
இல்லையேன் கட்டிடுவேன் கல்லறை வாசம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொல்லைபேசி

றோ.அர்ச்சனன்
மு/விசுவமடு மகாவித்தியாலயம்

கிராணம் கொண்ட கிரகெம் பெல்லே
உன் கண்டுபிடிப்பால் உலகமே உறைந்தது
உலகே உள்ளங்கையில் கொணர்ந்து
புதுப் புது அர்த்தம் படைத்தாய் அவனியில்.......

அல்லலில்லை தொல்லையில்லை
"அன்றோயிட்" அடிமைகள் இல்லை
சுற்றுச் சூழல் பிரச்சனையில்லை
தேவைக்கே தந்தாய் தொலைபேசியை நீ....

தந்தாய்.....! எமக்கு தொலைபேசி தந்தாய்
விந்தையாய் போனதே எம் வாழ்க்கை
வெந்துமே போகுதே நெஞ்சதே
மாய்ந்துமே மயாணம் போகுதே உயிர்களே...

வெப்ப தட்பம் மாறியதே பூமியில்
சின்னஞ்சிறு பறவையினங்களும் ஆங்கே
பூமிப்பந்தில் புது றணகளமாகியதே
ஐயா நீ கண்ட கனவோ இது....

நடைபிணமாகி நடமாடும் மனிதனே
தொலைபேசி சிருஸ்டி கர்த்தா உனை
கோபக்கண் கொண்டு பார்க்கிறான்
உன் போதை கொண்ட தொலைபேசியை நிறுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமித்தாய்

ப.லுக்சிகா
பரந்தன்

வாடாத மலர் ஒன்றாய் என்றும்
கலர் தடவாத நிலவொன்றாய் இன்றும்
வார்த்தைக்குள் அடங்காத கணக்கில்
பார்வைக்குள் மடங்காத குணத்தில்
கல்லாய் மண்ணான தாயவள் மடிக்குள்

வஞ்சனை செய்வோர் பஞ்சமின்றி
தஞ்சம் எய்து கொஞ்சும் மக்களே
மணம் வீசும் மாவுலகில் நீ
பணம் பேசும் மானிடரில் நாம்
போதைவழி போவதேனோ நம்
பாதை வழி தவறுவது தான் பேரோ

நவீன தொழிநுட்பம் நாட்டில்
நன்மையின் தொடர்ச்சியோ காட்டில்
இயற்கை அல்லவோ அன்னை
செயற்கை அல்லவோ சேர்வை

கங்கைத் தாய் அவள் என்ன செய்திடுவாள் பாவம்
மங்கையவள் பாய் விரித்து உறங்கிவிட்டாள் சாபம்
தவறுகளைத் தாங்கிடுமோ இவ்வுலகம்
மாண்டுவிடும் மணித்துளியில் மண்ணுலகம்
பாவிகளின் பாதங்களைக் கழுவும் அவள்
பாடையில் போவாரின் மனங்களைக் கழுவாளோ?

வாடைக்காற்றுக் கொஞ்சம் வீசுகையில்
வாசம் மட்டும் மடியில் ஏந்தி பசுமையாக
வாரி வாரி வழங்குவாள் வாயுவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த விண்ணகமும் வியந்து பார்க்க
காலையில் பூத்த மலரொன்று அன்று
சாலையில் நடக்கும் பெண்ணை இன்று
சாடையாய் பார்த்து சிரிப்பது போல்

சுற்றிவரும் பூமித்தாயே உன்னை
சுட்டெரிக்கும் சூரியனாய் தன்னை
வையத்தில் முத்தமிட எண்ணி
நித்தம் நித்தம் பாதம் பார்க்க பாரினிலே
ஒளிப் பஞ்சம் தீர்க்க உலகினிலே
உன்னைப் பார்க்கும் சாக்கில் வந்து போகிறான்
பூமித் தாயே நீ தூங்கும் நேரம் மட்டும்
புன்முறுவலுடன் தூரச் சென்று மறைந்துவிடுகிறாய்

பூமாதேவியின் கர்ப்பத்தில் இடம்பிடிக்க - அந்த
புனிதமான வட்டநிலா உன் வயிற்றருகில் வந்துசெல்ல
உக்கிரமும் அகங்காரமும் நிறைந்த இந் நாட்டில்
ஆதரவற்ற நிலவை அரவணைக்கிறாய் உன் மார்பில்
ஒவ்வொரு இராப்பொழுதும் தாயாக நீ பூமாதேவியே

நாட்டில் பாவம் நிறைந்ததாலோ - உன்
பாட்டில் சாபம் விடுக்கிறாய் - நம்
நாடே இரத்தப்பலி செய்தாலும்
பாவம் தீர்ந்திடுமோ இவ் உலகினிலே

குழந்தைகள் உன் மடியில் துடிதுடிக்க
பார்த்துக் கொண்டிருக்கும் பராசக்தியே உன்
சாபத்திற்கான விமோசனத்தைத் தா
பாசத்தில் வாழும் பந்தங்கள் பாரில் வாழ
நேசத்தில் விடியலை நோக்கி விழித்தெழுகிறோம்
அன்னையே உன் அன்பு மடியில் வாழ வரம் தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவோரப்பிச்சைக்காரி

து.மோகனசிறி, உமையாள்புரம்

கருத்தமேனி
ஏக்கமே உருவான
குழிவிழுந்த கண்கள்....
எண்ணெயின்றி அள்ளிமுடிந்த
முடிக்குவியல்.....
யாரோ கொடுத்த அளவில்லா
ஒரு சட்டை
அதிலும் நாலந்து கிழியல்கள்.....
செருப்பின்றி தேய்துபோன
சோடிப்பாதங்கள்......
தோழில் ஒரு துணிப்பை....
அவள் அவ்வளவுதான்....

பேருந்து நிலையப்படிகளில்
குடியிருந்தாள்.......

"தம்பி பசிக்கு ஏதாச்சும் சாப்பிட"
இது அவளின் அன்றாட இரப்பு

கள்ளமே இல்லாத அவள் முகம் பார்த்து நானும் ஏதோ
சில்லறைகள் சிலதை வீசத்தான்
செய்கின்றேன்.....

அத்தனை நெரிசல்களுக்குள்ளும்
அவளும் ஓட்டத்தான் செய்கின்றாள்
அவளுக்கான வாழ்க்கையை....

நாளடைவில் எமதூரின்
அடையாளங்களில் ஒன்றாகிப் போனாள்.....

சிலவருடங்களில் எல்லாம்
மாறிப்போச்சு எல்லாம் அவளைத்தவிர....

இளமை முதுமைக்கும்
சட்டை சேலைக்கும் மட்டும்
மாறியிருந்தது அவளில்.....
அந்தச் சேலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது சொல் வெண்முகிலே!

கோ.கேதுஜா
கட்டைக்காடு.

வாடைக் காற்றோடு
வளைந்து செல்லும் வெண் முகிலே!
வானில் செல்லுகையில்
எம்மவரைக் காண்பாயோ!
கண்டால் நான் சொல்லும்
என் கதையை சொல்லிவிடு
கனக்க எம்மண்ணில்
நடக்குது பார் விண்முகிலே!

வன்னி முதல் கொண்டு
வடக்கு கிழக்கெல்லாம்
சின்னம் சிறிசெல்லாம்
சிகரட் அடிக்குது பார்!
சிறியோர் பெரியோரென
சீர்கெட்டுப் போயிட்டுது
எல்லாம் மறந்து சனம்
எப்படியோ நடக்குது பார்!

காதில் குணுக்கொன்று
கையில் பெரும் போணொன்று
கையால் தட்டி தட்டி
கனக்கப் பார்க்குதுகள்
கேட்டால் உனக்கென்ன
கேவலம் கெட்டுப் போச்சு
கேட்பார் இல்லாமல்
கேள் ஊரே நாசமாச்சு

சின்னப் பெண் பிள்ளை
சீராய் திரியேலாது
பள்ளிப் பிள்ளை கூட
பழுதாய் போகுது பார்
அம்மா அப்பா ரெண்டு
கையில் போணுண்டு
இள கணவன் மனைவி என
காலம் கெட்டுப் போச்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இரத்தம்

வேல் நயன்
புளியம்பொக்கணை

வங்கம் சூழ்ந்து பெற்று எடுத்த
தங்க நிகர் அழகு நாட்டில்
பங்கம் விளை வித்தது யாரோ?
அங்கம் இழந்து தவிக்கின்றது தனியே

பித்துப் பிடித்த மத வெறியனே
புத்தன் சிவன் இயேசு அல்லா
இத்தனை மதமும் இருப்பது ஏனடா?
செத்தவர் அனைவரும் மானிடர் தானேடா

உயிர்த்த நாயிற்றில் உயிர் பறிக்க
உனக்கு உரிமை தந்தவர் யாரடா
உயிரை மீதம் கொண்டவர் சிலரோ
உறவை இழந்து தவிக்கிறார் பாரடா

தேடாத விடமது கொண்டவன் உன்னால்
தேடி அழுகின்றோம் குருதியில் உறவை
தேசம் கடந்து வந்தவரும் இங்கு
தேகம் உறைந்து கிடக்கின்றார் சோர்ந்து

வஞ்சம் தீர்க்க குண்டாய் வெடிக்கும்
நஞ்சு கலந்து பிறப்பு எடுத்தவனே
பிஞ்சுக் குழந்தைகள் கண்ணில் தெரிகையிலும்
கொஞ்ச மனமும் இரங்கலையா உனக்கு

யுத்தம் கடந்த பூமியிலும் மீண்டும்
சத்தம் வெடிக்க வைத்தது எதற்கு?
இரத்தம் தெறித்த சுவர்களை பார்க்க
நித்தம் எமக்கு நெஞ்சம் வெடிக்குதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆணவக் கேடு"

ராஜா செல்வநாதன்
முரசுமோட்டை

ஆன்மிகம் தவறிய எதுவும்
அரைகுறையில் அழிந்து போவதே
அவனியில் இங்கு நீதி
அரசியல் பிழைத்தோருக்கு
அறமே கூற்றாகும்
என்பதே அதன் நிஜதி
அறிந்திருந்தும் மனிதன்
அங்குதான் தவறு செய்கின்றான்
ஆணவத்தின் உச்சத்திலே
அவனிடம் சேருகின்ற
அதிகார மமதையிலே
ஆடாத ஆட்டம் போட்டு
அடாவடித்தனங்களிலே
மன்னுயிரை தன்னுயிராய்
மதித்திடாமல்
அன்பு கருணை
அனைத்தும் மறந்து
அழிவின் பாதையிலே என்றும்
அவனின் பயணம்
அறிவின் பாதை என்று
அவனுக்கு ஏதுமில்லை
அறிவுடையோர் உரையையும்
அவன் மதிப்பதில்லை
ஆங்காங்கே சந்தர்ப்பங்கள்
அவனுக்கு இருந்தும் கூட
ஆண்டவனையும் அவன் நினைப்பதில்லை
அர்த்தமென்று எண்ணிய
அனைத்துமே போன பின்பு
ஆண்டவா! ஏன் கை விட்டாய்
என அழைப்பதிலும் அர்த்தமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத வடுக்கள்

டொ.ஜெசி
தருமபுரம்.

காலைக் கதிரவன் மெல்ல எழுந்து ஒளி பரப்ப
மேகக்கூட்டங்கள் மெதுவாய் அசைந்தன அன்று
விடியலுக்கு பதிவாய் காரிருள் காற்றோடு
கரைந்து கொண்டே இருந்தது
பேரிடியாய் ஓர் சத்தம்
என்ன சத்தமென்று எட்டிப்பார்ப்பதற்குள்
எல்லாமே அங்கே முடிந்து போயிற்று

தத்தளிக்கும் உயிர்கள் தண்ணீருக்குள் - அம்மா
என்னைக் காப்பாற்றுங்கள் என்ற அலறல்கள்
அத்தனையும் ஒரு நொடியில் அணைந்து போயின
தாயை இழந்த பிள்ளையும் சேயை
இழந்த தாயும் - உறவை
இழந்த உயிர்களுமாய் அங்கே
அங்கே பல காட்சிகளாய் விரிந்து கொண்டே போனது
இயற்கையின் கோரத்தாண்டவம்
பனையளவாய் எழுந்த தண்ணீர்
பாதம் வரை வந்த போதும் சில உயிர்கள்
இன்னும் பனமரத்தில் தொங்கிய படி
காற்றும் கூட ஒரு கணம் கனத்து நின்றது
கடவுளர் எல்லாம் எங்கே போயினர்
வெறும் கற்கள் மட்டும் கரைசேர்ந்தது - பிணங்கள் போலவே

சில நொடியில் பல ஆயிரம் உயிர்கள்
காவு போனது அன்றைய நாள் - சுனாமியால்
ஆழிப்பேரலையின் அவலங்கள் எம்மிடையே
தந்த வலிகள் என்றும் நெஞ்சோடு கனக்கிறது
அழு குரல்கள் அவலமாகி பல வருடங்கள்
ஆன போதும் நெஞ்சோடு நிறைந்து விட்ட வலிகளும்
மனிதத்தின் உண்மை மாற்றங்களும்
என்றுமே மறக்கப்பட முடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே நீ வாழ்க

இ.மதுரா
தரம் 08, பரந்தன் இந்துக்கல்லூரி.

என்னை கருவாக்கி உருவாக்கி
பத்து மாதம் சுமந்து
இவ் புதிய உலகை பார்க்க வைத்த
தாயே நீ வாழ்க!

அன்பு வற்றிய இவ் உலகில்
வற்றாத அன்பு போல்
பாச மழை பொழிந்த
தாயே நீ வாழ்க!

போலிகள் வாழும் இவ்வுலகில்
ஒற்றை நிஜம் நீ மட்டும்
ஆயிரம் கவலைகளைத் தாண்டி
என்னைச் சுமந்தாயே நீ வாழ்க

மறு ஜென்மம் ஒன்று எனக்கிருந்தால்
உனக்கு செருப்பாக இருக்க ஆசைப்படுகின்றேன்
உன் காலில் மிதிபட அல்ல
என்னை சுமந்த உன்னை ஒரு முறை சுமக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மண்டை மொட்டையானது

கா.பாலேஸ்வரன், கண்டாவளை.

அந்த மாலை வேளையில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளிகள் எல்லோரும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். பொருளாதாரத்தடை அந்த மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டு இருந்ததினால் இயந்திரங்கள் செயலிழந்து போய் மனிதரதும் மாடுகளினதும் உழைப்பே விவசாயத்திற்கு பேருதவியாக இருந்தது. வயலில் வேலை செய்து அலுத்துக் களைத்துவந்த கணேஸ் அம்மா கொடுத்த தேனீரை மடக்கு மடக்கு என்று குடித்து விட்டு குளிப்பதற்கு தயாரான போது படலை திறக்கும் சத்தம் கேட்டு எட்டிப்பார்த்தான். அவனது செல்லம்மா ஒரு புன்முறுகலோடு வந்துகொண்டிருந்தாள். வாங்கோ சித்தியென புன்னகை பூத்த முகத்தோடு வரவேற்றான் கணேஷ். அதுசரி விதைப்பெல்லாம் முடிச்சுப்போட்டியா என்று கேட்டவாறு அருகிலிருந்த திண்ணையில் உட்காந்தாள் செல்லம்மா. ஆமாம் இன்றைக்குத்தான் கடைசி விதைப்பு அதுதான் சுணங்கிப்போச்சு என்று பதிலுக்குச் சொன்னான் கணேஷ். நல்லதாய் போச்சு என்று செல்லம்மா. தம்பி லண்டனில் இருந்து வாறான் கொழும்பிலைதான் எங்கள் எல்லோரையும் கூப்பிட்டுப்பார்க்கப்போறானாம். உன்னையும் கூட்டிவரட்டாம். அதுதான் சொல்லவந்தனான். ஏன் சித்தி இப்ப சமாதானம் தானே இங்கை வரலாம் தானே என்றான் கணேஷ். உது இப்ப முடியுதோ? எப்ப முடியுதோ? இப்படி எத்தனை சமாதானத்தைக் கண்டனாங்கள் என்று குசினிக்குள் தேனீர் ஆத்திக்கொண்டிருந்த தாயார் சரியாய் சொன்னாய் அக்கா என்றாள் செல்லம்மா. அதிகாலையில் வந்த வானில் அவசரமாய் ஏறிப் போனான் கணேஷ். கொழும்பை நோக்கி வான் விரைந்துகொண்டிருந்தது கணேசுக்கு சிங்களம் துப்பரவும் தெரியாது திடிரென்று கயஷ் வான் நின்றது. முறுகண்டிப்பிள்ளையாரை கும்பிடுற ஆக்கள் கும்பிடலாம் என்றான் றைவர். எல்லோரும் வானிலிருந்து மள மள என்று இறங்கினார்கள். கணேசும் இறங்கி ஒரு கற்பூரத்தை வாங்கிக் கொழுத்தி கும்பிட்டு விட்டு முறுகண்டி கச்சானில் ஒரு பையை வாங்கிக் கொண்டு வானில் ஏறி உட்காந்தான் கணேஸ். வான் வேகமாகப் புறப்பட்டது. கொழும்பு செல்லும் புழுகில் எல்லோரும் கும்மாழமடித்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். கணேஸ் மட்டும் அமைதியாக இருந்தான். பொன் விளையும் எங்கள் பூமியெல்லாம் மக்கள் இடம்பெயர்ந்தமையால் மண் மேடாய் மடைக்கிளர்ச்சி எழும்பி நின்றதைக் கண்டு அவன் மனம் மிகவும் வருந்தியது.

வவுனியா நகரை அடைந்ததும் பட்டியில் திறந்துவிட்ட மாடுகள் போல் சாராயக்கடைக்கும் சோடாக்கடைக்கும் உடுப்புக்கடைக்கும் என வானில் வந்தவர்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். இறுக்கமான ஒரு பொருளாதாரத்தடைக்குள் இருந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இவர்களது செயற்பாட்டைப் பார்க்கையில் தெரிந்தது மதிய உணவை இங்கையே சாப்பிடுறது நல்லம். பிறகு சாப்பிடிறது கரைச்சல் என்றான் றைவர். மதிய உணவை முடித்துக் கொண்டு வான் மீண்டும் கொழும்பை நோக்கிப் புறப்பட்டது. கணேஸ் முன்பு ஒரு தடவை கொழும்பிற்கு தன் அண்ணனுடன் எண்பது எண்பத்தொரு ஆண்டு காலப்பகுதியில் வந்திருக்கின்றான். அதற்குப் பிறகு இப்போதுதான் போகிறான் இரண்டாவது தடவையாக கணேசின் அண்ணன் கொழும்பில் வேலை செய்கின்றார். இன்னும் சொல்லப்போனால் அவர் கொழும்பிலேயே வாழ்க்கை அமைத்துக் கொண்டார். ஏழு மணி இருக்கும் ஒரு வீட்டின் அருகே வான் நின்றது. கணேசின் அண்ணன் எல்லோரையும் புன்முறுவலோடு வரவேற்றுக் கொண்டான். எல்லோரும் பெட்டி படுக்கைகளோடு உள்ளே நுழைந்துகொண்டிருந்தார்கள். கணேசின் அண்ணன் மகனான சிந்து கணேசிற்கு அருகில் வந்து சித்தப்பா என்று கையைப் பற்றிக் கொண்டான். கணேஸ் அவனது தலையில் தடவி மடியில் இருத்தி முத்தமிட்டான். சிந்துஜனை கணோசிற்குத் தெரியாது. இப்போதுதான் நேரில் பார்க்கின்றான் கணேஸ். இருந்தாலும் சிந்துசன் நல்ல கெட்டிக்காரன். ஐந்து ஆறு வயதுதான் இருக்கும். எல்லோரிடமும் பயமின்றிப் பழகுவான். எல்லா இடமும் போய் வருவான். அன்று இரவுச்சாப்பாட்டை முடித்துக் கொண்டு எல்லோரும் படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள். அதிகாலை எழுந்து பார்த்ததும் அவன் அன்று பார்த்த கொழும்பிற்கும் இன்று பார்க்கும் கொழும்பிற்கும் வித்தியாசம் இருந்தது. கணேசனின் அண்ணியாரிடம் தேனீரை வாங்கிப் பருகிக் கொண்டான் கணேஸ். கணேசின் அண்ணா வேலைக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். தம்பி ரண்டு மணிக்கு பிளைற் நீ வந்திடுவாயா போறதுக்கு என்றாள் செல்லம்மா. ஆம் ஒரு மணிக்கெல்லாம் வந்துவிடுவன். இல்லையென்றால் இவையளோடை விமான நிலையத்திற்கு வாங்கோ நானும் அங்கை வந்திடுறன் என்றான். எல்லோரும் கட்டுநாயக்காவிற்கு செல்லும் புழுகில்குளிப்பவர்கள் குளிக்கவும் உடுப்பு அயின் பண்ணவும் வீடு அமழி துமளியாக இருந்தது. அப்போதுதான் கணேசிற்கு தலைமயிர் வெட்டி சேவ் எடுக்க வேணும் என்று ஞாபகம் வந்தது. தொடர்ந்து வயல் வேலையில் இருந்ததால் தலமயிர் நன்றாகவே வளர்ந்து இருந்தது. தலைமயிர் வெட்டப் போவதற்கு ஆயத்தமானான் கணேஸ். சிங்களம் தெரியாததனால் அவனுக்குப் பயமாக இருந்தது. இதைக்கண்ட அவனது அண்ணியார். இப்ப போகதேங்கோ தம்பி உங்களுக்கு சிங்களம் தெரியாது அண்ணா வந்ததும் கூட்டிக் கொண்டு போகலாம் தானே பன்னிரண்டு மணியளவில் தொலைபேசி மணி ஒலித்தது. தொலைபேசியை எடுத்தான் கணேஸ் மறு முனையில் கணேசனின் அண்ணன் அங்கிருந்து அவசர மீற்றிங் ஒன்று இருப்பதால் ஒரு மணிக்கு வர முடியாதென்றும் நேரடியாக கட்டுநாயக்காவிற்கு வருவதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைக் கட்டுநாயக்காவிற்கு வரவும் என கூறினார். இதை அண்ணியாரிடம் கூறி விட்டு தலைமயிர் வெட்டப் புறப்பட்டான் கணேஸ். தம்பி கொஞ்சம் நில்லுங்கோ என்ற அண்ணியார் நீங்கள் டவுணுக்கு போக வேண்டாம் இதில் நாலாவது சந்தியில் ஒரு சலூன் இருக்கு அவன் எங்களுக்கு பழக்கம் சிந்துவை அனுப்பி விடுறன் "கொந்தட்ட கொண்டகப்பன்ன" என்று சொல்லுங்கோ அவன் வடிவா வெட்டி விடுவான் என்றாள் அண்ணியார். சிந்துஜன் கையைப் பற்றிக் கொண்டு இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். சிந்துஜன் வாய் ஓயாது அவனது ஊரைப்பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனது கெட்டித்தனத்தை அறிந்து மகிழ்ந்த கணேஸ் அவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சலிக்காமல் பதில் கூறிக் கொண்டு வந்தான். திடீரென சலூனைக் கண்டார்கள். சலூன் வாசலை அடைந்ததும். கணேஸ் தலைமயிர் வெட்டுவதற்கு அண்ணியார் சொல்லித் தந்த சிங்களத்தை மறந்து விட்டான். அங்கு "தாத்தாகே மல்லி" என்று சொன்னான் சிந்துஜன். ஏதோ நினைவிற்கு வந்தவனாய் "தட்டக்கொண்டகப்பனா" என்றான் கணேஸ். ஒரு முறை அவனை ஏற இறங்கப் பார்த்தான் சலூன் காறன். கணேஸ் கதிரையில் போய் அமர்ந்தான் கணேஸ். சிந்துஜனைப் பார்த்து ஏதோ சிங்களத்தில் கேட்டான் அந்த சலூன்காரன். கிளிநொச்சி என்று பதிலளித்தான் சிந்து. அய்யோ வன்னி என்று கணேசைப் பார்த்துச் சொன்னான். இவ் வில்லங்கத்தில் வந்து மாட்டிக் கொண்டோமோ என்று கணேசின் மனம் பதைபதைத்தது. பேசாமல் தலையைக் குனிந்து கொண்டான். குளீரூட்டப்பட்ட அறை என்பதனால் ஒரு வித்தியாசமா இருந்தது. நான்கு புறமும் மின் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. கணேசைப் பார்த்து ஏதோ சொல்லி விட்டு கதிர்காம தெய்யோ என்றான் மயிர் வெட்டுபவன். இவனின் கதை கொடுத்தால் பிரச்சினை என்று ஓ ஓ என்றான் கணேஸ். அந்த சூழ் நிலை அவனுக்கு குட்டித் தூக்கத்தை வரவழைத்தது. அவன் தலைமீது ஒரு இயந்திரம் மயிரைக் கத்தரித்துக் கொண்டிருந்தது. ஒரு பத்து நிமிடத்தில் கண் விழித்துப் பார்த்த போது அவன் மண்டை மொட்டையாக இருந்தது. திடீரென்று நாற்காலியை விட்டு எழுந்துவந்தான் கணேஸ். ஏதோ சிங்களத்தில் சொன்னான் அவன் பக்கத்திலிருந்து 500 ஐ எடுத்து நீட்டினான் வேண்டாம் என்று கையைக் காட்டியவாறு "எக்க சீயாய்" என்றான் சிங்களத்தில் உரத்து. 100 ஐ எடுத்து நீட்டினான் கணேஸ். வாங்கிக்கொண்டான் விறு விறு என்று வீட்டை நோக்கி நடந்தனர். கணேசனின் தலையைக் கண்டதும் எல்லோரும் வாய்விட்டு சிரித்தனர். நடந்ததை சொன்னான் அண்ணியாரிடம் கணேஸ். ஐய்யய்யோ தம்பி கொந்தட்ட கொண்ட கப்பன்ன என்டெல்லோ சொல்லித் தந்தனான். தட்டக்கொண்ட கப்பனா என்றால் மொட்டைதானே அடிப்பான் என்றார் அண்ணியார். தனக்கெடாச் சிங்களம் தலைக்குத்தான் சேதம் என்றார் வானில் வந்த ஒருத்தர். எதுவும் பேசாமல் குளியலறையை நோக்கிச் சென்றான் கணேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ட மரம் தழைக்குமா?

சரவணமுத்து ரங்கநாயகி
குமரபுரம்.

ரமணன் நல்ல விவசாயி அவன் விவசாயத்தை நம்பியே வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தான். குடியிருக்கும் நிலப்பரப்பில் தென்னை, மா, வாழை, கமுகு என்று நிலையான பயிர்களை நட்டதுடன் மிளகாய், கத்தரி, தக்காளி, வெங்காயம் போன்ற தோட்டப்பயிர்களையும் செய்தான். அவரின் மனைவியும் சேர்ந்தே தோட்ட வேலைகளில் ஈடுபடுவதால் கூலிக்கு ஆட்கள் பிடிப்பதில்லை. இருவரும் கஸ்ரப்பட்டு வேலைகளைச் செய்து தோட்டத்தில் கிடைக்கும் மரக்கறிகளுடன் வாழைக்குலைகளையும் அயலில் உள்ள சந்தைக்கு எடுத்துச் சென்று விற்றுக் கொள்வான். விற்ற பணம் முழுவதையும் செலவிற்கு எடுக்காமல் மனைவியிடம் கொண்டுவந்து கொடுப்பான். மனைவி கொடுக்கும் பணத்தை கொண்டு பொருட்களை வாங்கிக் கொள்வான். இவர்களுக்கு மூன்று குழந்தைகளும் உண்டு. பிள்ளைகளும் பெற்றோருக்கு சிறு சிறு உதவிகள் செய்வார்கள்.

பிள்ளைகளின் படிப்புத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வேறு இடத்தில் காணி வேண்டி தோட்டம் செய்தார்கள். தோட்டத்தில் எல்லா விதமான பயிர்களையும் நாட்டி நீர் இறைத்துப் பாதுகாத்து வந்தார்கள். பயன்தரும் வேளைகளில் குரங்குகள் வந்து காய்கறிகளைப் பிடிங்கிகொண்டு போகும். தினமும் குரங்குகளின் தொல்லையால் தோட்டத்தின் பயிர்கள் அழிந்துகொண்டே போகும். மரங்களில் உள்ள இலைகளையும் விடாது பறித்துச் சாப்பிடும். காணிவேண்டி தோட்டம் செய்வதில் எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை கையில் இருந்த பணமும் செலவு செய்ததுதான் மிச்சம் என்று கவலையுடன் தோட்டம் செய்யும் நாட்டத்தையும் கைவிட்டு விட்டான். ஒரு விதத்திலும் வருமானம் இல்லாமல் பிள்ளைகளை எப்படி படிக்க வைப்பது செலவிற்கே கஷ்டமான நிலை குடியிருக்கும் நிலத்தில் நடப்பட்ட தென்னை மரங்கள் காய்க்கத் தொடங்கியது. அதில் பறிக்கப்பட்ட தேங்காய்களை விற்று வீட்டுச் சீவியத்தை போக்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் ஒரு பசுமாடும் கன்றுடன் வேண்டிக் கொண்டார்கள். வேண்டிய பசுவின் பெயர் "செல்லம்மா" செல்லம்மாவின் மகளுக்கு "குசி" என்ற பெயருடன் வீட்டிற்கு வந்தன. செல்லம்மா என்ற பெயருடன் பசு முதல் முதல் வீட்டிற்குந் வந்தது. ரமணன் குடும்பத்தாருக்குப் பிடித்துக் கொண்டது. செல்லம்மாவிற்கும் குசிக்கும் ஒரு வீடு போட்டார்கள். (கொட்டில்) வெயில் மழையில் நனைய விடாது பாதுகாத்து வந்தார்கள். கன்றுடன் வந்தபடியால் மறுநாளே பால் கறந்து "விநாயகப்பெருமானுக்கு" கொடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரில் நல்ல நம்பிக்கை எது செய்தாலும் முதல் அவருக்கே வைப்பார்கள்.

தினமும் செல்லம்மா ஏழு, எட்டு லீற்றர் பாலைக் கொடுத்து வந்தாள். அவ்வீட்டின் கஸ்ரங்களையும் நீக்கினாள். அவர்களும் செல்லம்மாவிற்கு புல்லுகள் வெட்டிவந்து போடுவதும், தவிடு, புண்ணாக்கு , மாம்பழம், வாழைப்பழம் , பலாப்பழம் போன்றவற்றையும் உணவாகக் கொடுத்தார்கள். செல்லம்மா எந்த உணவையும் கழிவில்லாமல் சாப்பிடுவாள் அதனால் அவளை வெளியே விடாமல் அவளைக் கொட்டிலில் கட்டி வளர்த்தார்கள். குசியும் அம்மாவைப் போல எல்லா உணவுகளையும் சாப்பிடுவாள். அதனால் குசியை வீட்டில் வைத்துக்கொண்டு செல்லம்மாவை வெளியில் சென்று மேய்வதற்காக அவிட்டு விடுவார்கள். அவளை அடிக்கடி செல்லம்மா என்றே கூப்பிட்டால் எங்கு நின்றாலும் வந்து விடுவாள்.

செல்லம்மா இரண்டாவது குழந்தையை ஈன்றெடுத்தாள். அவனுக்கு மணி என்ற பெயரும் வைத்தார்கள் செல்லம்மா வீட்டை விட்டு வெளியே போவதில்லை. மணிக்கு அடிக்கடி பாலைக் கொடுத்துக் கொண்டே இருந்தாள். மணி நிறையப் பாலைக் குடித்ததால் மணிக்கு நோய் ஏற்பட்டது. உடனே வைத்தியரை அழைத்து மணியை சுகப்படுத்தி தரும்படி கேட்டார்கள். மணிக்கு ஊசியும் போட்டு மருந்தும் கொடுக்கப்பட்டது. மணி சோர்ந்து விட்டான். மூன்று நாட்களின் பின்புதான் மணி குணமடைந்து பால் குடித்தான். மணி அடிக்கடி பாலைக் குடிப்பதால் செல்லம்மாவை வெளியே அவிழ்த்து மேய விட்டார்கள். தன்பிள்ளைகளை விட்டு தூரப்போய் மேயமாட்டாள். அதனால் அவளுக்கு உணவு போதாமையால் மெலிந்திருந்தாள். ரமணன் இரவு உணவாக தவிடு- புண்ணாக்கு புல்லுகளையும் வெட்டிவந்து கொடுப்பான் குஷியும் மணியும் அம்மாவின் உணவை பங்கு போட்டு சாப்பிட்டார்கள்.

செல்லம்மாவை வெளியே மேய விட்டார்கள் அவள் காலையில் போனால் மாலையில் வீட்டுக்கு வந்து மணிக்கு பால் கொடுப்பாள். தினமும் அப்படியே செய்து வந்தாள் அதனால் றமணன் பசுவை தேடிப்போவதில்லை தொடர்ந்து வரும் செல்லம்மாவை இரண்டு நாட்களாக காணவில்லை. றமணன் மாறி மனைவி மாறி தேடித்திரிந்தார்கள் கிடைக்கவில்லை. மணிக்கு பால் வேணும் பண்ணைக்கு பால் கொடுக்க வேண்டும் என்ன செய்வது தேடித்திரிந்து பிடித்து விட்டான் றமணன். அவள் தண்ணீர் குடிப்பதற்காக ஏனைய மாடுகளுடன் சேர்ந்து குளத்திற்கு போயிருந்தாள். திரும்பிவர பாதை தெரியாமல் அங்கேயே தங்கிவிட்டாள் செல்லம்மா, செல்லம்மா என்று கூப்பிட்டதும் நிமிர்ந்து பாத்து ஓடி வந்து விடுவாள். அன்று வராமல் அடம் பிடித்துக் கொண்டு நின்றது. கயிற்றை போட்டு வீட்டுக்கு கூட்டி வந்தார் றமணன். சிறிது காலம் கட்டியே வளர்த்தார். வெப்பம் வறட்சி காரணமாக செல்லம்மாவை அவிழ்த்து விட்டார்கள். செல்லம்மாவும் தூரப் போகாமல் அடிக்கடி வீட்டிற்கே வந்து விடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் உள்ள பனை மரங்களிலிருந்து பனம்பழம் விழத் தொடங்கி விட்டது. பனம்பழங்களை உண்பதற்காக செல்லம்மாவும் அவளுடைய நண்பர்களும் செல்வார்கள். பனம்பழத்தின் சுவையை கண்டதும் வீட்டில் நிக்கமாட்டாள் செல்லம்மாவை அவிழ்த்து விட்டால் பனைமரம் நோக்கியே செல்வாள். அங்கு படிக்கவரும் பிள்ளைகள் பனம்பழம் எடுப்பதற்காக மாடுகளை தின்ன விடாது துரத்தி விடுவார்கள். மாடுகளும் பயத்தில் வேகமாக ஓடும் அவைகள் ஓடுவதை வேடிக்கையாக பார்த்து ரசிக்கும் பையன்களும் சிலர் இருந்தார்கள் அப்படி அந்த பையன்கள் கலைக்கும் போது அருகில் இருந்த கிணற்றுக்குள் செல்லம்மா விழுந்து விட்டாள். இதனைப் பையன்கள் கண்டும் காணாதது போல ஓடி விட்டார்கள். ஒருவருக்கும் தெரியப்படுத்தவில்லை மூன்று நான்கு நாட்களின் பின் துர்நாற்றம் வீசிய போதுதான் கிணற்றுக்குள் செல்லம்மா விழுந்து இறந்திருப்பதையும் அயலவர்களின் முயற்சியினால் கிணற்றிலிருந்து மீட்டெடுத்து எரியூட்டும் போது தான் ரமணனின் மகள் கண்டு விட்டாள். இது எங்கட செல்லம்மா ஐயோ எங்கட செல்லம்மாவைக் காணவில்லை என்று எவ்வளவு இடம் தேடியது கிடைக்கவில்லையே எங்கட செல்லம்மாவை இந்த நிலையிலையா பார்ப்பது எனது படிப்பிற்கு அவளின் பாலைக் கொடுத்துத்தானே படித்தேன். நான் கொலசிப் பாஸ் பண்ணுவதற்கு செல்லம்மா தானே உதவினாள் என்ர செல்லம்மா என்று அவள் ஓடி வந்து பெற்றோருக்கு கூறி அழுதாள். அவர்கள் சென்று பார்த்தபோது எரியூட்டப்பட்ட செல்லம்மாவை பார்க்க முடியாது தேம்பி தேம்பி அழுதார்கள். செல்லம்மா எண்டைக்கு எங்கட வீட்டுக்கு வந்தாளோ அன்றிலிருந்து எங்கட கஸ்ரத்தை ஓரளவு குறைத்துக் கொண்டாள். அவளின் பாலை விற்றுத்தானே எங்கட பிள்ளைகளின்ற படிப்பிற்கு உதவியது. வீட்டு செலவிற்கும் உதவினாள் என்று அழுதார்கள்.

மகள் குசியும் மகன் மணியும் அந்தக் கொட்டிலில் தனிய இருக்க மாட்டார்கள் என்று தங்களுடைய வீட்டு முற்றத்தில் கட்டி வளர்த்தார்கள். மணி தன் தாயை நினைத்து பாலுக்கு அழுவான் தினமும் அழுதுகொண்டு இருப்பான். இதனால் அவனுக்கு பால் வேண்டி சூப்பிப்போத்தலில் விட்டுக் கொடுப்பார்கள். அவன் குடிக்க மாட்டான். கஸ்ரப்பட்டு பருக்கிவிடுவான் ரமணன். செல்லம்மாவை மறக்க முடியவில்லை எந்தப் பசுக்களைப் பார்த்தாலும் செல்லம்மாவின் நினைவு தான் வரும். வீட்டில் மிஞ்சுகின்ற உணவுகள் கஞ்சி பழங்கள் எல்லாம் கழிவில்லாமல் சாப்பிடுவாள். வீட்டுக்குச் செல்லப்பிராணியாக வந்த செல்லம்மாவின் இறப்பு பொய்யாக இருந்து அவள் மெய்யாகவே வீட்டிற்கு வரமாட்டாளா? என்ற பகல் கனவுடன் தவிக்கும் ரமணனின் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமை தாங்கிய பார்வதி

ப.ஜெயமணி,
கட்டைக்காடு, பெரியகுளம்.

அன்று வெள்ளிக்கிழமை வழமைபோல் கோயிலுக்குச் செல்வதற்கான ஆயத்தத்தை செய்துகொண்டிருந்தாள் பானுமதி. தாய் பார்வதி "பிள்ள நேரத்திற்கு போயிற்று வாவன்" எனக்கூற அவசர அவசரமாக மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு அம்மன் கோயிலை நோக்கிச் சென்றாள். வழியில் ஒருவர் மதுபோதையில் விழுந்து கிடந்தார். அவரைக் கவனிக்காது சென்று விட்டாள் பானுமதி. யாரென்று பார்த்துவிட்டு போகவும் ஆசையாகத்தான் இருந்தது பானுமதிக்கு. இருந்தும் அவர் யாரென்டாலும் எனக்கென்ன? என்று நினைத்துக் கொண்ட கோயில் வாசலை அடைந்தார் பானுமதி. சற்று நேரம் கழித்து போன் ஒன்று பானுவிற்கு அவளின் தாய் பார்வதி அப்பாவை யாரோ மோட்டார் சைக்கிளால் அடிச்சு போட்டாங்களாம். பக்கென்று இருந்தது அவளிற்கு. ஐயோ பார்த்துக்கொண்டு வந்தது என்ர அப்பாவையா? கடவுளே மன வேதனையுடன் இறைவனைக்கூட வழிபாடு செய்யாமல் வீட்டை நோக்கி விரைவாய் வந்தாள். அவ்விடத்தில் அவளின் அப்பாவைக் காணவில்லை. யாரோ ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று விட்டார் போலும். சிறுவயதிலேயே வறுமைகளையும் துன்பங்களையும் அனுபவித்த பானுவும் அவளின் சகோதரிகளும். பானுமதிக்கு இரண்டு சகோதரிகள். அக்கா மேனகா காமென்ஸ் வேலைக்கு போய் குடும்பப் பாரத்தை சுமக்கின்றார். இளையவள் சங்கவி (டிஸ்பென்சரி) பாமசி ஒன்றில் வேலை செய்கின்றாள். கடைசிதான் பானுமதி தந்தை முருகவேல் ஒரு குடிகார மன்னன் என்பதால் அவர்களின் குடும்பத்தில் வறுமை தலைதூக்கியது. இந்த மனுசன் இப்ப ஏன் குடிக்கப்போனது? பார்வதி முணுமுணுத்தபடி அளவில்லாத குடி எங்களுக்கு தலையிடி என்றபடி ஆஸ்பத்திரியை நோக்கி விரைவாகச் சென்றாள்.

அலறி அடித்தபடி பார்வதியோ அங்கும் இங்கும் அலைமோதி திரிந்தாள். சற்றுப் பொறுங்கள் அம்மா என்று சொன்னபடி தாயை சமாதானபடுத்துவதில் பானுமதி ஈடுபட்டாள். அதற்குள் அங்கு வந்த ஒரு தாதி அந்த ஐயாவிற்கு பலமான அடி பட்டிருக்கு என்றபடி அவசர அவசரமாய் அவசர சிகிச்சை அறைக்குள் நுழைந்தாள். பார்வதியோ பாழ்பட்ட இந்த மனுசன யாரோ அடிச்சி விழுத்தி போட்டாங்கள் .கத்தியபடி நின்ற பார்வதியை பாத்து அம்மா இதில நிண்டு கத்த வேண்டாம் என்றபடி ஒரு தாதி;

எத்தனை வறுமைக்குள்ளும் எத்தனை துன்பத்திற்குள்ளும் இந்த முருகவேல் குடிச்சபடிதான். பொறுப்பு என்றால் கொஞ்சமும் இல்லை. இப்ப என்னென்டா பிள்ளையள் ஒண்டும் கரை சேரேல்ல. பொறுப்பில்லாத முருகவேல் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம். வயது வந்த பிள்ளை மூன்றும் வாழாம இருக்கு பாருங்க. கதைத்துக்கொண்டு இருக்கும்போது டொக்டர் வந்து அவருக்கு ஒப்பிரேசன் ஒண்டு செய்யவேணும் என்று சொல்லிக்கொண்டே ஒப்பிரேசன் தியேட்டருக்குள் நுழைந்தார். பார்வதி அம்மாவிற்கு என்ன சொல்வதென்றும் என்ன செய்வதென்றும் தெரியாமல் நின்றார். பார்வதி அம்மாவிற்கு சொந்தம் பந்தம் என்று இஞ்ச ஒருத்தரும் இல்ல. உதவி செய்யவும் உறவினர்களும் இஞ்ச இல்ல. வீட்டுக்கு வீடு சாராயம் காச்சினால் வீதியில விழுந்து கிடக்கதானே வேணும். பக்கத்து கட்டிலில் இருக்கிற பாட்டியும் சொல்லுறா. காமென்ஸ்சுக்கு போன மேனகா ஆஸ்பத்திரியை நோக்கி அவசரமாய் வந்து கொண்டிருந்தாள். எங்கட அப்பாவிற்கு என்ன நடந்தது. ரத்தம் நல்லா போட்டுது என்று டாக்டர் சொல்லி போட்டார் என்று அம்மா பார்வதி சொல்லிக்கொண்டு அழ ஆரம்பித்தார். அழாதையுங்கோ அம்மா அப்பாவிற்கு சுகம் வந்திடும். என்று ஆறுதலான் வார்த்தைகள் கூறினார் சங்கவி. ஒப்பிறேசனை முடித்துவிட்டு டாக்டர் வெளியே வந்தார். அவரைக் கண்டதும் பார்வதி டொக்டர் என்ன பாக்கலாமா என்று கேட்டாள். அவருக்கு கொஞ்சம் ஓய்வு (றெஸ்ட்) எடுக்க வேணும் சுகமாய் வந்திடுவார் என்றார். அவரின் பதிலைக் கேட்ட பார்வதியும் பிள்ளைகளும் அடக்கடவுளே காப்பாற்றுங்கள் என்றனர். பார்வதியின் அயல் வீட்டுக்காரர்கள் முணுமுணுத்தபடி இந்த மனுசன் இப்பிடியே குடிச்சு குடிச்சு குடும்பத்த குட்டிச்சுவராக்கிபோட்டு பொறுப்பில்லாத மனுசன் பிள்ளகுட்டி எண்டு பாராமல் எல்லாம் வித்துச் சுட்டுப்போட்டுது என்றபடி பார்வதியின் பக்கத்து வீட்டுக்கார பொன்னம்மா. குடும்பம் என்றால் சும்மாவா? அக்கறை இல்லாத மனிசன் மற்றும் ஒருவர்.

ஆஸ்பத்திரிக்கு ஏராளமான பணத்தை செலவளிச்ச பார்வதி தன்னிடம் என்னதான் இருக்கிறது பிள்ளைகள் கஸ்ரப்பட்டு உழைச்சு இத மனுசனுக்கு குடிக்கவும் காசு குடுக்கவேணும். குடும்பத்தில கொஞ் சமாவது அக்கறை வேணும். இந்த குடிகார மனுசனுக்கு என்னதான் செய்யுறது. ஆத்திரத்தில் பார்வதி சொல்லிக்கொண்டு இரண்டு நாளா ஆஸ்பத்திரியில இருக்கிறன் பச்ச தண்ணிகூட குடிக்க மனமில்லாமல் பக்கத்து கட்டில்காரருக்கு சொல்லிகொண்டு குமர்பிள்ள மூண்டயும் எப்படி கரைசேர்க்கப்போறேனோ? பெரு மூச்சு விட்டபடி சொல்லிக்கொண்டே இருக்கும் போது டொக்கடர் அங்கு வருகை தந்துகொண்டிருந்தார். எக்ஸ்றே எடுத்து பாத்ததில அவற்ற ஈரலுக்கு கொஞ்சம் பாதிப்பு என்றார். அதைக் கேட்ட பார்வதியும் பார்வதியும் பிள்ளைகளும் கண்ணீர் சொரிய அழுதார்கள். அத்தனையும் குடியால் வந்தவையே எனக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையும் ஔடதமும் ஒரு கண்ணோட்டம்

வைத்திய கலாநிதி தி.குமணன்
பொது வைத்திய நிபுணரும், சிரேஸ்ட விரிவுரையாளரும்
யாழ் போதனா வைத்தியசாலை

சங்க இலக்கியங்கள் முதல் நவயுகப்படைப்புக்கள் வரை முதுமை என்னும் கருப்பொருளை விட்டு வைக்காத கவிஞர்களே இல்லை எனலாம்.

"தொந்தி சரிய, வயிறே அசைய,
நிரைதந்தம் உதிர ஒரு கைதடி மேல் வா,
இருமல் கிண்கிணென துஞ்சு கிழவன்
இவனாரென மகளிர் நகையாடி"

என முதுமையின் கோலத்தைப் சங்கத் தமிழில் எடுத்தியம்புகிறார் அருணகிரியார். இந்தப் பாடலில் திருப்புகழார் சொல்லாமல் சொல்லும் உண்மை என்னவெனில் முதுமையை நெருங்கும் போது ஒருவருக்குப் பல உடல் நல சீர்கேடுகள் தானாவே வந்து சேர்ந்து விடுகின்றன என்பதே ஆகும். அதைவிட ஒருபடி மேல் சென்று முதுமையை ஏளனம் செய்யும் இளமையை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வெளிப்படுத்தியுள்ளார். நோயில்லாத முதுமை ஒரு கொடை என்றாலும் முதியவர் வாழ்க்கையில் பொதுவாக நோயும் மருந்தும் பின்னிப்பிணைந்தே உள்ளன.

நோய் அல்லது ஆரோக்கியமின்மை என்றவுடன் எவர் மனதிலும் உடனே தோன்றுவதெல்லாம் ஔடதம் (மருந்து) ஒன்றேதான். நோயாளி மருத்தவரை நாடி நோய்க்குணங்குறிகளை வெளிப்படுத்தும் போது வைத்தியர் அதற்குப் பரிகாரமாக மருந்தையே பரிந்துரைக்க முனைவர். ஒவ்வொரு முறையும் அந்த நோயாளி மேலதிக நோய் குணங்குறிகளை வெளிப்படுத்தும் போது வைத்தியர் மருந்தின் அளவைக் கூட்டவோ அன்றி வேறுமருந்துகளைப் பரிந்துரைக்கவோ தலைப்படுவார். இது எந்த அளவிற்கு முதியோர்களுக்கு பொருத்தமானது என்ற கேள்வியே முக்கியமானது.

" உற்றான் அளவும் பிணி
அளவும் காலமும் கற்றான் கருதிச்
செயல்"

என்பது வள்ளுவரின் பொய்யாமொழி மருத்துவன் (கற்றான்) நோயாளியின் அளவையும் காலத்தையும் எண்ணிப் பார்த்துப் பொருந்தச் செய்க என்பது இந்தக் குறளின் பொருள்.

ஒரு குழந்தையின் உடற்றொழிற்பாடு எவ்வாறு வயது வந்தவர்களின் உடற்றொழிற்பாட்டிலிருந்து வேறுபடுகின்றதோ அதேபோன்று முதியவர்களிலும் வேறுபடுகின்றது. எனவேதான் முதியோர் மருத்துவம் (Geriatrics) என்னும் தனி மருத்துவத்துறை ஒன்று இன்று முக்கிய வளர்ச்சியை கண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மருத்துவத்துறைசார் ஆராய்ச்சிகள் முதியவர்களுக்கு அல்லது வயோதிபருக்கு மருந்து பரிந்துரைக்கும் போது பின்பற்ற வேண்டிய சில முக்கிய அம்சங்களை நோயாளிகளுக்கும் மருத்துவருக்கும் கோடிட்டுக் காட்டியுள்ளன. அவற்றில் சில முக்கியமான கருத்துக்களை இங்கு உற்று நோக்குவோம்.

ஒரு முதியவருக்கு எந்த மருந்து பரிந்துரைக்கப்பட்டாலும் அந்த மருந்து அந்த நோயாளிக்கு ஏன் வழங்கப்படுகின்றது என்பது தெட்டத் தெளிவாக வைத்தியக்குறிப்பேட்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் அந்த மருந்து ஏன் வழங்கப்படுகின்றது, அதன் விளைவுகள், பக்க விளைவுகள், உபயோகிக்கும் முறை என்பன நோயாளிக்கும் அவரைப் பராமரிப்பவருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும்.

பொதுவாக முதியவர்களுக்கு மருந்து பரிந்துரைக்கப்படும்போது அது மிகக் குறைந்த அளவிலேயே ஆரம்பிக்கப்படுகின்றது. பின்னர் அந்த மருந்தின் அளவு மிகவும் கவனமாகவும் படிப்படியாகவுமே அதிகரிக்கப்படுகின்றது. இதே போன்றுதான் ஒரு மருந்தை தன்னிச்சையாக திடீரென் நிறுத்திக் கொள்ளவும் முடியாது. அதை நிறுத்தும்போது கூட அது படிப்படியாகவே குறைத்துக் கொள்ளப்படுகின்றது. ஒரு மருந்து அதிகரிக்கப்பட முன்னர் அந்த மருந்து நோயாளியால் சரியாக உட்கொள்ளப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கடமை வைத்தியருக்கு உண்டு.

புதிதாக ஒரு மருந்து பரிந்துரைக்கப்படுவதற்கு முன்னர் வைத்தியர் ஏற்கனவே நோயாளி உட்கொள்ளும் மருந்துடன் ஏதாவது தாக்கம் ஏற்படுமா என்பதை அறிந்து பரிந்துரைப்பார். எப்போதும் நோயாளி குறிப்பாக முதியவர்கள் புதிதாக ஒரு நோய் அறிகுறியை வெளிக்கொணரும் போது அது ஏற்கனவே உபயோகிக்கும் மருந்தின் பக்கவிளைவா என்பதை முதலில் பரிசீலிக்க வேண்டும்.

ஒரு மருந்தினால் பயன் ஏதும் ஏற்படாதவிடத்திலும் அல்லது பக்கவிளைவுகள் ஏற்படுமிடத்திலும் அந்த மருந்து நீக்கப்பட வேண்டும். எப்போதும் மருத்துவ குறிப்புககளை நோயாளியோ அல்லது அவரைப் பராமரிப்பவரோ கவனமாக மருத்துவ உதவியை நாடும்போது எடுத்துவர வேண்டும். அந்தக் குறிப்பை ஒவ்வொரு முறையும் நோயாளியின் நோயின் நிலையுடன் ஒப்பிட்டு சரிபார்ப்பது வைத்தியரின் கடமையாகும்.

சில முதியவர்களை வைத்திய பரிந்துரைக்கு மேலதிகமாக மாத்திரைகளை தன்னிச்சையாக உட்கொள்வதுமுண்டு. அப்படியாயின் அது குடும்பத்தவராலோ அல்லது பராமரிக்கப்படுபவர்களாலோ வைத்தியரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். குறிப்பாக தூக்க மாத்திரைகள், வலி நிவாரண மாத்திரைகள், மலச்சிக்கலைத் தீர்க்கும் மாத்திரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனறவறறை முதியோர துஸ்பிரயோகம் செய்வதுண்டு.

எனவேதான் சரியான வைத்தியப் பரிந்துரையின் மூலம் உரிய பயனை அடைய முதியவர்களுக்கும் அவர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவருக்கும் இடையே ஒரு அன்னியோன்னியமான உறவு இருக்க வேண்டும். ஆகக்குறைந்தது மருந்துகளின் மூலம் சுகம் கிடைக்காவிட்டாலும் பக்கவிளைவுகள் ஏற்படாமல் பார்த்துக் கொண்டாலே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகையின் இராணியான துளசிச் செடியின் மகத்துவம்

திருமதி பிறேம்குமார் ஷயந்தினி
பட்டதாரி பயிலுனர்
பிரதேச செயலகம் கண்டாவளை.

நமது முன்னோர்கள் நோய்களை குணப்படுத்த பல்வேறு வகையான மூலிகைகளை பயன்படுத்தினர். அம் மூலிகைகளுள் இலகுவாக எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய மூலிகைகளாக துளசிச் செடியும் காணப்படுகின்றது. இந்துக்கள் இதை வீடுகளில் வளர்த்து பூசிக்கும் வழக்கத்தை கொண்டிருப்பதால் அநேகமான வீடுகளில் வளர்க்கப்பட்டு வருகின்றதைக் காணலாம். கற்பூர வாசனை கொண்ட இலைகளையும் கதிராக வளர்ந்த பூங்கொத்துக்களுடனும் காணப்படும் செடியாகும். நீர் வசதியுள்ள குருமண் மற்றும் செம்மண், வண்டல்மண், களிகலந்த மணற்பாங்கான இருமண் மற்றும் 6.5- 7.5 வரையுள்ள கார அமிலத்தன்மை கொண்ட 25C -35C வரையான வெப்பம் கொண்ட காலநிலை தன்மை கொண்ட பிரதேசங்களில் சிறப்பாக வளரக்கக்கூடியது. இச் செடியானது துளாய், துலவம், மாளலங்கள், சிறு துளசி, இராம துளசி என பல பெயர்களால் அழைக்கப்படுவதுடன் இதில் நல் துளசி, கருந்துளசி, செந்துளசி, கல்துளசி, முள் துளசி, நாய்துளசி, காட்டுத்துளசி எனப் பலவகைகள் உண்டு.

இதன் தாயகம் இந்தியாவாகும். தமிழகம் எங்கும் தானாகவே வளர்கின்றதுடன் இலங்கை அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளிலும் வளர்ந்து காணப்படுகின்றது. எளிதாகக் கிடைக்கக்கூடிய துளசியின் மகத்துவங்களே ஏராளமானது. இச் செடியின் அனைத்துப் பாகங்களும் மருத்துவக் குணங்கள் கொண்டவையானதால் ஆயுள் வேத மருத்துவத்தில் பெரிதும் பயன்பட்டு வருகின்றது. தென்னிந்தியாவில் எமக்கு ஏற்படும் ஆரோக்கிய பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் நோக்குடன் வீடுகளில் கட்டாயம் வளர்க்கப்படும் ஒரு செடியாக துளசிச் செடி முக்கியம் பெறுகின்றது. காய்ச்சல், தொண்டைப்புண், தலைவலி, கண்பிரச்சனை, வாய் பிரச்சனை, இதய நோய், சளி, இருமல், நீரிழிவு, சிறுநீரகக் கற்கள் மற்றும் மன அழுத்தம் போன்ற நோய்களுக்குரிய நிவாரணியாக அமைகின்றது. அதாவது காய்ச்சல் காணப்படுகின்ற போது துளசி இலை வாயில் போட்டு மென்று விழுங்கும் போது காய்ச்சல் குறைகின்றது. தொண்டைப்புண் ஏற்பட்டால் துளசியை நீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து அன் நீரால் வாயைக் கொப்பளித்தால் தொண்டைப்புண் குணமாகி விடும். துளசி இலை ஊற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த நீரை தொடர்ந்து பருகி வந்தால் நீரிழிவு நோய் எம்மை நாடவே நாடாது. எமது உடலில் வியர்வையினால் ஏற்படும் துர்நாற்றத்தை போக்க நாம் குளிக்கும் நீரில் முதல் நாளே கொஞ்சம் துளசி இலையைப் போட்டு வைத்து அந் நீரில் குளித்து வந்தால் வியர்வை நாற்றம் நீங்கி உடல் புதுமணம் வீசும். வெயில் காலங்களில் வரும் தலை வலிக்கு சிறந்த நிவாரணி துளசியாகும். துளசியிலையை அரைத்து சந்தணப் பொடி கலந்து நெற்றியில் பத்துப் போட்டு வந்தால் தலைவலி குறைவதுடன் உடல் சூடும் குறைக்கப்படுகின்றது. தோலில் பல நாட்களாக சொரி சிரங்குகளை இல்லாமல் செய்ய முடியும். துளசி இலையை நன்கரைத்து எலும்பிச்சம் சாறு விட்டு அவ் விழுதை நன்கு தோலில் தடவி வந்தால் சொறி, சிரங்கு சொல்லாமல் பறந்துவிடுமாம் என்பது முன்னோர்கள் கருத்தாகும். கண்களில் ஏற்படும் புண் மற்றும் அரிப்பு எரிச்சல் என்பவற்றுக்கு கருந்துளசி இலைச்சாற்றினை கண்களில் ஊற்றினால் விரைவில் குணமாகி விடும். சிறு நீர் கோளாறு உடையவர்கள் துளசியின் விதையை நன்றாக அரைத்து உட்கொண்டு வந்தால் குறைவடையும்.

துளசியிலையை மென்று இதன் சாற்றினை தினமும் விழுங்கி வந்தால் சளி இருமல் சம்மந்தமான வியாதிகள் எம்மை அணுகாது தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் துளசி இலையை மென்று சாப்பிட்டு வந்தால் உடலின் இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்பட்டு இதைய நோய்கள் வராது தடுக்கப்படும். இவ் இலையானது மன அழுத்தம், நரம்புக்கோளாறு, ஞாபகசக்தியின்மை, ஆஸ்துமா போன்ற நோய்களையும் குணமாக்கும் சக்தி கொண்டது. அதிலுள்ள அடாப் டோயன் எனும் பொருள் மன அழுத்தத்தை குறைக்கின்றது. துளசி இலைச்சாற்றில் தேன் கலந்து குடித்து வந்தால் சிறு நீரகக்கற்கள் மற்றும் சிறு நீரகப்பாதையில் தொற்று இருந்தால் விலகிவிடும். துளசிச் செடியை ஆரோக்கியமான மனிதன் தினமும் உண்டு வந்தால் உடல், வயிறு , வாய் தொடர்பான பிரச்சனைகளும் அவன் வாழ் நாள் முழுவதிலுமே அவனை அணுகாது. ஜீரண சக்தி மற்றும் புத்துணர்ச்சியையும் பெற்றுக்கொள்ள முடியும். மொத்தத்தில் எமது உடலுக்கான கிருமிநாசினியாக நாம் துளசியை உட் கொள்ளலாம். எனவே நாமும் துளசிச் செடியை வளர்த்து எமக்கு ஏற்படும் ஆரோக்கிய பிரச்சனைகளுக்கும் தீர்வு காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சித்தர்களும் அவ்வழி மருத்துவமும்"

திரு.ந.சிவசுப்பிரமணியம்
வாணிவைத்திய நிலையம், விசுவமடு.

பண்டைக்காலத்தில் காடுகள் மலைகளில் திரிந்து பலநூறு ஆண்டுகள் நோய்நொடியின்றி வாழ்ந்தவர்கள் சித்தர்கள் இவர்கள் மெய்யறிவான ஞானத்தை உணர்ந்தவர்கள். தாங்கள் பெற்ற இன்பத்தை இவ் வையகம் பெற வேண்டும் என்று விரும்பியவர்கள்.

"சித்தனே திருவாயலவாய் மேவிய
அத்தனே அஞ்சல் என்றருள் செய்"

என்று ஞானசம்பந்தப் பெருமான் பாடியதையும் உணர வேண்டும் பத்தராய் வாழ்ந்தவர்கள் பின்னர் சித்தராயினர். தெய்வத்தை வணங்கி தெய்வத்தன்மை படைத்தவர்கள் சித்தர்கள். இவர்கள் சாதி மத வேறுபாடற்றவர்கள். பிற உயிர்கள் மேல் அக்கறை கொண்டவர்கள். இவர்களின் சமுதாயப் பணியினை மூன்று பெரும் பிரிவுகளில் கூறமுடியும்.

மருத்துவம்
சோதிடம்
ஆன்மிகம் ஆகும்.

தொன்மையான நாகரிகங்களில் ஒன்றான திராவிட நாகரிகத்தின் வளர்ச்சியினிடையே தோன்றிய மருத்துவ முறையே "ஆயுள்வேத சிறந்த மருத்துவம்" இவை முதலில் செவி வழியாக பரவி பின் சித்தர்களால் வளர்க்கப்பட்டு பின்பு அந்த மருத்துவம் யோகா ஞான வர்ம வாத முறைகள் கல்வெட்டுக்களிலும் ஓலை சுவடிகளிலும் பல்வேறு நூல்களாக வெளிவந்தன. தற்போதும் பல நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இம் மருத்துவம் நாட்டுப்புற மருத்துவம் வீட்டு வைத்தியம் பாட்டி வைத்தியம் பரம்பரை மருத்துவம் என பலவாறு அழைக்கப்படுகின்றது இம் மருத்துவர்கள்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்பதையே வாக்காக கொண்டு வாழ்ந்தார்கள்.

சித்தர்களில் முதல் சித்தர் என்று போற்றப்படுகின்ற சிவனிடமிருந்தே (இறைவன்) தோன்றியதாக பாடல்கள் அறியப்படுகின்றது. இந்த மருத்துவத்தை ஆரம்பித்தவர்கள் பின்பற்றியவர்கள் சித்தர்களே. இவர்கள் மருத்துவ முறைகள் மட்டுமன்றி யோகம் ஞானம் சோதிடம், மைனையடி சாஸ்திரம், வான சாஸ்திரம், நோயின்றி வாழும் முறைகள் போன்ற பல அரிய நூல்களையும் ஆக்கி சமூகவியல் சிந்தனைகளிலும் சிறப்பித்து விளங்கினார்.

இதனையே திருமூலர்

"மறுப்பது உடல் நோய் மருந்தென வாகும்
மறுப்பது உளநோய் மருந்தென சாதும்
மறுப்பது இனி நோய்வராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே"

இம்மருத்துவம் மக்கள் நோயுற்ற போது அதனை தீர்ப்பதோடு நின்று விடாமல் நோய் வராமல் காப்பதும் சிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறது.

மேலும் பச்சிளம் குழந்தைகள் இளம் குழந்தைகளுக்கு ஏற்ற பக்கவிளைவுகளற்ற மருத்துவ முறையில் சிறந்தது இம் மருத்துவ முறைதான். இந்த மருத்துவ முறையில்தான் நோயை தொடக்க நிலையிலேயே மருத்துவம் செய்து குணப்படுத்த முடியும் வயது முதிந்தவர்களுக்கான பக்க விளைவுகள் அற்ற மருத்துவமும் நோய் வராமல் காக்கும் யோக முறைகளும் அடங்கியது இம் மருத்துவத்தின் தனிச் சிறப்புக்களாகும்.

உணவையே மருந்தாகக் கொண்டு உணவில் மாறு பாடுகளும் அதன் அளவும் தன்மையுமே பெருமளவு நோய்களுக்குக் காரணம் என்பதை உணர்ந்து உணவுக்கு பெரும் முக்கியத்துவம் தந்தவர்கள் சித்தர்கள் ஆவார்.

பொது மருத்துவம் மட்டுமின்றி பழைய காலத்திலேயே அறுவைச் சிகிச்சையிலும் சிறந்து விளங்கிய அகத்தியர், தேரையர், நாதமுனிவர் போன்றவர்களின் பங்கு இவ் வைத்தியத்தின் மணி மகுடம் போன்றதாகும்.

"கண் காசம்" என்னும் கண்புரை நீக்கும் அறுவைச் சிகிச்சை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும் "விலிசம்" என்னும் கருவியைக் கொண்டு சிகிச்சை செய்த முறையை நாத முனிவரின் நயன விதி என்ற நூல் மூலம் அறியமுடிகின்றது.

உடலில் உள்ள சீழ்க்கட்டிகளையும் ரத்தக்கட்டிகளையும் (LEECH) என்று சொல்லப்படும் தட்டைப் பூச்சியைக் கொண்டு குணப்படுத்தியுள்ளனர். பவுத்திரம் (FISTULA) நோய்க்கு கலிநூல் (திரிவைத்தல்) சிகிச்சை முறையில் அறுவை சிகிச்சை செய்து குணக்கடுத்தியுள்ளனர்.

உலகை அச்சுறுத்தி வரும் எயிட்ஸ் நோயில் இருந்து நோயாளியை பெரிதும் காக்கும் தன்மையுடைய மருந்துகள் சித்த மருத்துவத்தில் உள்ளன என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

ஆரம்ப நிலையில் உள்ள புற்று நோய்கள் மார்புக் கட்டிகள் கருப்பை புற்று ரத்தப்புற்று போன்ற நோய்கள் குணமாக்குவதில் இம்மருத்துவம் சிறந்து விளங்குகின்றது.

யோகம் பயின்று அறிவு நிரம்பியவர்கள் சித்தர்கள் இவர்கள். எண்வகை சித்திகளில் பலவற்றைப் பெற்றவர்கள். இவர்களின் சித்திகளைப் பற்றி "தாயுமான சுவாமிகள்" பின்வரும் பாடல் மூலம் குறிப்பிடுகின்றார்.

"கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்
ஒரு சிங்கம் முதுகின் மேல் கொள்ளலாம்
கட்செவி எடுத்துக் ஆட்டலாம்
வெந்தழலின் இரதம் வைத்து ஐந்து உலோகத்தையும்
வேதித்து விற்று உண்ணலாம்
வேறொருவர் காணாது உலகத்து உலவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சாந்தமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்திலும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல் மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்"

இவர்கள் வாழ்க்கை அனுபவங்களில் கண்டறிந்த உண்மைகளைப் பாடலாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியவர்கள் எளிமையான பேச்சுவழக்குச் சொற்களால் நாட்டுப்புற பாடல்கள் வடிவில் நூல்கள் இயற்றியுள்ளனர். சித்தர்கள் பதினென் பல்வேறு காலங்களில் வாழ்ந்தவர்கள். "அகத்தியர்" இவர்களில் தலைசிறந்தவர் சோழர் காலத்திலும் கி.பி 10ம் நூற்றாண்டில் மிகுதியாக வாழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. அகத்தியருக்கு வயது எத்தனையெனில் அதனைக்கூற இயலாது. யாராலும் முடியாது. "அ" காரம் என்கின்ற அட்சரமே அவரால் உண்டாக்கப்பட்டதாகும். சித்தர் எழுதிய நீதி நூலான பெரும் காவியங்களின்படி அவர் நான்கு யுகங்களையும்கடந்து வந்த சித்தராவார். பிரபல்யமான சித்தர்களுள் ஒருவரான தேரையர் அகத்தியரின் மாணவராவார். நோய் அணுகா விதி போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். இவரது மாணவரான யூகிமுனி "வைத்திய சிந்தாமணி" நூலை இயற்றியுள்ளார். இடைக்காடர் சிறந்த கைரேகை சாஸ்திர வல்லுநர் என்று போற்றப்படுகின்றார்.

மனித உடம்பின் தோற்றத்தையும் பயனற்ற தன்மையையும் குறித்துப் பின்வரும் பாடல் கூறுவது

"ஊத்தை குழிதனிலே மண்ணை எடுத்தே உதிரம் புனலிலே

உண்டை சேர்த்தே வாய்ந்த குயவனார்

பண்ணுபாண்டம் வரை ஓட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே"

அகப்பேயச் சித்தர் மனதின் அலைச்சலுக்குப் பேயின் அலைச்சலை ஒப்பிட்டவர் குதம்பைச் சித்தர் பெண்ணை குதம்பாய் என்று விளித்துப் பாடியவர் அவரின் மறை பொருளில் அமைந்த பாடல்

உள்ளங்கால் வெள்ளெழும்பு ஆகத் திரியினும்

வல்லலைக் காணுவையோ? -குதம்பாய் வல்லலைக் காணுவாயோ?

அழுதினிச் சித்தர் உள்ளத்தை உருக்கும் பாடல்கள் பாடியவர் இடைக்காட்டுச் சித்தர் பசு மேய்க்கும் இடையர்கள் பசுவைப்பார்த்துக் இடையர்களின் தலைவனைப் பார்த்தும் பாடும் முறையில் பாடல்கள் பாடியுள்ளனர். கடுவெளிச்சித்தர் மறைபொருள் மிக்க பாடல்கள் இயற்றியுள்ளார் சிவபாக்கியர் இக்காலத்தை சார்ந்தவர். தாயுமான சுவாமிகளால் பாராட்டப்பட்டவர் மக்கள் வாழ்க்கையை விளக்கும் இவரது பாடல்.

"நட்டகல்லை தெய்வம் என்று நாலு புஸ்பம் சாத்தியே

சுற்றி வந்து மொனமொனைந்து சொல்லும் மந்திரம் ஏதடா?

நட்ட கல்லும் பேசுமோ? நாதன் உள்ளிருக்கையில்

சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?

இவர்கள் மட்டுமல்லாது இவர்களை சார்ந்த கோடான கோடி சித்தர்களும் உடலை காயகற்பம் செய்துகொண்டு பலநூறு ஆண்டுகள் வாழ்ந்தவர்களே எனலாம். அகத்தியர் நூறு வகையான கற்பங்களையும் நந்தீசர் நூறு வகையும் போகநாதர், நாற்பத்திநான்கு கற்ப வகைகளையும் சட்டைமுனி இருபத்தொரு வித கற்பத்தையும் கொங்கனவர் பதினெட்டு விதமான கற்பங்களையும் உண்டுள்ளனர் என்பதைப் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது. இவர்கள் மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேக சித்தர்களும் காயகற்பங்கள் உண்டு வாழ்ந்துள்ளனர். இவர்களில் யார் எத்தனை வயதுவரை வாழ்ந்தார்கள் என்று போகர் தனது நூலில் காலங்கி நாதருக்கு வயது மூவாயிரத்திற்கும் அதிகமாகும் என்று தனது பெரு நூலில் குறித்துள்ளார். நேறியான யோக ஈனத்துடன் இவ்வுலகில் வாழ்ந்து சமாதிக்குச் சென்றார் என இப்பாடல் விளக்குகின்றது. காயகற்பங் கொண்டு பச்சமுனி முன்நூறு ஆண்டுகள் பக்தி நெறியுடன் வாழ்ந்துள்ளார். சட்டைமுனி எண்நூறு ஆண்டுகளும் தன்வந்திரி எண்நூறு ஆண்டுகளும் வாழ்ந்து சமாதி கொண்டுள்ளார். இரசாயனச் சேர்க்கையின் மூலம் கிடைக்கும் மருந்துகளை விட தாவரங்களின் இயற்கையான மருந்துகள் மேலானவை பன்மடங்கு உயர்ந்தவை என்பதை இன்று மேல்நாட்டவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். வைத்திய முறையில் முன்னோடியானது "சித்த வைத்தியம்'' என்பதற்குச் சங்ககால நூல்களே சான்றுபகர்கின்றது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஒளி விருதுபெறும் சான்றோர்



திரு.வீரகத்தி இராஜகுலசிங்கம்
முரசுமோட்டை



திரு.இராசதுரை சண்முகநாதன்
கண்ணகிநகர்



திரு.அப்பாக்குட்டி ஐயம்பிள்ளை
பெரியகுளம்

## கதிர் ஒளி விருது



திரு.நசரேனு றொபேட் நிக்சன்
கோரக்கன்கட்டு

## இளங்கலை ஒளி விருது



திரு.யோகநாதன் தர்சன்
கோரக்கன்கட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## Kilinochchi Palm Development co-operative society (Ltd)

A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.



கோணாவில் போத்தல்கள் உற்பத்தி நிலையத்திற்கான பொறித்தொகுதி கையளிப்பு நிகழ்வு 04.08.2019 ல நடைபெற்றது. மொத்தபெறுமதி 10.20 MN ஒதுக்கீடு

**கலந்து கொண்டவர்கள் சிலர்**

| | |
|---|---|
| சுந்தரம் அருமைநாயகம் | (அரசாங்க அதிபர் அவர்கள் மாவட்டச்செயலகம் கிளிநொச்சி) |
| V.சிவஞானசோதி | (செயலாளர் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சு) |
| சிவஞானம் சிறீதரன் | (பாராளுமன்ற உறுப்பினர். தமிழ்தேசியக்கூட்டமைப்பு) |
| சி.முத்துக்குமாரு | (தலைவர் கிளி/ப.தெ.வ.அ.கூ.சங்கம்) |

பதநீர் உற்பத்திக்கான பொறித்தொகுதி கையளிப்பு நிகழ்வும் இதே தினத்தில் நடைபெற்றது இதற்கான மொத்த பெறுமதி 5 MN (ஒதுக்கீடு)




மரநடுகை திட்டத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org